

செ. யோகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுடம் போற்றுதும்

UNIVERSITY OF PERADENIYA
3-7-1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுடம் போற்றுதும்

UNIVERSITY OF PERADENIYA
3-7-1995
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

464377

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால் நூற்றாண்டுக் கதிகமாக
தமிழ்ப்படைப்பிலக்கியத்
துறையை வளப்படுத்திவரும்
செ. யோகநாதனின் குறுநாவல்களும்,
சிறுகதைகளும் இந்தத்
தொகுதியில் அடங்கியுள்ளன.

மானுட மேன்மையே இவரது
எழுத்தின் ஆர்வமும் ஆசையும்.
சிறுகதை, குறுநாவல், நாவல்,
நவசினிமா, குழந்தை இலக்கியம்
என்ற துறைகளில் இவரது
பங்களிப்பு, அழுத்தமும் ஆரோக்கியமும்
விதைப்பது.
மொழி பெயர்ப்பில் ஆர்வம் கொண்டதால்
குழந்தைக் கதைகளோடு,
கவிதைகளும் புதுப்பார்வையான
கதைகளும் தமிழுக்கு வருகை தந்தன.

இலங்கை, தமிழக அரசுகளின்
விருதுகள்பெற்றவர். ஜெர்மன்,
ரஷ்ய, ஆங்கில மொழிகளில் தன்
கதைகளால் அறிமுகமானவர்.

எட்டுமொழிகள் பேசுகின்ற குழந்தை
எழுத்தாளர்கள் பங்குகொண்ட
மகாநாட்டில் (1989) தமிழக
அரசின் பிரதிநிதிகளில் ஒருவராக
பெங்களூரில் கலந்துகொண்டு கட்டுரை
சமர்ப்பித்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்னும் இரண்டு நாட்கள்**
கதைகள் : **செ. யோகநாதன் (C)**
பதிப்பாளர் : **ராகவராஜ்**
**மானுடம் போற்றுதும்**
48, ஏரிக்கரைத்தெரு, மேற்கு மாம்பலம்
சென்னை-600 033
அச்சுப்பதிவு :
துர்க்கா தேவி பிரிண்டர்ஸ்
13, குமரன் காலனி, சென்னை-15.
விலைரூபா : பதினான்கு

**அட்டை ஓவியம் : கே. எம் ஆதிமூலம்.**

முதற் பதிப்பு : 1989
First Edition : 1989

PRICE : Rs : Fourteen
'ENNUM IRANDU NADGAL'
A Collection Of Stories in Tamil
By : SE. YOGANATHAN (C)
Published By : RAHAVARAJ

MANUTAM POTTRUTHUM
48. Lake View Road, West Mambalam
Madras-600 033.
Printed At :
Durghaa Devi Printers
13, Kumararn Colony, Madras-15

Cover Design By : K. M. ATHIMOOLAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் இரண்டு நாட்கள்

செ. யோகநாதன்

மானுடம் போற்றுதும்

நல்ல நூல் வெளியீட்டகம்
48, ஏரிக்கரைகரைத் தெரு,
சென்னை-33.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

164377

# செ. யோகநாதனின் படைப்புக்கள்

**கதைகள் :**

யோகநாதன் கதைகள்
கண்ணீர் விட்டே வளர்த்தோம்
தேடுதல்
அண்மையில் ஒரு நட்சத்திரம்
அந்திப் பொழுதும் ஐந்தாறு கதைகளும்
அவளுக்கு நிலவென்று பேர்,
கனவு மெய்ப்படும்
இன்னும் இரண்டு நாட்கள்

**குறுநாவல் :**

ஒளிநமக்கு வேண்டும்
காவியத்தின் மறுபக்கம்
கனவுகள் ஆயிரம்
இரவல்தாய்நாடு
காணிநிலம் வேண்டும்
தலைவர்கள்
கேட்டிருப்பாய் காற்றே
சுந்தரியின் முகங்கள்
இனிவரும் வசந்தங்கள்
காற்றினில் ஏறி விண்ணையும் சாடலாம்

**நாவல் :**

ஜானகி
அசுரவித்து

**குழந்தை இலக்கியம்**

குழந்தைகள் கதைக் களஞ்சியம்
சூரியனைத் தேடியவன்
காற்றின் குழந்தைகள்
சின்னஞ் சிறுகிளியே
தங்கத்தாமரை
நான்கு நண்பர்கள்

**சினிமா :**

பெண்களும் சினிமாவும்
சார்லிசாப்ளின்- கலையும் வாழ்வும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

சொல்வதற்கு விஷய மிருந்ததால், எழுதுகிறேன் என்றார் கார்க்கி. தோழர் செ. யோகநாதனிடம் அதிக மான விஷயங்கள் இருக்கின் றன; அழகோடு சொல்லவும் அவரால் முடிகிறது. நமக்குக் கிடைத்த நல்லனவற்றை நாட்டுக்கும் தரும் ஆவலில் தான் மானுடம் போற்றுதும் என்னும் நிறுவனத்தை ஏற் படுத்தி, அதன் முதன் வெளி யீடாக தோழரின் இந்த நூலை உருவாக்கியுள்ளேன்.

மானுட மேன்மையைப் போற்றும் உன்னதங்கள் அத்தனையையும் இந்த நிறுவனம் தொடர்ந்து வெளிக்கொணரும். எனது வேட்கைக்கு இசைவு தந்து ஒத்துழைத்த தோழர் செ. யோகநாதன், முகப்பை அழகுபடுத்திய ஓவியர் திரு. ஆதிமூலம் ஆகியோருக்கு நன்றி.

—ராகவராஜ்

UNIVERSITY OF PERADENIYA LIBRARY
3-7-1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது கதைகளில் . . .

புதிய பத்திரிகை ஒன்றிற்கு பொறுப்பான நண்பர் ஒருவர், பிரபல்யம் வாய்ந்த எழுத்தாளர் ஒருவரிடம் கதை கேட்டுச் சென்றிருந்தார். பத்திரிகையில் யார்யாரெல்லாம் எழுதுகிறார்கள் என்று கேட்டார் அந்தப் பிரபலம். நண்பர், நானும் பிரபஞ்சனும் அந்தப் பத்திரிகையில் எழுதுவதாகக் கூறினார். கூறியதுதான் தாமதம், பிரபலத்திற்கு கோபம் தாளவில்லை... ''அவங்க பேனா எடுத்தா எதையாவது தாக்கித் தானே எழுதுவாங்க... போய்யா போய் அவங்ககிட்டேயே மாட்டரை வாங்கிக்கோ...'' என்றார். பிறகு என்ன நடந்ததென்பதல்ல விஷயம்.

இந்தப் பிரபல எழுத்தாளர் போல, வணிக ரீதியான இதழ்களில் நிறைய எழுதி, கழுத்திலும் கைகளிலும் தங்கமாக மின்னுகிற பலரும் நம்மை இப்படியே விமர்சிப்பதை நாம் அறிவோம். இதற்கான காரணம் தனிமனிதக் குரோதமோ விரோதமோ அல்ல. உண்மையில் இந்த மனோநிலை தத்துவரீதியான ஒன்றேதான்.

கலாசாரமும், வாழ்வும் சீரழிந்து மானுட மேன்மைகள் சிதைவுறுகிற காலம் இது. கட்டுமானமே, இவ்விதம் ஆன சமுதாய அமைப்பில் — அதன் சீரழிவோடு கை கோர்த்து செல்வமும் செல்வாக்கும் சேர்க்கின்ற கூச்சநாச்சமற்ற சீரழிவு இலக்கியவாதிகள், மானுட மேன்மை கருதுகிற எந்தக் கலாச்சார அணியையும் மூர்க்கமாக எதிர்த்து, விமர்சித்து நிற்பார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதில் அதிசயமென்ன? கொச்சை யாயும் பச்சையாயும் எழுதுகின்ற இவர் களுக்கு உண்மைசுடும். உயர்ந்த சொற் கள் கரிப்பாகும். மேன்மை நெறிகள் தீயாய் வருத்தி வதைக்கும்.

அதனாலேயே எம்மை இவர்கள் கலகக் காரராகக் காண்கிறார்கள். விமர்சிக்கிறார் கள். திட்டுகின்றார்கள். கலகம் செய்தல் தவறென்று அகிம்சா பிரகடனம்செய்கிறார் கள். ஆனால் கலகம் செய்வது நியாயமா னது; தேவையானது என்றுநாம் அடித்துச் சொல்கிறோம். ஏனெனில் கலகம் அழகை விதைக்கும். நியாயத்தை நிலைநிறுத் தும். உண்மையைத் தலை நிமிர்த்தும். உலகிற்கு நிம்மதி தரும். இதனால் தான் நமது ஆசான் மார்க்ஸ் 'கலகம் செய்' என்று கூறினான்.

என் கதைகள் இதை முழுமையாக வழி மொழிந்து, வழிகாட்டுமெனில் நான் பெருமையும் பெருமிதமும் கொள்வேன்.

மானுட மேன்மையை முன்னெடுக்கிற பிரகடனமாய், மானுடம் போற்றுதும் பதிப் பகத்தை ஆரம்பித்து, இதன் முதல் வெளி யீடாக என் தொகுதியை வெளியிடுகின்ற தோழர் ராகவராஜிற்கு என் நன்றி. இந்தக்கதைகளை வெளியிட்ட குங்குமம், குங்குமச்சிமிழ், அலைகள், ராஜம் ஆகிய பத்திரிகைகளுக்கு என் நன்றிகள் உரியன. ஓவியர் திரு. ஆதிமூலம் எனது எழுத்தை மேலும் மிளிரவைக்கிறார். அவருக்கு நன்றி சொல்லல் சரியான பெறுமானம் அல்ல. என்றே நான் நினைக்கின்றேன்.

ஜூன் 1989 செ. யோகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியர் கே. எம். ஆதிமூலம் அவர்களுக்கு,

அன்புடன்.

உள்ளே...

இன்னும் இரண்டு நாட்கள்,

கீதம் இனிய குயில்,

அவளும் அவனும்,

இறுதியில் அப்படித்தான்,

ஒப்பனைகள்,

புற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் இரண்டு நாட்கள்

UNIVERSITY OF JAFFNA LIBRARY 1995

இன்னமும் பொழுது விடியவில்லை. எத்தனை மணி ஆகியிருக்கும் என்று கூடத் தெரியவில்லை. அறை முழுதும் இருள் செறிந்திருந்தது. கண்கள் மெது மெதுவாக இருளுக்குப் பழக்கம் கொண்டதின் பிறகு ஆனந்தனுக்கு அறையின் பொருட்கள் இலேசான கருந்திரையுள் தெரிந்தன. கட்டிலில் புரண்டு படுத்தான். சுவர் விசாலமாய் பரந்திருந்தது. சுவரைப் பார்த்துக் கொண்டு கிடப்பது அந்த இருளிலும் அவனுக்கு வெறுப்பை அளித்தது. மீண்டும் புரண்டு படுத்தான். இரவில். வெளியே நிலவும் சத்தங்களை வைத்து எழுந்தமானமாக நேரத்தை தெரிந்து கொண்டு விடலாம். சற்று நேரம் வெளியோசைகளில் லயிக்க முயன்றான். இருளைப்போலவே அசைவற்ற மௌனம். நிச்சயம் அதிகாலை நாலு மணியாகி இருக்காது. இரண்டிலிருந்து மூன்றுமணிக்குள் இருக்கலாம். மௌனத்தை சின்னஞ்சிறு ஓசைகூட நகங்கொண்டு கீறாத பிசிறற்ற வேளை. நேரம் என்னவென்று சரியாகத் தெரிந்து கொள்வதில் சிரமம் என்ன? கைக்கடிகாரத்தைப் பார்த்தால் போதும். கைக்கடிகாரத்தைப் பார்க்கலாமே என்று மனது கூறியதும் வறட்சியோடு சிரித்தான். கைக்கடிகாரம் பார்க்க வேண்டுமானால் ஜெயின்லாலிடம் போகவேண்டும். அவனிடம் கடிகாரத்தை அடமானம் வைத்து இந்த ஏழாம் திகதியோடு ஐந்து மாதங்கள் முடிந்து விட்டன. நானூறு ரூபாவுக்கு வைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி அதை ஆயிரம் ரூபா கொடுத்து வாங்கினாள். அவனது பிறந்த தினமான அக்டோபர் முதலாந்திகதி யன்று அவனது கையில் கட்டி விட்டாள். சிறுகச்சிறுக சேமித்த பணத்தில் வாங்கியது. புன்னகையே மொழி யாய் திகழ்கிற அவளது முகத்தை அவன் நெகிழ்வோடு பார்த்தான். கண்களில் அவனையறியாது நீர்த்திரை பொட்டென்று விரிந்தது. சர்ரென்று கிழிந்து கண்ணீராய் துளும்பிற்று. உதடுகள் நடுங்கின.

''என்ன?'' என்றாள் பரிவோடு. என் மனதை உடனேயே அவள் படித்து அறிந்திருப்பாள். அதைப் பேசாமல் விடுவதிலும் சந்தோஷமிருந்தது. பெருமையிருந் தது. எனவே அதைப் பற்றிப் பேசாமல். ''பிடித் திருக்கிறதா?'' என்று கேட்டாள். அவன் இலேசில் உணர்ச்சி வசப்பட மாட்டான். நெகிழ்ந்து கலங்க மாட்டான். என்றாலும் இத்தகைய விஷயங்களின் போது மட்டும் கலங்கிப் போய் விடுவான். தேவி அவனது கன்னத்தைத் தொட்டாள். ''என்ன... பேசுங்க'' என் றாள். ''இதெல்லாம் இப்போ அவசியமா?'' என்றான். அவள் புன்னகையோடு ''அவசியந்தான்'' என்றாள்.

தேவி இப்போது என்ன செய்து கொண்டிருப்பாள்? தூங்கிக் கொண்டிருக்கலாம். பகலெல்லாம் பம்பரமாய் சுழல்கிற வேலைகள், அவளுக்கு. குழந்தைகளை பள்ளிக் கூடத்திற்கு அனுப்பி விட்டு மீண்டும் வீட்டு வேலைகள் செய்வாள். மாலையில் மீண்டும் வேலைகள்... பதினொரு மணியாகும் படுக்கைக்கு போக. ஒரு நாளில் கூட பிரிவின் வேதனை குறித்து அவளது கடிதங்கள் பெருமூச்சு விட்ட தில்லை. பிரிவென்றால் வெறும் நாட்களா. பாலை வனப் பெருவெளியாய் நீண்டு கழிந்து போய்விட்ட ஐந்து ஆண்டுகள். ஆனந்தனின் விழியோரம் மெலிதாய் நீர் வரி யிட்டு வழிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிலில் இருந்து எழுந்து உட்கார்ந்தான். ஜன்னலுக்கு வெளியே வெளிச்சத்தோடு குரல்களும் முளைத்துக் கொண்டிருந்தன. மௌனத்தைக் கீறிற்று தெய்வேந்திரனின் குரல். ''என்னை விட்டிடுங்க. விட்டிடுங்க.'' தெய்வேந்திரனின் தீனமான குரல் ஆனந்தனின் நெஞ்சைத் தொட்டது. எழுந்து அவனருகே சென்றான். தோளில் தட்டி, ''தெய்வா... சத்தம் போடாதே'' என்று வாஞ்சையான குரலிலே கூறினான். கனவிற்கும் நனவுக்குமிடையே ''ஆ ஆ'' என்று முனகியவாறே அவன் புரண்டு படுத்தான். தெய்வேந்திரனின் மனதில் பட்ட இந்த வடு என்று ஆறுமோ என நினைத்தவாறே கவலையோடு அங்கிருந்து எழுந்தான் ஆனந்தன். இரவில் அடிக்கடி புலம்புகிற பழக்கம் தெய்வேந்திரனுடையது. பிறவிப் பழக்கமல்ல. இலங்கையில் இருந்தபோது ஒருமுறை இராணுவம் அவனை சந்தேகத்தின் பேரிலே அழைத்துச் சென்றது. இரண்டு நாட்களின் விசாரணைக்குப் பிறகு அவன் பேதலித்துப் போன முகத்தோடு வெளியே வந்தான். சிரிக்கப் பயந்தான். உட்கார அஞ்சினான். சுவர்க் கடிகார ஓசைக்கே நிமிர்ந்திடத் தயங்கினான். அவனோடு போன கணேசன் மனநோயாளியான செய்தியினை அறிந்ததும் அவனது தகப்பனார் அவனை அங்கிருந்து இங்கே அனுப்பி வைத்துவிட்டார். ஆறு மாதங்களாகியும் தெய்வேந்திரன் இன்னமும் சுயநிலைமைக்கு வரவில்லை. ஆனாலும் முகத்திலே புன்னகையை வரவழைத்துப் பேசக் கற்றுக் கொண்டு விட்டான் தெய்வேந்திரன்.

தெய்வேந்திரனின் அண்ணன் செல்வேந்திரன் எல்லா விதங்களிலும் தம்பிக்கு நேர் எதிரானவன். மல்யுத்த வீரனைப் போன்ற தோற்றம். புன்னகை அறியாது இறுகிப் போன முகம். எவரையும் சுட்டெரிக்கின்றாற் போன்ற கூரிய பார்வை. அதிகம் பேசினால் பத்து வார்த்தைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வீட்டில் நாங்கள் நால்வர் வாடகைக்கு குடியிருக்கிறோம். நான்காவது ஆள் சகா. தற்செயலாக வீதியில் அறிமுகமாகி இப்போது எங்களில் ஒருவனாகி விட்டவன். அவனது சொந்தப் பெயர் என்னவென்று எங்களில் யாருக்குமே தெரியாது. அதைப் பற்றி அறிய நாங்கள் யாருமே ஆர்வம் கொண்டதில்லை. ஒவ்வொரு வேளையும் ஒவ்வொரு பெயர் சொல்லுவான். அவனுக்கு நான் வைத்த பெயர் சகஸ்ர நாமம். அந்தப் பெயரையும் சகா என்று அவன் சுருக்கி, அதுவே இப்போதைக்கு அவனது பெயராகி விட்டது. அவனுக்குப் பிரியமானதும், பிரியமே இல்லாததும் தூக்கம் ஒன்றுதான். தூங்கினானென்றால் கும்பகர்ணன் கெட்டான்.

இலங்கையிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்து ஐந்து வருடங்களாகி விட்டன. நான்கு வீடுகள் மாறியாகி விட்டது. இந்த வீடு வசதியானது. ஏகாந்தமானது. பெரிய நிலப்பரப்பின் முன்புறத்தில் சுற்றி நாற்புறமும் மதில் சூழ்ந்த வீடு. வீட்டின் முன்புறம் பச்சைப் பசே லென்ற பூச்செடிகள், வண்ண மலர்கள் சூழ்ந்த வடிவழ குடன். சகாதான் தோட்டக்காரனும். ஆண்டுதோறும் தடையில்லாது தண்ணீர் கிடைக்கும். எந்நேரமும் குளுகுளு வென்று ஓடிவருகிற இனிய காற்று.

வெளியே நணநணவென்று கதம்பமான ஓசைகள். குருவிகளும் காகங்களும் சோம்பல் முறிந்து குரலிட்டன. ஜன்னல் வழியாக சிவந்த அடிவானம். இப்போதே உடலிலிருந்து பெருக்கெடுகிற பச்சை ரத்தமாய் பள பளத்தது.

ஆனந்தன் கட்டிலில் இருந்து எழுந்தான். குளிய லறைக்குச் சென்றான். உடம்பைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தான். அறையின் மின்விளக்கை எரிய வைத்தான். நேற்றுத்தான் வாங்கிய அல்தூசரின் நூலினைக் கையிலே எடுத்தான். அல்தூசரை மார்க்சிய சித்தாந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு புதிய பரிமாணம் கொடுத்த தத்துவ வித்தகராக அவன் அறிவான். அவரது கொள்கை, நேர்மை, விளக்கங்கள் என்பனவற்றை அவன் ஆர்வத்தோடு பயில்கிறான்.

ஜன்னலடியில் போய் நின்றான். வானப் பரப்பைப் பார்த்தபோது அவனையறியாமலே மனது தத்தளித்தது. அப்படியொரு ரத்தச் சிவப்பு கருவானத்தில் வழிந்து கொண்டிருந்தது. மீண்டும் அல்தூசரைக் கையிலே எடுத்தான். அல்தூசரில் மனம் ஒன்ற மறுத்தது. பொழுது விடிந்தால் நிறைய வேலைகளிருக்கின்றன. அட்வக் கேட்டைப் பார்க்க வேண்டும்.

வக்கீல் சுந்தரவதனத்தை நினைத்ததும் மனதினுள் சிரிப்பு உதிர்ந்தது. வேடிக்கையான மனிதர். அவர் எம். எஸ். ஸி, பி. எல்., புலவர் தேர்வும் எழுதியிருக்கிறார். ஆனால் போலீசாருடைய அட்டூழியங்களுக்கு எதிராக துணிவோடு வாதாடுபவர். செல்வேந்திரன் வைத்திருக்கும் 'வீடியோ லைப்ரரி'யில் போலீசார் அத்து மீறிப் புகுந்து வீடியோ காசெட்டுகளை அள்ளிச் சென்றதாக சொன்னபோதே மனிதரின் முகம் கொவ்வைப் பழமாகச் சிவந்து போய்விட்டது. ''இது எல்லை மீறிய அட்டூழியங்க. பிரைவேட் கேஸ் ஒன்று போட்டிடுவோம். நீங்க பின் வாங்க மாட்டீங்கதானே?'' என்று கேட்டார். அவர்கள் அந்த விஷயத்தில் வெகு தீர்மானமாக நின்றனர். ''மாட்டோங்க'' என்றனர். போலீஸ்காரரின் வேறு அட்டூழியங்களைப் பற்றி நிறையச் சொல்லி விட்டு. ''உங்க ஊரிலேயும் இப்படித்தான் இருப்பாங்களா?'' என்று ஆனந்தனைப் பார்த்துக் கேட்டார். ''இவங்களுக்கு நம்ம ஊர் போலீஸ்காரர் அண்ணனா இருப்பாங்க'' என்றான் ஆனந்தன். வக்கீல் விழுந்து விழுந்து சிரித்தார்.

அல்தூசரும் இதைத்தான் சொல்கிறார். ஆளும் வர்க்கத்தைப் பாதுகாக்கிற எல்லா அமைப்புகளும்— ஆயுதப் படைகள் உட்பட ஒரே விதமான குணாம்சங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவை தான். உலகம் பூராவிலும் உள்ள ஆயுதப் படையினர் ஒரே விதமாகத்தான் இருப்பார்கள். அவர்களின் இயல்புகள் நாட்டுக்கு நாடு அற்பசொற்பமாய் வித்தியாசப்படும். அவ்வளவுதான்.

ஆனந்தனுக்கு தனது பல்கலைக்கழக நாட்கள் ஞாபகத்துக்கு வந்தன. வியத்னாமில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராகவும், சிலியில் அலண்டே கவிழ்க்கப்பட்டவேளையிலும் பல்கலைக்கழக மாணவர்களின் சோஷலிச சங்கம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. எங்கிருந்தோ வந்து விழுந்த கல்லைக் காரணங் காட்டி மாணவர்களை போலீசார் குண்டாந்தடிகளால் அடித்து நொறுக்கி துவைத்து எடுத்தனர். சிவப்பு ரத்தம் வீதியிலும், சுவர்களிலும் சிதறித்தெறித்தது. எஸ். பி. கேட்டான்: ''பொறுக்கிப் பயல்களே, என்னடா சொன்னீங்க... எங்களைப் பார்த்து காவல் நாய் என்றா சொன்னீங்க. ஆமாண்டா நாங்க காவல் நாய் மட்டுமல்ல. வேட்டை நாய்களும் கூட.''

ஆனந்தன் மீண்டும் எழுந்து ஜன்னல் புறமாகப் போனான். வானத்தில் மஞ்சள், பொன் கொன்றைப் பூக்களாய் தூவியிருந்தது. அடிவானம் பளீரென்றது. மதில் சுவரில் சேவல் ஒன்று தொப்பென்று பறந்து விழுந்தது. பிறகு தன்னைச் சுதாரித்துக் கொண்டு சிறகுகளை அடித்துக் கொண்டு முதல் குரலில் கூவிற்று.

வீட்டின் முன்புறத்தில் ஏதோ சத்தம் கேட்டது. ஆனந்தனுக்கு அதிசயமாயிருந்தது. தனது அறைக் கதவைத் திறந்து கொண்டு, நடுஹாலைத் தாண்டி, சகா படுத்திருந்த அறையைக் கடந்து வெளிப்புறக் கதவினைத் திறந்தான்.

திறந்தவன், போர்டிகோவின் அரைச்சுவரில் வாட்டசாட்டமான தோற்றத்துடன் சாய்ந்து நின்றவர்களைக் கண்டதும் திகைத்து திக்கித்துப் போய் விட்டான். மதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைத் தாண்டிக் குதித்துத்தான் அவர்கள் உள்ளே வந்திருக்க வேண்டும். வெளிக்கேட்டில் சங்கிலி போட்டுப் பூட்டிய பூட்டு அப்படியே இருந்தது. மதிலுக்கு வெளியே சற்றுத் தள்ளி நின்ற ஜீப், அவன் உட்கதவைத் திறந்ததும் சர்ரென்று சீறிக்கொண்டு வெளிப்புற வாசலில் வந்து நின்றது. ஜீப்பிலிருந்து குதித்த போலீஸ்காரன் அதட்டுங்குரலிலே, ''யோவ் கதவைத் திறய்யா'' என்றான். ஆனந்தன் அரைச்சுவரோடு நின்றவர்களைப் பார்த்தான். ''நாங்க போலீஸ் ஆபிஸிலை இருந்து வந்த வங்க. சாவியை கொண்டு வந்து கேட்டைத் திறக்க வேண்டியதுதானே...'' கரகரத்த குரல் அவனது பிடரியைத் தொட்டது.

ஆனந்தனின் மனதில் பளீச்சென்று மின்னல் அடித்தது. முகத்தில் சலனமின்றி, ''சரிங்க'' என்றவாறு உள்ளே சென்றான். படுத்திருந்த செல்வேந்திரனுக்கு அருகே சென்று அவனை உலுப்பினான். கிசுகிசுத்தான். பின்னர் மெதுவாகத் தனது அறைக்குள் சென்றுவிட்டு, மீண்டும் ஹாலுக்கு வந்து டைனிங் டேபிளில் இருந்த சாவியை எடுத்துக் கொண்டு வெளியே போனான். கேட்டைத் திறந்தான். ஜீப்பிலிருந்து இன்னும் ஒரு தடித்த உருவம் இறங்கி உள்ளே வந்து, அரைச்சுவரோடு நின்ற மற்றவர்களோடு ஹாலுக்குள் சென்றது.

''என்ன விஷயங்க?'' ஆனந்தன் தன்னை நிதானமாக்கிக் கொண்டு கேட்டான்.

''நாங்க 'க்யூ பிராஞ்சி'ல் இருந்து வாரோம்...''

''எதுக்காக?''

தடித்த மீசை வைத்தவன் நையாண்டியாக ஆனந்தனைப் பார்த்தான்.

''தெரியாது?''

UNIVERSITY OF JAFFNA
3-7-1995
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இல்லையே...''

''நாங்க தான் உங்க நன்மையைக் கவனிக்கிறதுக்குப் பொறுப்பாயிருக்கிறவங்க. உங்களை எல்லாவிதத்திலும் கவனித்துக் கொள்றதுதான் நம்ம கடமை...''

''தெரியாதுங்க'' என்றான் அவன்.

''அப்படியா? செல்வேந்திரன் யாரு? நீங்க வீட்ல நாலு பேர்தானே இருக்கீங்க...''

''நாலு பேர்தான். ஆனா செல்வேந்திரன் நேற்று சாயந்திரம் போனவன் ஆள்தான். இன்னும் திரும்பி வரேல்லைங்க...''

''என்ன? ஆளே இல்லையா... எங்கே போயிருப்பான்? அட்ரஸ் கொடுத்திடுங்க...''

''எங்களுக்கு அது தெரியாது...''

குட்டையாய் இருந்தவன் உறுமினான்.

''நீங்க ரெண்டு பேரும் போய் ரூமெல்லாம் தேடுங்கய்யா. தேவடியாப் பயலை இன்னைக்கே கண்டு பிடிச்சுடணும்...''

''உனக்கு பாஸ்போர்ட் இருக்கா?''

''இருக்கிறது...''

''போய் எடுத்து வா...''

ஆனந்தன் அறையினுள்ளே போய் நிமிஷங்கழிய முன் பாஸ்போர்ட்டை எடுத்து வந்தான்.

''மற்றவங்க பாஸ்போர்ட் ''

''அவங்களைத்தான் கேட்கவேணும்...''

பாஸ்போர்ட்டை வாங்கியவன் சரசரவென்று பக்கங்களைப் புரட்டினான். பிறகு ஏளனத்தோடு ஆனந்தனைப் பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உனக்கு விசா முடிஞ்சிருக்கு தெரியுமா ?''

ஆனந்தன் மௌனமாக நின்றான். இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வந்தவர்கள் மீண்டும் இலங்கைக்கு கௌரவமான முறையில் போகும் நிலைமை வரும் வரை அவர்கள் இங்கேயே தங்கியிருக்கலாம் என்று பிரதம மந்திரி சொல்லியிருந்தது அவனது நினைவிலே வந்தது.

சொன்னான்.

தடித்த மீசையின் முகம் பயங்கரமாகச் சிவந்தது. முஷ்டியை இறுக்கியவாறு ஏதோ சொல்ல வாயெடுத்தான். அதற்குள் தெய்வேந்திரனையும், சகாவையும் பிடித்துத் தள்ளிக்கொண்டு மற்றவர்கள் வந்தனர்.

தெய்வேந்திரனின் முகம் இறுகிப் போயிருந்தது. கண்களில் அச்சம். உடலில் படபடப்புத் தெரிந்தது.

''ரெண்டு பேரிடமும் பாஸ்போர்ட் கிடையாதுன்னு சொல்றாங்க...''

''அப்படியா ... மூணு பேரையும் ஜீப்ல ஏத்துங்க ...''

ஆனந்தன் பணிவோடு அவர்களைப் பார்த்துக் கூறினான்: ''பாருங்க. நீங்க எங்களுக்கு சொந்தச் சகோதரர்கள் மாதிரி. எங்க கஷ்டமெல்லாம் உங்களுக்கு தெரியாததில்லை. வீடு, வாசல், சொத்து, சொந்தமெல்லாம் இழந்து நாங்க இங்கே வந்திருக்கிறோம். அகதிகளாக படகிலை வந்த எங்க கையிலை எப்படி பாஸ்போர்ட் இருக்க முடியும்.?''

குட்டையானவன் உறுமினான்:

''பாஸ்போர்ட் வேண்டாம். விட்டிடுங்க. ஆனால் அகதிகளா வந்ததை பதிவு செய்து அகதிகள் அட்டை எடுத்திருக்கலாமில்லை... றிப்யூஜி கார்ட் எடுக்கணு முன்னு கூட உங்களுக்கு தெரியேல்லய்யா ?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடித்த மீசை குறுக்கிட்டான்:

''பாஸ்போர்ட்ல என்னமோ லெக்சரர்னு போட்டிருக்கு. போலீஸ் அதிகாரிகளுக்கு எதிராக வேறை பெட்டிஷன் எழுதத் தெரிஞ்சிருக்கு. ஆனா இமிகிரேஷன் எமிகிரேஷன் ரூல் மட்டும் தெரியேல்லைன்னு சொல்றானுக...''

ஆனந்தனின் மனதினுள் மெல்லியமுள் ஒன்று குத்திற்று. 'ஓ அதுதானா விஷயம்' என்று நெஞ்சினுள் இன்னொரு குரல் கேட்டது.

''சார்... இன்றைக்கே 'றிப்யூஜிகார்ட்' எடுத்திடுறம். எங்களை விட்டிடுங்க சார்... ப்ளீஸ்... நாங்க எல்லாரும் தமிழர்தானே சார். அங்கையிருந்து அடிவாங்கிக்கொண்டு வந்திருக்கிற எங்களுக்கு உங்களை விட்டா வேறை யாரு சார் ஆறுதல் கொடுப்பாங்க...''

தெய்வேந்திரன் தளதளத்தான்.

குட்டையன் எல்லோரையும் புறப்படும் படி துரிதப் படுத்தினான். ஆனந்தன் மனதிலே குப்பென்று சினம் பற்றியெரிந்தது.

''சரி... நீங்க செய்யிறதைச் செய்யுங்க. ஆனால் எங்களை உங்க நாட்டு சட்டப்படியே நடத்துங்க. எங்க கைது பற்றி எங்களுக்கு வேண்டிய ஒரு ஆளுக்கு தெரியப் படுத்துங்க. எங்களுடைய தூதுவராலயத்துக்கு இதை அறியப்படுத்துங்க. எங்களை நீங்க கைதுசெய்யும் முறையே தவறானது. அத்துமீறி வீட்டுக்குள்ளை நுழைஞ்சிருக்கி றீங்க, பூஞ்செடியை எல்லாம் மிதிச்சு நாசப்படுத்தியிருக் கிறீங்க...''

''ஸ்டாப் இட். நிறையப் பேசாதே. போலீஸ் டிப்பார்ட்மெண்டிலை நம்ம பிராஞ்தான் டீசன்ட் ஆனதுன்னு பேர் எடுத்திருக்கு. அதனாலே பொறுமையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கிறேன். வேறை பிராஞ்சுன்னா இவளோ பேசி யிருக்க மாட்டாய். முட்டிக்கு முட்டி தட்டிப் போட்டி ருப்போம்...''

## 2

க்யூ பிராஞ் இன்ஸ்பெக்டர், அந்தப் பகுதி இன்ஸ் பெக்டருக்கு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, அவர்கள் மூவரையும் அந்தப் போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்ததற் கான தஸ்தாவேஜைப் பெற்றுக் கொண்டான்.

''மற்றவங்க பரவாயில்ல. கண்ணாடி போட்டவன் கொஞ்சம் சட்டம் பேசுவான். சிலோனில லெக்சரர்னு சொல்றான். பாஸ்போர்ட் ஆக்ட்ல மற்றவங்களையும் ஓவர்ஸ்டேயில இவனையும் போட்டிடலாம்...''

''தேவடியாப் பசங்க...'' வெறுப்போடு எல்லோரையும் நோட்டம் விட்டான் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர். முஷ்டியால் மேஜையில் தட்டிக் கொண்டான்.

இரண்டு நிமிஷங்களிற்கு தொடர்ந்து கெட்ட வார்த்தைகளைப் பேசிவிட்டு, ''இவங்க நம்ம ஊருக்கு வந்தாங்க. எல்லாமே கெட்டுப் போச்சுங்க. கொலை, கொள்ளை... கிரிமினல் ராஸ்கல்ங்க. நான் எப். ஐ. ஆர். போட்றங்க. ஏ இங்கே வாப்பா... இவங்க விபரத்தை ரைட்டரிட்ட எடுக்கச் சொல்லு... அப்புறம் 'ரிமாண்ட்' பண்ணு...'' என்று கூறினான் அந்த இன்ஸ்பெக்டர்.

''உங்களுக்கு ஐ.பி. சண்முகத்தை தெரியுங்களா? அனேகமா உங்க 'கொலீக்'காயிருக்கலாம். முடியும்னா அவருக்கு இந்த விஷயத்தை 'போன்' செய்திடுங்க...''

ஆனந்தனின் மனதினுள் வெறுப்பு அலையாய் புரண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சண்முகம் நம்ம பிரண்டுதான். ஏன் என்ன விஷயம்...''

''இல்லை. நீங்க போன் பண்ணுங்க. அவரே சொல்லுவார். சரி. நாங்க புறப்படுறங்க. அப்புறம் நான் இன்னொரு விஷயம் போன் பண்ணுவேன். அதையும் கொஞ்சம் கவனிச்சுப் பண்ணியிடுங்க...''

''ஓ எஸ்...''

அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு ஜீப்பில் ஏறிக் கொள்ள முதலே இன்ஸ்பெக்டர் சத்தமிட்டான். குரோதம் கொப் பளிக்கின்ற குரலிலே அவர்களைப் பார்த்துக் கூறினான். ''உங்க மூணு பேரையும் மத்தியானத்துக்குப் பிறகுதான் கோர்ட்டில் கொண்டுபோய் 'புரடியூஸ்' செய்ய முடியும். அதுவரை நீங்க இங்கேயே இருக்க வேண்டியதுதான். ஏய்யா இவங்களையெல்லாம் கூட்டிப்போ. டிரஸ் எல்லாத் தையும் உருவிக்கோ. ஜட்டியோடை மட்டுந்தான் உள்ளே இருக்கவிடு ..''

ஆனந்தன் அதிர்ந்து போய் விட்டான். அவமானத்தால் உடல் குறுகிற்று. குப்பென்று வியர்வை பொங்கிற்று. நாவு அண்ணத்தோடு ஒட்டிக் கொண்டது. உடம்பு குளிர்ந்து உறைந்தாற் போல நடுங்கிற்று. ஜட்டியோடு நிற்கவிடு என்றால் நிர்வாணமாக நிறுத்துதல்தானே. பலரின் முன்னே ஒரு மனிதனைத் துகிலுரிந்து நிர்வாணமாக்குகிற கயமைத் தனம் எத்தகையது! அது அவனது சுயகௌரவத்தை முற்றி லுமாய் அடித்து நொறுக்குகிறது. முகத்தில் காறியுமிழ்ந்து அவமானப் படுத்துகிறது. கொச்சைப் படுகிறது. சகமனிதன் முன் கூனிக்குறுகி கூசி நிற்கச் செய்கிறது. இன்னொரு முறை அவர்களிருவரையும் இயல்பாகப் பழக விடாது தடுத்து ஆளுமையைச் சிதைக்கிறது. இவ்வளவுக்கும் இவர்கள் குற்றவாளிகள் இல்லை. குற்றம் இழைத்தவர்க ளென்று முடிவு செய்யப்பட்டவர்களும் இல்லை. சந்தேகத் துக்குரியவர்கள். விசாரணையின் பின்னால் இவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவிகளென்று தீர்ப்பளிக்கப்படும். அத்தகைய பொழுதிலே அவர்களுக்கு உண்டாக்கிய கொடூரங்களுக்கு, அவமானங்களுக்கெல்லாம் என்ன பதில் கூறமுடியும்? அவற்றையெல்லாம் திரும்பப் பெற்றுக் கொள்ளுதல் சாத்தியமா? எந்த மனிதனுக்கும் சுய கௌரவமென்பது மேலான விஷயம். அந்த மேலான விஷயத்தை காலில் போட்டு துவம்சம் செய்வது காட்டுமிராண்டித்தனமானதல்லவா?

''நட...''

ஆனந்தனின் தோளில் முரட்டுக்கரம் ஒன்று வீழ்ந்தது. ''வேணாங்க. டிரஸ்ஸோடேயே நாங்க உட்கார்ந்திருக்கிறோம். இன்னும் கொஞ்ச நேரத்திற்குத்தானே...''

இன்ஸ்பெக்டர், தான் உட்காந்திருந்த நாற்காலியை சட்டென்று பின்னே தள்ளி விட்டு, ஆனந்தனின் அருகே துவண்டு போய் நின்ற தெய்வேந்திரன் கன்னத்தில் பளீரென்று அறைந்தான். ''நாயே, நடடா...''

தெய்வேந்திரன் நிலைதடுமாறியவனாய் சரிந்து சுவரோடு விழுந்தான். சிரமப்பட்டுக் கொண்டே எழுந்தான். இலங்கையில், ராணுவ முகாமில் இவ்விதந்தான் சிப்பாய் ஒருவன் அவனை ஓங்கி அறைந்தான். ''தமிழ் நாயே'' என்று காலால் எட்டி உதைத்தான். மேலும் கொச்சைத் தமிழிலே கெட்ட வார்த்தைகளாகப் பொழிந்து தள்ளினான். இப்போது அதே தொனிமாறாமல் இந்த இன்ஸ்பெக்டர் பேசுகிறான்.

''பொறுக்கிப் பசங்களே, எனக்கு மட்டும் அதிகாரம் இருக்குமாயிருந்தால் நாயைச் சுடுற மாதிரி நடு ரோட்ல வைத்து உங்களையெல்லாம் ஷூட் பண்ணியிடுவன். என்ன செய்ய? எனக்கு அப்படிப்பட்ட 'பவர்' இல்லாமப் போச்சு...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவரும் தம்மைப் பின்னே நின்று தள்ளியவர்களைத் திரும்பிப் பாராமலே நடந்தார்கள்.

அந்த அறை மிகவும் சிறியது. வயிற்றைக்குமட்டும் நாற்றம். ஏற்கனவே நாலு பேர் அங்கே உட்கார்ந்திருந் தனர். பரட்டைத்தலை. சிவந்த கண்கள். குரூரமான பார்வை. ஒருவனின் இடது புறத் தோளிலேயுள்ள புண்ணி லிருந்து வடிந்து கொண்டிருக்கிற சீழ்...

ஆனந்தனுக்கு வயிற்றைக் குமட்டியது. மற்றவர்கள் யாரையும் நிமிர்ந்து பார்க்கத் தோன்றவில்லை. காலடியி லேயே பார்வையிருந்தது. கண்கள் கலங்கின. மனதினுள் அக்னி எரிந்து கொண்டிருந்தது. மூளையினுள் எல்லை மீறிய வேதனை அறுகம்புல்லாய் படர்ந்து பரவிற்று.

''என்னய்யா சாராயக் கேசா?''

ஆனந்தன் கேட்டவனை நிமிர்ந்து பார்த்தான். கேட்டவனின் வாயில் இருந்து இன்னமும் சாராய நெடி குப்பென்று மணத்தது. சிவந்த கண்களில் வெறித்தன மிருந்தது.

''இல்லைங்க...''

''அடி பிடி கேஸா, எழுபத்தைஞ்சா?''

''இல்லை... நாங்க அப்பிடியானவங்க இல்லை...''

அவனுக்குப் பின்னாலிருந்த, ஒல்லியான இன்னொரு பரட்டைத் தலை குறுக்கிட்டான்.

''நீங்க சிலோன் காரங்கதானே...''

ஆனந்தனுக்கு நெஞ்சினுள் என்னவோ நெருடிற்று. மனதினுள் தென்றற்கீற்று புகுந்தாற் போல அவனையறி யாது உணர்ந்தான். இலேசான மனதுடன் அவனை நோக்கினான்.

''ஆமாங்க...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ப்பச்சிலை தெரியுது. சுத்தமாப் பேசுறீங்க. அது சரி உங்களுக்கு என்ன ஆச்சு...?''

ஆனந்தன் நிதானமாக பதில் கூறினான்.

''பொறுக்கிப் பசங்க இவங்க. இவங்கதான் சாராய வியாபாரிக்கும், கமிஷன் வாங்கிறவங்களுக்கும் மாமாப்பயல் வேலை பார்க்குறவங்க. ரௌடிப்பசங்க. சிலோனிலை இருந்கு கஷ்டப்பட்டு நம்மை நம்பித்தானே இவங்க வந்திருக்கிறாங்க. உதவி செய்ய வேணாம். உபத்திரவமாவது செய்யாம இருக்கலாந்தானே. நீங்க எல்லாம் ஒரு ஜெயவர்த்தனாவுக்கு பயந்து இங்கை ஓடியாந்திட்டீங்க. இங்கேயோ எங்கை பார்த்தாலும் ஜெயவர்த்தனாக்களா யிருக்குறாங்க...''

பரட்டைத் தலையின் கண்கள் எரிந்தன.

ஆனந்தன் எதுவுமே பேசவில்லை. மனிதர்கள் இந்தக் காலத்தில் தமது தோற்றத்தை விட்டு எங்கோ விலகிப் போய் விட்டார்கள். தோற்றத்திற்கும் இதயத்திற்கும் வார்த்தைகளுக்கும் குறைந்த பட்சத் தொடர்பு ஏதாவது இருக்கிறதா இவர்களிடம்?

இவர்களிடம் எல்லாம் பொய் முகங்கள்.

''சார்... உங்களுக்காக நான் பேரணியிலை கூடப் போயிருக்கிறேன் சார். உலகத்தில தமிழனுக்கு பெருமை தேடிக் கொடுத்தவங்க உங்க ஊர்க்காரங்க தான்... நீங்க எதுக்குமே பயப்படாதீங்க...''

மீண்டும் அந்த இன்ஸ்பெக்டர் ஆனந்தனின் கண்களிலே வந்தான். தனக்கு நீண்ட காலமாக உள்ள விரோதிகளோடு பேசுவது போல அவன் ஏன் நடந்து கொண்டான்? அல்தூசர் சொல்வது உண்மையாயிருக்கலாம். உண்மையாய் இருக்கலா மென்ன, உண்மையேதான். போலீஸ்காரனில் தமிழ்ப் போலீஸ்காரன் என்றோ, சிங்களப் போஸ்காரன் என்றோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திப் போலீஸ்காரன் என்றோ, இங்கிலிஷ் போலீஸ்காரன் என்றோ இருக்கிறானா? இல்லை, சர்வ நிச்சயமாக இல்லை. போலீஸ்காரன் என்றால் போலீஸ்காரன்தான். சார்ந்து நிற்கிற நிறுவனத்தைக் காப்பாற்றுவதற்காக குண்டாந்தடி தூக்குவான். துப்பாக்கி எடுப்பான். கற்களை வீசுவான். கண்ணீர் குண்டு பிரயோகம் செய்வான். சித்திர வதைகளைக் கட்டவிழ்த்து விடுவான்.

''சார்... கொஞ்ச நேரந்தானே. கவலையை வுட்டு டுங்க. கோர்ட்டுக்கு போயிட்டா பிறகு கஷ்டமே போயிடும்... நமக்கு இதெல்லாம் பழகிப் போயிட்டுது சாமி...''

''கோட்டிலை பெயில் 'மூவ்' பண்ண ஆள் வருந்தானே சார்... அப்புறம் இன்றைக்கு வெள்ளிக்கிழமை. இன்னைய விட்டா அப்புறம் ரெண்டு நாளைக்கப்புறந்தான் ஜாமினிலை வெளியே எடுக்க முடியும்...''

ஆனந்தனுக்கு அப்போதுதான் வெளியுலக நினைவே வந்தது. செல்வேந்திரனை எண்ணினான். செல்வேந்திரன் இப்போது என்ன செய்து கொண்டிருப்பான்? அவனை போலீசார் மீண்டும் போய் பிடித்திருப்பார்களா? அவனால் தான் இனி வெளியே எல்லோரும் விடுதலையாகிப் போக முடியும்! நல்லவேளை; அவன் தப்பித்துக் கொண்டது. இரண்டுகாரணிகளுக்காக நல்லது. வெளியேஅவன் இருந்தால் தான் இவர்களை விடுதலை பெறச் செய்ய முடியும். மற்றது அவன் பிடிபட்டிருந்தால், தனது தம்பியின் கன்னத்தில் ஓங்கி அறைந்த திமிர் பிடித்த இன்ஸ்பெக்டருக்கு சரியான பாடம் கற்பித்துக் கொடுத்திருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

செல்வேந்திரனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஆனந்தனையும் மற்றவர்களையும் எங்கே போய்த் தேடுவது என்ற கேள்வி அவனைக் குழப்பிக் கொண்டிருந்தது. வீட்டில் இருந்தால் மீண்டும் போலீஸ்காரர் வரக்கூடும் என்ற அச்சம் மனதைக் கலவரப்படுத்திற்று. எதற்கும் இப்போதைக்கு இந்த வீட்டிலே தங்காமல் வேறு எங்காவது போய் விடவேண்டுமென்று நினைத்தான். சில ஆடைகளை சிறிய பை ஒன்றிலே எடுத்து வைத்தான். பற்பசை, பிரஷ், சீப்பையும் எடுத்துக் கொண்டான். ஆனால் எங்கே உடனடியாகப் போவது? போலீஸ்காரர் கூட்டிச் சென்றவர்களை எப்படி வெளியே மீட்டுக் கொண்டு வருவது?

மின்னல் வெட்டினாற் போல வக்கீல் சுந்தரவதனத்தின் நினைவு வந்தது. முதலில் வக்கீலிடம் போகவேண்டும். வக்கீல்தான் உடனடியாக இந்தச் சிக்கலிலிருந்து எல்லோரையும் விடுவிக்க முடியும்.

ஜன்னலை மெதுவாக நீக்கி வெளியே பார்த்தான். ஜீப்போ, சந்தேகப்படும் படியான நபர்களோ காணப்படவில்லை வெளியே வந்தான். கேட்டை சாத்தி பூட்டுப்போட்டுக்கொண்டான். வீட்டின் முற்றத்தின் இருமருங்கும் புத்தம் புதிதாக மலர்ந்திருந்த வண்ணமலர்களையும் பசுஞ் செடிகளையும் பார்த்தான். பூக்கள் தலையை ஆட்டுகிறாற் போல உணர்ந்தபோது துக்கம் நெஞ்சை அடைத்தது. ஊரிலும் இப்படித்தான். முற்றத்தின் இருமருங்கிலும் மல்லிகை, ரோஜா, குரோட்டன்ஸ், நந்தியாவட்டை, செவ்வரத்தை என்று விதவிதமான மலர்ச்செடிகள் பச்சைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசேலென்று வண்ணப்பூக்கள் சுமந்தபடி. தெய்வேந்திரனைத் தேடி வந்த ராணுவத்தினர் அந்தப் பூச் செடிகளை துவைத்து நாசம் செய்து விட்டுச் சென்றிருந்தனர். அதன் பிறகு வீட்டில் யாருமே பூஞ்செடிகளைக் கவனிப்பதில் ஆர்வங்காட்டவில்லை.

மதில் ஓரமாகப் பார்த்தான்.

காலையிலே மதிலின் வழியாக ஏறிப் பாய்ந்த போலீஸ் காரரின் பூட்ஸ் கால்கள் உழக்க, செவ்வந்திச் செடிகளும், கனகாம்பரமும் சிதைந்து முறிந்து கிடந்ததை இப்போதுதான் அவன் கண்டான். கவலை மாறி சினம் எழுந்தது. அப்படிச் செய்த மனிதக் குரூரத்தின் முகத்திலே ஓங்கி அறைய வேண்டும் போல கோபம் பொங்கிற்று.

''ஸார்......''

அவன் குரல் வந்த திக்கினை நோக்கித் திரும்பினான் முப்பதைந்து வயது மதிக்கத்தக்க பரிவான பார்வை கொண்ட இளைஞன். எதிர் வீட்டுக்காரன். பார்த்தால் பரஸ்பரம் புன்னகை செய்து கொள்வதைத் தவிர இதுவரையும் ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லை அவனோடு. சகா அவர்களோடு நன்றாகப் பேசிப் பழகுவான். தண்ணீர்த் தட்டுப்பாடு வந்தபோது அவர்களுக்கு சகா தண்ணீர் பிடித்துக் கொடுத்திருக்கிறான்.

''வீட்டுக்கு ஒருமுறை வந்திட்டுப் போங்க ஸார்.''

இளைஞனின் அழைப்பை அவனால் மீற முடியவில்லை. அவன் பின்னே சென்றான். சிறியவீடு. அழகாக வைத் திருந்தார்கள். ஹாலில் அவனை உட்கார வைத்துவிட்டு, ''காயத்ரி'' என்று அழைத்தான் அந்த இளைஞன். கணப் பொழுதில் காப்பியுடன் ஒரு பெண் வந்தாள். ''என் மனைவிங்க. காயத்ரி... ஐ. ஓ. பி. யில், வேலை செய் கிறாள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வேந்திரன் அவளுக்கு எழுந்து வணக்கம் சொல்லிக் கொண்டே காபியை வாங்கியவாறு உட்கார்ந்தான்.

''காலையிலை அவங்களைக் கூட்டிக்கொண்டு போனதைப் பார்த்தபோது மனதுக்கு ரொம்பவும் சங்கடம் ஆச்சுங்க. என்ன காரணத்துக்காக அழைத்துக்கொண்டு போயிருக்கிறாங்க?''

வீட்டினுள் மறைந்திருந்தபோது அரைகுறையாகக் கேட்ட உரையாடல்களைக் கூறினான் செல்வேந்திரன்.

''வழமையாக பிரதமர் வந்தால்தான் தெற்கிலை இலங்கைத் தமிழரையும், சீக்கியரையும் அள்ளிக் கொண்டு போய் ஜெயில்லை வைத்திருப்பாங்க... இது என்ன அதிசயமாய்...''

ஆனந்தன் தனது வீடியோ லைப்ரரியில் போலீசார் நடத்திய கொள்ளையைப் பற்றிக் குறிப்பிட்டான். அதற்காக நீதி மன்றத்தில் கேஸ் போடப்பட்டிருப்பதையும் பற்றிக் கூறினான்.

''அதற்குத்தான் இப்படிப் பழி வாங்குகிறார்கள் என்று நினைக்கிறேன்...''

''இதெல்லாவற்றையும் பற்றி கவர்னர், ஐ. ஜிக்கு முறையீடு செய்தால் என்ன?''

இளைஞன் — நாராயணன் கூறியதைக் கேட்டதும் காயத்ரி புன்னகை செய்தாள்.

''அதே முறையீட்டை அதே போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு அனுப்பி விளக்கம் கேட்பார்கள். இன்னும் ஒரு வாரங் கழிந்ததும் இன்னொரு குற்றச்சாட்டின் பேரில் போலீசார் மீண்டும் இவர்களைக் கைது செய்வார்கள்... முட்டிக்கு முட்டி தட்டி செயலற்றவர்கள் ஆக்குவார்கள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இன்டர்நாஷனல் அம்னிஸ்டி புத்தகங்களைப் படித்துப் படித்து எல்லாமே உன் கண்ணுக்கு ஒரே மாதிரியாகத்தான் தெரிகிறது காயத்ரி...''

''அப்படி எல்லாம் இல்லைங்க. இதுதாங்க போலீஸ் சுபாவம். அது எல்லாத் தேசங்களிலும் ஒரே மாதிரியானது தான்.''

செல்வேந்திரன் வியப்போடு காயத்ரியைப் பார்த்தான். அவள் சொல்வதில் இம்மியளவு கூடத் தவறில்லை. இலங்கையில் தமிழர்களுக்கெதிராக போலீசார் என்ன கெடுபிடிகளைச் செய்தார்களோ அதே கெடுபிடிகளைத் தானே இங்கேயுள்ள போலீசாரும் செய்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் எந்த நீதி முறைக்கும் பயமின்றிச் செய்கிறார்கள்.

''நீங்க முதல்ல டிபன் சாப்பிடுங்க. அப்புறம் யாராவது வக்கீலைப் போய்ப்பாருங்க. பப்பூலர் கவர்ன்மென்ட் இருந்தா உடனடியாக ஏதாவது பண்ணலாம். இப்படியான நாட்களில் எல்லாம் போலீஸ்காரங்க முடிசூடாத ராஜாவாகி விடுவாங்க...''

செல்வேந்திரனை எவ்வளவோ வற்புறுத்தியும் அவன் சாப்பிடவில்லை. அவன் புறப்பட எழுந்தபோது வெளியே ஜீப் சத்தம் கேட்டது. உடனே நாராயணன் எழுந்து வெளியே போய் அதே வேகத்தில் உள்ளே வந்தான்.

''உங்களைத் தேடித்தான் மறுபடியும் வந்திருக்குறாங்க. காயத்ரி, சாரை உள் ரூமிலை உட்காரவை...''

தன்னை அவள் மறைந்திருக்கச் சொன்ன அறையினுள்ளே கலவரத்துடன் உட்கார்ந்திருந்தான் செல்வேந்திரன். அவனுக்கு எல்லாவற்றின் மீதும் வெறுப்புண்டாயிற்று. ஏதா பயங்கரமான குற்றம் புரிந்து விட்ட ஒருவனைப் போல இவ்விதம் மறைந்து வாழ வேண்டியிருக்கிறதே என்று நினைத்ததும் துக்கமும் கோபமும் நெஞ்சை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடைத்தன. இப்படியே கதவைத் திறந்து கொண்டு போய் எதன் பொருட்டு இவ்விதம் சட்டத்தை உங்கள் கையிலே எடுத்துக் கொண்டு அநியாயம் பண்ணுகிறீர்கள் என்று சத்தம் போட்டுக் கேட்கலாமா என்று கூட மனம் துள்ளிற்று.

''முன் வீட்டுக்கு யாராவது வந்தாங்களா?''

கரடுமுரடான குரல் வினவிற்று.

''அப்படித் தெரியல்லே ஸார்...''

''எதுக்கு அவங்களைத் தேடுறீங்க?''

''உங்களுக்குத் தாங்கம்மா சொல்லணும் அவங்க மோசமான பயலுங்க...''

தெறித்தாற் போல பதில் சொன்னாள் காயத்ரி:

''இல்லை ஸார். உங்களுக்கு ஏதோ தவறான தகவல் வந்திருக்கு. இந்த வீட்டுக்கு அவங்க வந்த நாள் முதல் நாங்க பார்த்திருக்கிறம். தானுண்டு தன்பாடுண்டு என்று அவங்க இருப்பாங்க. மற்றவங்களுக்கு சின்ன உபத்திரவம் கூடச் செய்ய மாட்டாங்க. பதிலாக இந்த ரோட்லயே மோசமானவங்க நிறையப் பேர் இருக்குறாங்க. கள்ளச் சாராயம் காய்ச்சிறவங்க, பயங்கர ரௌடிங்க எல்லாமே இந்தப் பக்கம் அட்டூழியம் செய்யிறாங்க. இதைப்பத்தி கவர்னர் முதல் ஐ.ஜி. வரை எல்லாருக்குந்தான் மாதத்திலை ரெண்டு மகஜராவது அனுப்பிக் கொண்டிருக்கிறோம். விசாரணை செய்யுறோம்னு ஒரு ஆள்கூட இதுவரை வந்ததில்லை...''

''என்னம்மா சமயசந்தர்ப்பம் தெரியாமல் நீங்க எதை எதையோ எல்லாம் பேசுறீங்க. ஸார்... நீங்க கொஞ்சம் முன் வீட்ல நோட்டம் வைச்சிருங்க... அவங்க பயங்கரமான கிரிமினலுங்க. அவங்க மேலை நிறைய சார்ஜஸ் உண்டு...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வக்கீல் சுந்தரவதனத்தின் வீட்டுக் கதவில் தொங்கிய பெரிய பூட்டைக் கண்டதும் திகைத்துப் போய் விட்டான் செல்வேந்திரன். இருந்த பெரிய பற்றுக் கோடொன்று திடுமென முற்றிலுமாய் அறுந்து விட்டாற்போல அவன் உணர்ந்திட்டான்.

''வக்கீல் சாரிட்டத்தானே வந்தீங்க. அவுங்க அப்பா செத்துப் போயிட்டாறாங்க. ஸார் ஊரிலேருந்து திரும்பி வர ஆறுநாளாவது ஆகுங்க...''

சொன்னவனைப் பரிதாபமாகப் பார்த்தான் செல்வேந்திரன்.

''ஸாருக்கு ஏதோ அர்ஜண்ட் கேஸ் உண்டு போல...''

குச்சியாக, பசித்த கண்களுடன் நின்ற அவனை செல்வேந்திரன் வெறுமையாகப் பார்த்தான். குச்சியான ஆள் முழுப்பற்களும் தெரியும்படி சிரித்தான்.

''நான் ஸாருக்கு பிரிலியண்ட் வக்கீலைக் காண்பிக்க முடியும். கேஸ், கிரிமினிலா, சிவிலா?... என்ன கேஸ் ஆனாலும் ஸார் இந்த சுகுமாரன் பின்னாலை நம்பிப் போயிடலாம்... புறப்படுங்க...''

செல்வேந்திரன் தனது கேஸைச் சொன்னான். சுகுமாரன் மிகவும் தைரியங்கூறி அவனை வக்கீல் ராமதுரையிடம் அழைத்துச் சென்றான். கதவில் —ராமதுரை— கார்த்தியாயினி ராமதுரை என்று தனித்தனியான இரண்டு வக்கீல் போர்டுகள்.

ராமதுரையிடம் செல்வேந்திரன் தனது கேஸைக் கூறினான். ராமதுரை கண்களை மூடியவாறு செல்வேந்திரன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவன் கூறி முடித்து சில கணங்கள் கழிந்ததும் கண்களைத் திறந்தவாறு புருவங்களை நெரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ரொம்பவும் சிக்கலான கேஸுங்க இது. கவண்மென்ட் ஆட்டிடியுட்டே இப்போ மாறிப் போச்சுதுங்க. சிலோன் காரங்க விஷயத்தில் ஸ்ட்ரிக்டா நிக்கணும்னு சென்ரல் எடுத்த ஸ்டாண்டு எல்லோர் கையையும் கட்டிப் போட்டுட்டு துங்க. என்னைப் பாருங்க. இலங்கைத் தமிழருக்காக நான் நெறையப் பண்ணியிருக்கேங்க. நீங்க யாரு? நாம அண்ணன் தம்பிகளில்லையா?''

''இப்போ என்ன செய்யலாம் என்று நீங்கள் சொல்லு கிறீர்கள்...''

''அதுதாங்க யோசிக்கிறேன். சட்டப்படி இதிலை ஆர்கியுமெண்ட் ஒண்ணுமே இல்லைங்க. பைஃன்போடு வாங்க. அப்புறம் நாடு கடத்துவாங்க. அவ்வளவுதான்...''

''கடவுளே...'' என்று தலையிலடித்துக் கொண்டான் செல்வேந்திரன். ''சார், அதைவிட இங்கேயே எல்லாரையும் தூக்கிலை போட்டிடலாங்க. ப்ளீஸ் அவர் களை எப்படியும் வெளியிலைக் கொண்டு வந்திடணும்... நீங்கதான் உதவி பண்ணவேணும்...''

''ஸார் என்ன பண்றதாச் சொன்னீங்க...?''

''வீடியோ லைப்ரரி நடத்தி வருகிறேன்.''

''ஓ... எத்தனை காஸெட் வைச்சிருப்பீங்க? ஒரு ஆயிரம்...''

''வருங்க...''

''நாளொண்ணுக்கு ஐம்பது காஸெட் போகுங்களா?''

''இல்லைங்க. சனிக்கிழமை, ஹாலிடேயிலை மட்டும் அப்படிப் போகும். சாதாரண நாளிலை இருபது முதல் முப்பது வரை போகும். பரவாயில்லை...''

''வேறை ஏதும் பண்ணமாட்டீங்க?''

''ஆடியோ காசெட் ரிகார்டிங் கூடச் செய்வோம்...''

''ஓ... பரவாயில்லையே...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இப்போ என்ன செய்யப் போறீங்க... இன்றைக்கு வெள்ளிக்கிழமை. இன்றைக்கு பெயில் மூவ் பண்ணி ஜாமீனிலை வெளியிலை கொண்டு வந்துவிட வேண்டும் ஸார்...''

''இப்படி வற்புறுத்துறீங்க...''

வக்கீல் கண்களை மூடிக் கொண்டார். செல்வேந்திரன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். ராமதுரையின் முகத்தில் மெதுவான வெளிச்சம் படர்ந்தது. புன்னகயாய் அது வடிவங் கொள்ள அவர் கண்களைத் திறந்தார்.

''நீங்க கொஞ்சம் ஜாஸ்தியா செலவு பண்ண வேண்டி வரும். பண்ணுவீங்களா ?''

செல்வேந்திரன் யோசித்தான். வீடியோ லைப்ரரியில் பாதி காஸெட்டுகளை போலீஸ் இன்ஸ்பெக்டர் அள்ளிச் சென்று விட்டான். எப்படிப் பார்த்தாலும் ஆயிரம் ரூபாவுக்கு மேல் கையிலே தேறாது.

''எவ்வளவு பணம் வேணுங்க ?''

''எல்லாமாக நாலாயிரம் ரூபா கொடுத்திடுங்க. போலீஸ், ஏ. பி. பி. அது இதென்னெல்லாம் செலவு வரும். கையிலை வேறை பத்துப் பத்து ரூபாவாக இரு நூறு ரூபா நீங்க வைச்சிருக்கணும். சூரிட்டி தேவைப் படும். அதுக்கும் நீங்கதான் தயார் பண்ணணும். மொத்தமா ஐயாயிரம் ரூபா வேணுங்க...''

''ஐயாயிரமா ?'' அவனையறியாமலே வார்த்தைகள் கலக்கமுற்று திகைத்தன.

''வேணும்னா நான் ஒண்ணு பண்றேன். இருநூறு ரூபா— அதுவும் நம்ம பீஸிலை தள்ளுபடி செய்யலாம். என்ன சொல்றீங்க...''

நெற்றிப் பொட்டை பெருவிரலால் கசக்கிக் கொண் டான் செல்வேந்திரன். கண் எதிரே வெறும் சூனியமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தது. முள் பரவிய சூனியம். என்ன செய்வதென்று தெரியாமல் அலறவைக்கிற சூனியம். நெஞ்சைக் கசக்கிப் பிய்க்கிற சூனியம். அச்சத்தினால் உடலைப் படபடக்க வைக்கின்ற சூனியம். ஏன் இவ்விதம் எங்களுக்கு ஆயிற்று? நம்பிக்கையின் சிறு சுடர்க்கீற்றே இல்லாத செவிட்டுச் சூனியம் ஏன் எங்களை இவ்விதம் கவ்விக் கொண்டது? யாருமே பக்கத்தில் இல்லை. ஒதுங்கிக் கொள்ள இருக்கிற வீட்டிற்குப் போவதற்கு முடியாத நிலைமை. இந்த இன்னலில் இருந்து தற்காலிகமாகவாவது விடுதலை பெறவேண்டுமெனில் பணம் வேண்டும்; சில மணி நேரங்களில் அதுவும் வேண்டும்... எங்கே போய் யாரிடம் கேட்டு...

''நான் பணத்தோடு வந்திடுவேன் சார். நீங்கதான் எப்படியும் அவர்களை வெளியிலே கொண்டுவர வேண்டும். நான் நேரடியாக கோர்ட்டுக்கு வர விரும்பவில்லை. எனது வீடியோ லைப்ரரி மானேஜரை உங்களிடம் அனுப்புவேன்...''

''ஆனால் மிஸ்டர். பணம் முழுவதும் கொடுத்திட வேணும்...''

''சரி ஸார்...''

டெலிபோனில் மானேஜர் தியாகராஜன் கலக்கமான குரலிலே பேசினான்:

''பத்துப் போலீஸ்காரரும் இன்ஸ்பெக்டரும் வந்தாங்க. மிரட்டினாங்க. தாறுமாறாகத் திட்டினாங்க. நீங்க இருக்கிற இடத்தை காமிக்கேல்லேன்னா என்னை முட்டிக்கு முட்டித் தட்டப் போறதாச் சொன்னாங்க. ஆனா ஒண்ணு சார். நீங்க மட்டும் மாட்டிக் கொள்ளாதீங்க. உங்களைப் பிடிச்சா கொன்னுடுவாங்க சார். எனக் கொண்ணும் பயமில்லை; வேணும்னா என்னைத் தட்டிப் பார்க்கட்டும் சார். என்ன சார் பேசுறீங்க இல்லை...?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனித்த கண்களைத் துடைத்துக் கொண்டான் செல்வேந்திரன். வயதறிந்த நாளிலிருந்து அவன் கண் கலங்கியதில்லை. இன்றைக்கு அவன் துண்டு துண்டாக, சிறு துணுக்குகளாக இந்தக் கணத்திலே உடைந்து சிதறி விட்டான்.

''தியாகு... அதெல்லாம் வேணாம். நீ கடையைப் பூட்டிக் கொண்டு உடனே புறப்படு. உனக்கு இதில் பங்கு வேண்டாம். ஆனால், தியாகு எனக்குப் பணம் வேண்டியிருக்கிறது. சின்னத் தொகையில்லை. ஐயாயிரம் ரூபா. அதுவும் உடனே வேணும்... என்ன செய்யப் போகிறேனோ தெரியவில்லை...''

''எப்படிப் புரட்டினாலும் ஆயிரம் ரூபாதான் வரும். ஸார் என்னுடைய மோதிரம், வாட்ச்சை மார்வாடி கடையில் அடமானம் வைத்தால் இன்னொரு ஆயிரம்...''

அடமானம்... அடமானம்...

சுணீரென்று அந்த வார்த்தைகள் செல்வேந்திரனின் நெஞ்சைத் தொட்டன. தொட்ட இடத்தில் தீப்பொறி ஒன்று விழுந்தது. பற்றி எரிந்தது. பெரு வெளிச்சமாய் பொங்கியது. நெஞ்சினுள்ளே பதுங்கிய சூனியமும் மூள் திரையும், தரையும் வெறுமையாய் விரிந்தன.

''தியாகு, ஒன்று செய். ஆயிரம் ரூபாவை எடுத்துக் கொள். ஆடியோ காசெட் ரிக்கார்டரை மாடியிலுள்ள கோவிந்த் கடைக்கு எடுத்துப் போ. அதை வைத்துக் கொண்டு ஐயாயிரம் ரூபா கொடுக்கும்படி கோவிந்திடம் கேள். நிச்சயமாக அவன் தருவான். பணத்தைக் கொண்டு உடனே சுதந்திரதினப் பூங்காவுக்கு வா. வள்ளுவர் கோட்டத்துக்கு அருகேதான் சுதந்திர தினப் பூங்கா உள்ளது...''

''சார்...''

''சொல்லு...''

"மனதுக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கு. ரிக்கார்டரை அடமானம் வைக்க வேணாம் சார். அது நமக்கு செல்வத்தை அள்ளிக் கொடுக்கிற லட்சுமி சார். அற்புதமான ஒரு குழந்தை சார்..."

"தியாகு. எனக்கு மட்டுமென்ன இஷ்டமா? வேறு வழியே தெரியவில்லை தியாகு..."

"நான் வந்துடறேன் சார்..."

"சீக்கிரம் புறப்பட்டுவா... உன்னை யாராவது பின் தொடரக்கூடும். ஜாக்கிரதை..."

UNIVERSITY OF PERADENIYA
3-7-1995
LIBRARY

## 4

சுதந்திரதினப் பூங்காவில் அமைதியற்றவனாக நின்று கொண்டிருந்தான் செல்வேந்திரன். தியாகு அவசர அவசரமாக உள்ளே வந்தான். பணத்தைக் கொடுத்தான்; பிறகு மௌனமாக செல்வேந்திரனைப் பார்த்தான்.

"கோவிந்த் பணங்கொடுக்க ரொம்ப கஷ்டப் பட்டாங்க... எப்படியோ அப்பிடி இப்பிடி சேர்த்துக் கொண்டு வந்திட்டேங்க. ஸார் ஜாக்கிரதையா இருங்க. அவங்க கையிலை மட்டும் மாட்டிக் கொள்ளாதீங்க. கொலைவெறி பிடிச்சுத் திரியிறாங்க. அந்த இன்ஸ்பெக்டர் எப்படியெல்லாம் பேசினான் தெரியுமா? கொதிச்சுப் போயிருக்கிறான். கோழிக்குஞ்சோட கழுத்தைத் திருகிப் போடுறமாதிரிப் போட்டிடுவேன்னு சொல்லியிருக்கிறான்..."

"தியாகு. எத்தகைய முறைகேடுகளெல்லாம் அதிகார வர்க்கத்தால் நடத்தப்படுகிறதென்று பார். பரவாயில்லை. அநியாயத்துக்கு எதிராக நிற்றலும் ஒரு வீரந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கெடுபிடிக்கெதிராக போராடிப் பார்க்கலாம். மனிதன் உலகிலே இழந்து போவதற்கு உயிரை விடப் பெரிய விஷயம் என்ன இருக்கிறது? எனது உயிரைத் தான் இவர்கள் பிடுங்கமுடியும்... அதையும் பார்த்து விடலாம்... அதன் பிறகு இவர்களால் என்ன செய்ய முடியும்? எதைச் செய்ய முடியும்? முதலில் போலீஸில் பிடிபட்டவர்களை வெளியே கொண்டு வரவேண்டும். அவர்கள் அப்பாவிகள்...''

''நான் என்ன செய்யணும் ஸார்...''

''இதோ இந்த விஸிட்டிங் கார்டை வைத்துக்கொள். விபரமெல்லாம் இந்தக் கடிதத்தில் எழுதியிருக்கிறேன். சூரிட்டிக்கு அவர் சொல்கிறபடி நமது கடைக்கு அருகே உள்ள ஆட்களைச் சேர்த்துக் கொள். எப்படியும் இன்றைக்கு ஜாமினில் அவர்களைக் கொண்டு வந்து விட வேண்டும். நான் இங்கேயே இருப்பேன். எனக்கு நீதான் செய்திகள் வந்து சொல்ல வேண்டும். நீ இங்கே வரும் போது யாராவது உன்னைப் பின் தொடர்கிறார்களா என்று பார்த்துக்கொள். என்னால் உனக்கு பிரச்சினை வரக் கூடாது...''

ரா மதுரை பறிக்கிறாற்போல தியாகராஜனின் கையிலிருந்த பணத்தை வாங்கிக் கொண்டே, ''இன்னும் பசங்களை இங்கே கூட்டி வரேல்லையே... என்ன ஆச்சுது, ஜட்ஜ் கூட இன்னும் வரேல்லையே...''என்றார் விசனம் தொனிக்க. பின்னர், ''இந்த வழக்கில் எனது மனைவிதான் ஆஜர் ஆகிறாள்... ஏனெனில்... இதில் ஆர்கியுமெண்ட், வாதத் திறமை எதுவுமே எடுபடாது. வேற ரூட்லதான் போகணும்...''

''அப்படீன்னா ?''

''ஜட்ஜை, என் மனைவி ப்ளீஸ் பண்ணிக் கேட்பாங்க. நிச்சயம் நல்ல ஜட்ஜ்மண்ட் கிடைக்கும்... ஏ. பி. பி. கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்ல சம்மதிக்கல்லே. அப்புறம் பணம் வெட்டினதும் சரி நான் கண்டுக்காம விட்டிட்ரேன் என்றிருக்கிறான். நீங்க சூரிட்டிக்கு ஆளை ரெடி பண்ணுங்க...''

மணி இரண்டரையாகி விட்டது. இன்னும் ஜட்ஜ் வர வில்லை.

நீதிமன்றத்துக்கு வந்த ஜனங்கள் மரங்களின் கீழும், நீதிமன்றக்கட்டிடத் திண்ணைகளிலும் சோர்ந்து போய் உட் கார்ந்திருந்தனர். தியாகராஜனுக்கு தலையைச் சுற்றியது. கண்கள் மங்கி மங்கித் தவித்தன. எழுந்து வக்கீல்களின் அறைக்குச் சென்றான்.

ராமதுரையும், கார்த்தியாயினியும் கவலை நிறைந்த முகத்தோடு தியாகராஜனைப் பார்த்தனர். பின்னர் ராமதுரை, ''இன்றைக்கு ஜாமினிலை பசங்களை வெளியே கொண்டு வரமுடியும் என்று தோணலை'' எனப் பெரு மூச்சோடு கூறிவிட்டு ஜட்ஜ் இன்று நேரங்கழித்து வர இருப்பதற்கான காரணத்தை அவனுக்கு கூறினார். பிறகு, ''நீ திங்கட்கிழமை காலையில நேராக இங்கேயே வந்திரு... அப்புறம் நாளைக்கும், நாளை மறுநாளும் சென்ரல் ஜெயில்ல அவங்களைப் போய்ப் பார்த்து தேவை யானதை எல்லாம் வாங்கிக் கொடுத்திடு'' என்று கூறினார் ராமதுரை.

ஜட்ஜ் நாலு மணிக்குத்தான் நீதிமன்றத்திற்கு வந்தார். அவர் கோபமான மூடில் இருந்ததால் கார்த்தியா யினி அவரோடு போய்ப் பேசவுமில்லை. ஜாமின் கோரவு மில்லை. போலீஸ்காரர் ஐந்து மணிக்குத்தான் தெய் வேந்திரனையும் ஏனையோரையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய, ஜட்ஜ் திங்கட்கிழமைவரை அவர்களை சிறைச் சாலையில் வைக்க உத்தரவிட்டார். ஆனந்தனும், தெய் வேந்திரனும், சகாவும் பரிதாபகரமாக தியாகராஜனைப் பார்த்தனர். தியாகராஜனின் கண்களை கண்ணீர்த்திரை மறைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜட்ஜ் உரிய நேரத்திற்கு வந்திருந்தால் இன்றே ஜாமின் கிடைத்திருக்கும். என்ன செய்வது? ஜட்ஜுக்கும் பிரச்சினை; சொந்தக் கவலை.

குழந்தைகள் இல்லாத அவர் இருபது முயற்குட்டிகளை வளர்த்து வந்தார். இருபது குழந்தைகளை வளர்ப்பது போல அவ்வளவு செல்லமாக வளர்த்து வந்தார். இரண்டு தினங்களுக்கு முன்னர் பத்து முயல்களை யாரோ திருடிச் சென்று விட்டனர். ஜட்ஜுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஜட்ஜ் வீட்டில் திருடு போவதென்றால் எப்படி? வெளியே தெரிந்தால் அவமானம் என்று எண்ணிப் பேசாமலே இருந்துவிட்டார். ஆனால் நேற்று இரவு மீதி முயல்களையும் யாரோ திருடிக்கொண்டு சென்று விட்டனர். ஜட்ஜுக்கு ஆத்திரம் தாளவில்லை. எஸ். பியை போனில் அழைத்தார். வாங்கு வாங்கென்று வாங்கினார். எஸ். பி. அதை விடச் சூடானார் ஜீப்பை எடுத்துக்கொண்டு வேகமாகப் புறப்பட்டார். முதலில் அவரின் கண்களில் சில நரிக் குறவர்கள் பட்டனர். அவ்வளவு பேரையும் அள்ளி ஜீப்பில் போட்டார். போலீஸ் ரிமாண்ட் ரூமில் அடைத்து விட்டு ஜட்ஜுக்கு சேதி சொல்லிவிட்டு 'கிளப்'புக்கு சென்று விட்டார். பாவம். அந்த எஸ்.பிக்கு ஒரு செய்தி தெரிந்திருக்கவில்லை. அந்த நரிக்குறவர்களுக்கு வலிமை வாய்ந்த சங்கம் இருப்பது அவருக்கு சுத்தமாகவே தெரியாது. இந்த விஷயத்தை சங்கம் உடனேயே கவர்னரின் கவனத்துக்கு கொண்டு சென்றது. கவர்னரின் ஆலோசகர்களுக்கு, இந்த செய்தி பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் உடனே சென்றுவிடும் என்பது தெரிந்திருந்ததால் அவசர நடவடிக்கையில் இறங்கி விட்டனர். ஜட்ஜ் இந்த விஷயத்தில் தனது பெயர் அடி படுவதை விரும்பவில்லை. அவர் 'கம்ப்ளையிண்ட்'டை கூட எழுத்து மூலம் கொடுக்கவில்லை. எஸ். பி. இப்போது வசமாக மாட்டி கொண்டார். கடைசியில் என்னென் னவோ எல்லாம் ஆகி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வேந்திரனுக்கு நெற்றிப் பொட்டுகள் தகித்தன. தியாகராஜன் எல்லை மீறிய பரிதாபத்தோடும் பரிவோடும் அவனைப் பார்த்தான். செல்வேந்திரனது கம்பீரத் தோற்றம் மங்கிச் சிதைந்து போயிருந்தது. அவன் வானத்தை வெறித்துப் பார்த்தான். பின்னர் மௌனமாக அங்கிருந்து நடக்கத் தொடங்கினான்.

# 5

ஆனந்தனுக்கு சிறைச்சாலையின் இம்சைகளைத் தாங்கவே இயலவில்லை.

சிறையினுள்ளே சென்றதும். அவர்களை எவ்வித காரணமுமின்றி வார்டன்கள் வெறுப்போடு திட்டினார்கள். சில மூத்த, குரூரமான கைதிகள் தலையைப் பிடித்து உலுப்பி கன்னத்தில் அறைந்தனர்.

ஆனந்தனது மூக்குக் கண்ணாடியை ஒருவன் பிடுங்கி இரண்டாக உடைத்தெறிந்தான்.

தெய்வேந்திரன் விம்மிவிம்மி அழுதான்.

உயர்ந்த கல்வியாளன்; அன்பான மனிதன்; பிறர் போற்றுகிற இயல்புகள்; துணிவுடமை என்ற அரிய குணங்கள் நிறைந்த இந்த மனிதனுக்கு இப்படியொரு அவமானமா என தெய்வேந்திரன் வருந்தினான்.

சிறையின் நடைமுறைகள் இவ்வளவு கொடுமை வாய்ந்தனவாயிருக்கும் என்று ஆனந்தன் கனவிலே கூட எண்ணியிருக்கவில்லை. புதிதாக வருபவர்களை பழையவர்கள் இம்சை பண்ணித்தான் வரவேற்றார்கள். இம்சையென்றால் சுயகௌரவத்தை காலால் அடித்து நொறுக்கி நசுக்குகிற இம்சை. முகத்திலே காறியுமிழ்ந்து அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதை செய்கிற இம்சை. யோக்கியமானவனை அயோக்கியனாக வெளியே திருப்பி அனுப்புகிற கொடூரம்!

அவர்கள் கொத்துக் கொத்தாக குந்திக் கொண்டிருக்க வேண்டும். கொடுக்கப்படுகிற வேலைகளைச் செய்ய வேண்டும். அடிகளை வாங்க வேண்டும். சிறைக் கொட்டடிகள், அசுத்தமான சூழலில். மலஜல நாற்றங்களின் இடையே தூங்க வேண்டும்; ஆனந்தனுக்கு குமட்டலில் குடலே வெளியே வந்துவிடும் போலிருந்தது. 'ஓக்'கென்று சத்தமிட்டான். பக்கத்திலே படுத்திருந்த கைதி கெட்ட வார்த்தைகளில் திட்டினான். ஆனந்தன் மூக்கைப் பொத்திக் கொண்டு எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

நாம் என்ன குற்றம் செய்தோம்? இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் நாம் உரியவர்கள்தானா? சொந்த மண்ணின் அவலத்தை தாங்கிக் கொண்டு அங்கேயே வாழ்ந்திருக்கலாமே! தாயையும் தாய்நாட்டையும் புறக்கணித்தவனுக்கு இது தண்டனைதான். பொருத்தமான தண்டனைதான்!

ஆனந்தனின் முதுகு வலித்தது. கரடு முரடான சுவரோடு சாய்ந்து உட்கார்ந்து கொண்டான்.

திடீரென்று அவனது தோளிலே கரடு முரடான ஒரு கை படர்ந்தது. அச்சத்தோடு திரும்பினான்.

தாடி மீசையோடான உருவம். மௌனமாகவே அவனை கவனித்துக் கொண்டிருந்த உருவம் அது என்பதை அவன் ஞாபகப்படுத்திக் கொண்டான்.

''நண்பரே, உம்மைப் பார்க்க எனக்கு அளவுகடந்த இரக்கமாக இருக்கிறது. நீர் ஒரு அப்பாவி எனத் தெரிகிறது. பாவம். சிறை என்பது சித்திரவதைக் கூடம் மட்டுமல்ல. தன் கொடூரத்தால் மனிதனை மன நோயாளியாக்குகிற வதைக்களம். உம்மைப்போலவே நானும் ஒரு இலங்கைத் தமிழன்தான். அநியாயமாக கைது செய்யப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட நான் ஒரு தனியாள். எனக்கு யாருமில்லை. ஊரிலே எல்லோரையும் உயிரோடு பறிகொடுத்து அதை மறக்க இங்கு வந்தேன். என்னைப் பிணையில் மீட்டுச் செல்ல யாருமில்லை. எனக்காகப் பேச யாருமில்லை. இங்கே பெயரற்ற ஒருவனாகக்கூட நான் இறந்து போய் விடலாம்...''

அவனது குரல் தழுதழுத்தது.

''இங்கே வந்திருக்கிற இலங்கைத் தமிழர்களில் எல்லோரும் யோக்கியர்கள் என்று நான் சொல்ல வரவில்லை. உலகில் எந்த மனிதக்கூட்டம் நூற்றுக்கு நூறு வீதம் யோக்கியமானது? இங்குள்ள இலங்கைத் தமிழர்களில் ஒரு சிலர் தவறு செய்திருக்கலாம். அதற்கு உரிய தண்டனை வழங்குவது சரியானதுதான். ஆனால் ஒருவனை வைத்து எல்லோரையும் எடை போடுவதும் இம்சிப்பதும் சரியானதில்லை. ஆனால் இங்கு அதுதான் நடக்கிறது. இந்தச் சிறையில் ஜாமின் எடுக்க ஆளின்றி எத்தனையோ இளைஞர்கள் குறுகிக் கிடக்கிறார்கள். பலர் பைத்தியக் காரர்களாய், நோயாளிகளாய் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எனக்கு ஒன்றுதான் விளங்கவில்லை. உலகிலுள்ள எந்த நாட்டு மனிதனும், இங்கே அந்நிய தேசத்தவனாக கருதப்பட்டு அதற்குரிய சட்டமுறைகளுடன் நடத்தப் படுகிறான். அவன் கைது செய்யப்பட்டால் அவனைப்பற்றி உடனே அவனது பிறந்த தேசத்து தூதரகத்துக்கு அறியப் படுத்த வேண்டும். அப்போது அவனது நலன்களுக்காக அவனது தேசமே வாதாடும். ஆனால் நாம் இங்கே அகதிகளாக வரவேற்கப்பட்டோம். என்றாலும் இங்கே நாம் சொந்தச் சகோதரர்களுமில்லை. அந்நிய தேசத்தவருமில்லை. அந்த விதத்திலேயே இங்கே மோசமாக நடத்தப்படுகிறோம். இதைப்போல அவமானம் வேறென்ன?

இப்படியொரு நிலை உலக வரலாற்றில் வேறு யாருக்கு நேர்ந்திருக்கிறது ? யாருக்குமே இல்லை.''

திடீரென்று எழுந்த வீரிடல் அந்த சிறைக்கூடம் முழுவதையுமே அதிர வைத்தது. தீனமான அந்தக் குரல் தெய்வேந்திரனுடையது...

''விட்டிடுங்க. என்னை விட்டிடுங்க... ஐயோ என்னை விட்டிடுங்க...''

அவன் கனவு கண்டு சத்தமிட்டானா, யாராவது அடித்து அப்படி அலறினானா என்பதை ஆனந்தனால் தீர்மானமாகக் கூற முடியவில்லை. ஆனால் அவனது கண்கள் கலங்கி கண்ணீர் பெருகிற்று. கண்ணீரைத் துடைக்காமலே அவன் உட்கார்ந்திருந்தான்.

''என்னை விட்டிடுங்க... விட்டிடுங்க'' என்ற தெய்வேந்திரன் பரிதாபகரமாக அலறுகின்ற வேளையிலெல்லாம் அருகேயிருந்து ஆறுதல் சொல்கிறதான், இப்போது அவனுக்கு அருகேயிருந்தும் ஆறுதல் சொல்ல முடியாத நிலையில் சிறைக்கம்பிகளுக்கும் இரக்கமற்ற சுவர்களுக்கு மிடையே சிக்கியிருப்பதை எண்ணுகிறபோது அவனுக்கு நெஞ்சு எரிந்தது.

பின்னால் இருந்தவனுக்கு ஆனந்தன் அழுவது தெரிந்ததோ என்னவோ, பரிவோடு ஆனந்தனின் தோளில் கை வைத்தான். ஆனந்தன் திரும்பி அவனைப் பார்த்தான். அவனைப் பார்த்த கணத்திலேயே இரண்டு நாட்களாகுமே தான் வெளியே போக என நினைத்தமைக்காக அவன் வெட்கமும் அவமானமும் கொண்டான்.

● *1989*

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதம் இனிய குயில்

எனது கைகளைப் பற்றிக் கொண்டு ரவீந்திரன் விம்மி விம்மி அழுதபோது என்னால் எதையுமே பேசமுடியவில்லை. அதிர்ந்து போய்விட்டேன். மனதினுள் விர்ரென்று துன்பம் பொங்கிற்று. ரவீந்திரனைப் பார்க்கவே எனக்கு சங்கடமாயிருந்தது. புன்னகையும் உற்சாகமும் எப்போதுமே மின்னிப் பிணைந்திருக்கின்ற ரவீந்திரனின் முகம், நம்பவே முடியாத அளவுக்குச் சிதைந்திருப்பதை ஒரு கணந்தான் பார்த்தேன். அந்தக் கணத்திலேயே மனதினுள் சுளீரென்ற சவுக்கடி. மீண்டும் அவனைப் பார்த்திடுவதற்கு மனம் முனையவில்லை. அவனது தலைக்கு நேரெதிரே தொங்குகின்ற ஆதிமூலம் வரைந்த பெண் விடுதலை ஓவியத்திலே பார்வையைச் செலுத்தினேன். ஓவியப் பெண்ணின் முகத்திலேயுள்ள சிவப்பு நிறத் திலகத்தின் செம்மை மனதினை என்னவோ செய்தது. மீண்டும் என் கையினைப் பற்றியிருக்கின்ற ரவீந்திரனை சோர்வோடு பார்த்தேன்.

ரவீந்திரனோடு பழகுகின்ற யாருமே அவன் இப்படி விம்மி விம்மி அழுவான் என்பதனை இப்போது கண்டாலன்றி ஒருபோதுமே நம்ப மாட்டார்கள். சொன்னாலும் சொன்னவரைப் பார்த்து இகழ்ச்சியோடு நகைப்பார்கள். புன்னகையும், புன்னகை இல்லாத வேளைகளில் ஆழ்ந்த சிந்தனையும் துலங்குகிற முகம் ரவீந்திரனுடையது. எதற்கும் அஞ்சித் துவண்டுவிட மாட்டேன் என்று மனங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவதை உரத்துச் சொல்லுகின்ற சுடர் எரிகின்ற கண்கள். எனது கை இன்னும் அவனது பிடியிலே இருந்தது. நானும் அப்படியே இருந்தேன். அவனது கண்ணீர் எனது கையிலே ஈரமாகப் படிந்திருந்தது.

ரவீந்திரன் மெதுவாகத் தலையை நிமிர்த்தினான். அவனது பார்வை என்னை எதிர்கொண்டது. கண்கள் சிவந்து பொருமியிருந்தன. முகம் சுருங்கிச் சறுத்தாற்போல இருந்தது. திடீரென்று பத்து வயதுகள் அதிகரித்தவன் போலத் தோன்றினான். என்னைப் பார்த்ததும் மீண்டும் அவனது உதடுகள் துடித்து நடுங்கின. வாயைப் புதைத்துக் கொண்ட அவனது கையினை பரிவுடன் நான் பற்றிக் கொண்டேன்.

''யோ... ராதாவை... ராதாவை...'' என்று விம்மியவனுக்கு அடுத்த வார்த்தைகள் வரவில்லை. மீண்டும் பரிதாபகரமாக விசும்பினான். கண்களில் நீர்த்திரை மூடி, கணத்தின் கரைதலில் கண்ணீர் மணிகளாய் உருண்டது. என்னுள்ளே சோகமான அதிர்ச்சி நடுங்கிற்று. என்னைச் சமாளித்தவாறே, ''என்ன ரவி? ராதாவுக்கு என்னதான் ஆச்சு? சொல்லேன்'' என்று அவனைத் தோளைப் பிடித்து உலுப்பினேன்.

''ராதாவை யாரோ கடத்திக்கிட்டு...''

''என்ன...?''

அவனது வார்த்தைகளை எனது சொற்கள் குறுக்கிட்டு முறித்தன. அவனது தோளைப் பற்றிய கைகளை எடுக்காமலே மீண்டும், ''சொல்லு ரவி... என்ன நடந்ததென்று தான் சொல்லேன்...'' என்றேன் நான்.

தனது தோளிலிருந்த எனது கையை எடுத்துக் கீழே விட்டான் ரவீந்திரன். என்னைக் களைப்போடு பார்த்தான். பிறகு உடைந்து போன குரலிலே கூறத் தொடங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யோ... நானும் கமலாவும் முந்தாநாள் சாயந்தரம் ஊருக்கு அவசரமாகப் போயிருந்தோம். சித்தியும் ராதாவும் வீட்டிலேதான் இருந்தாங்க... இன்னிக்கு மத்தியானந்தான் நாங்க வீடு திரும்பினோம். சித்தி அழுதுகிட்டே இருந்தாங்க. நேற்றுக் காலையில ஸ்கூலுக்குப் போன ராதா திரும்பியே வரல்லை...''

என்னுடைய மனம் பக்கென்று...

''சித்தி எங்கியும் அவளைத் தேடல்லியா?''

''தேடினாங்க... எல்லோருமே ஸ்கூலுக்கு நேற்றுக் காலையில அவள் போனதைப் பார்த்ததாகச் சொன்னாங்க. ஆனா ஸ்கூலிலே விசாரிச்சப்போ வரவேல்லன்னு சித்திக்கு சொல்லிட்டாங்க...''

ரவீந்திரன் கண்களைத் துடைத்துக் கொண்டான். சமூகவியல் துறையில் டாக்டர் பட்டம் பெற்றவன் ரவீந்திரன். கல்லூரிப் பேராசிரியன். எனது நீண்ட நாள் நண்பன். அவனது மனைவி கமலாவும் நானும் அவனோடு தான் கல்லூரியிலே துணைப் பேராசிரியர்களாயும் பணி புரிகின்றோம். இன்னும் இரண்டு வாரங்களில் அவனுக்கு ஐம்பதாவது வயது தொடங்குகின்றது. அவனது ஐம்ப தாவது பிறந்த தினத்தை வெகு சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று ராதா என்னிடம் கூறிக்கொண்டிருந்தாள். ''அங்கிள், அப்பாவின் டாக்டரேட் தீஸிஸையும் அன்னைக்கே புத்தக வடிவில் கொண்டு வந்திடணும்...'' என்று ராதா என்னை ஓயாமல் உற்சாகப்படுத்திக் கொண் டிருந்தாள். 'தென்மாவட்ட மக்களின் பண்பாட்டுக் கோலம்' என்பது அவன் எழுதிய டாக்டரெட் தீஸிஸின் தலையங்கம். அச்சாகிக் கொண்டிருக்கும் அந்த ஆய்வு நூலின் அச்சு வேலைகள் அடுத்த வாரம் பூர்த்தியாகிவிடும். ''அங்கிள், அப்பாவுக்கு மஞ்சள் நிறந்தான் ரொம்பப் பிடிக்கும். புத்த கத்தின் அட்டைப் படத்தில நிச்சயமா மஞ்சநிறம் இருக்க வேணும்...'' கண்கள் மலர அவள் சொல்லிக் கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருந்தபோது. ரவீந்திரன் பெருமிதத்தோடு என்னைப் பார்த்தான். கண்களைச் சிமிட்டினான்.

"யோ... இப்போது என்னுடைய முழு நேர பி.ஏ. கமலா இல்லை... ராதாதான்..."

ராதா உடனே செல்லமாகச் சிணுங்கினாள்: "போங்கப்பா..." ராதாவுக்கு இப்போது பதினேழு வயது. மூன்று மாதங்களின் முன்னர்தான் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடினாள். ரவீந்திரன், கமலா, நான், ராதா—நான்கு பேரும். ராதாவின் வற்புறுத்தலால் புத்தகக் கடைக்குச் சென்றிருந்தோம். ராதாவுக்கு நிறையப் புத்தகங்கள் வாங்குவதற்காக ரவீந்திரன் பணம் கொடுத்திருந்தான். ஏராளமான புத்தகங்களை வாங்கியிருந்தாள் ராதா. அவள் வாங்கிய புத்தகங்களைப் பார்த்தேன்... பஜ், மொஸார்த், ப்ஹாம்ஸ், வெர்டி என்ற இசையமைப்பாளர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள், சக்கோவொஸ்கி, பீத்தோவனின் இசைத்தட்டு ஆல்பங்கள். எனக்கு ஒவ்வொரு வேளையிலும் வியப்பளிக்கின்றவளாக ராதா மாறிப் போனதற்கு இதுவுமொரு காரணம்.

இந்தச் சின்னஞ்சிறு வயதிற்குள் என்ன அற்புதமான ஞானம் பொதிந்திட்ட தேடல் அவளுக்கு. ஆச்சரியப்பட வைக்கின்ற மேதைமை. என் வியப்பூறும் பார்வையினை தெரிந்து கொண்டவளே போல ராதா கூறுவாள்:

"அங்கிள், இதெல்லாம் அப்பாவும், அம்மாவுந்தான் எனக்கு உண்டாக்கி வெச்ச ஆர்வம். தியாகராஜ சுவாமிகளின் வரலாறு உங்களுக்கு நன்றாகத் தெரியும்... தியாகராஜரின் தாயார் புரந்தர தாஸரின் பாட்டுக்களை அடிக்கடி பாடுவாராம். அதுவே தியாகராஜரின் இசைக் கவனத்திற்கும், ஞானத்திற்கும் அடிப்படைம்பாங்க. இந்த மாதிரிப் பெற்றோருக்குத்தான் மொஸார்த், பிராம்ஸ்—ஏன் பாரதியார் கூட பிள்ளைகளாகப் பிறந்திருப்பாங்க..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆனாலும் ராதா, உன்னைப் போல இப்படி, இந்த வயதில் ஞானமுள்ள சிறுமியை எங்குமே நான் கண்டதில்லை...''

நான் கூறியதைக் கேட்டதும் ராதா விழுந்து விழுந்து சிரித்தாள். கண்களில் நீர் துளிர்த்து விட்டது.

''அங்கிள்... நான்... நான்...? சிறுமி...!'' குலுங்கிச் சிரிக்கையில் பட்டென்று கண்களிலிருந்து உதிர்ந்த கண்ணீர்.

''ஆம் ராதா... நீ எங்களுக்கு என்றென்றுமே சிறுமி தான்...''

''...அவள் சின்னக் குழந்தை... அவள் இப்போ எங்கே, எவரிடம் சிக்கி எவ்விதமாய்...?''

காருக்குள் உட்கார்ந்திருந்த ரவீந்திரன் குலுங்கிக் குலுங்கி அழுதான். நான் அவனது கையிலே தொட்டேன். அவனுக்கு அருகேயிருந்த கமலாவைப் பார்த்தேன். கமலாவின் முகமும் அழுதழுது வீங்கிப் போயிருந்தது.

ரவீந்திரன் மாணவனாகப் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே தனக்கு எப்படிப்பட்ட மனைவி அமைய வேண்டும், குழந்தைகள் எப்படிப்பட்டவர்களாய் அமைந்திருக்க வேண்டும் என்ற கற்பனைகளையெல்லாம் மனதினிலே விதைத்து வைத்திருந்தான். அவனது மானசீகத்தில் உருவெடுத்து வளர்ந்தவளே காதலியாகவும் வாய்த்தாள். மென்மையாகவே அவர்களின் பழக்கம் வளர்ந்து உறுதி பெற்றது. இருவரும் ஒரே படிப்பும், சமமான அந்தஸ்தும் கொண்டவர்களாக இருந்தமையினால் அவர்களின் காதல், கல்யாணத்தில் வந்து முடிவடைந்தது. அவனது கனவுகளின் ஒருமித்தவொரு இனிமை பொங்கும் நனவாக ராதா வந்து பிறந்தாள்.

கமலாவும் ராதாவும் அக்கா தங்கை போலவும், பிரியமான சிநேகிதிகள் போலவும் பழகி வந்தபோதிலும்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் உணர்வுகளை மகளும், மகளுடைய எண்ணங்களையும் இளவயதுப் போக்குகளையும் புன்முறுவலான மனப் பக்குவத்தோடு தாயும் அனுசரித்து நடந்ததினால் அந்த வீட்டிலே தலைமுறை இடைவெளி என்பது அர்த்தமிழந்து போயிருந்தது. அவர்கள் பேசிக்கொண்டு போகையில் வசீகரமும் இனிமையும் வடிவமாக மட்டும் தெரிவதில்லை. வார்த்தைகளும் அவ்விதமே உருவங் கொண்டிருக்கும். புன்னகை, மலர்களென அவர்களோடு கமழ்ந்து வலம்வரும். பார்க்கிறவர்களையும் அவர்களையறியாமல் பற்றிக் கொள்ளும் அந்த வசீகரம்.

ரவீந்திரனுக்கு எல்லாமே திட்டமிட்டபடிதான். படிப்பிலே ஒரு ஒழுங்கு. எழுதுவதில் ஒரு ஒழுங்கு. இப்படித்தான் ஓய்வு வேளையைக் கழிக்க வேண்டுமென்ற வரையறை. நாளின் நிமிஷங்களையெல்லாம் அவன் தனது அத்தியாவசியமான நகர்வுகளாக்கியிருக்கிறான். அவனைப் பார்த்து யாருக்குத்தான் பொறாமை இல்லை? நினைத்ததையெல்லாம் சாதிப்பதால் அவன் யாருக்கு முன்னாலேயும் கை கட்டி நின்றவனும் அல்ல. அப்படியாக கை கட்டி நின்றிடாத ஆளுமையாலே தான், அவன் தான் நினைத்தவற்றையெல்லாம் தனது காலடியிலே வந்து நிற்க வைத்திருந்தான் என்று தட்சணாமூர்த்தி அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பான். தட்சணாமூர்த்தி தத்துவத்துறையைச் சார்ந்த இவனது சகாவான பேராசிரியன். தட்சணாமூர்த்தி பிளேட்டோ தாசன். பிளேட்டோ சொல்வாராம்: 'சூழ்நிலையை உணர். அதன் இறுக்கத்தை உடைக்கின்ற ஆற்றல் பொருந்திய வலிமையினை உள் வாங்கு. பின்னர் உன் கனவுகளை செயல்படுத்துவதற்கு தூரப் பார்வை வை. இப்படி இயங்கினால் பாதியிலேயே வெற்றி உன்னைப் பின் தொடர்ந்து வந்து நண்பனாய் ஆரத் தழுவிக் கொள்ளும்.' பிளேட்டோவைச் சொல்லிவிட்டு தட்சணாமூர்த்தி சொல்வான்: 'ரவி, நானறிய இந்த இலக்கணத்திற்கு நீ இலக்கியமாவாய். இது முகஸ்துதியல்ல.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் ஒவ்வொரு கணத்தினையும் திட்டப்படுத்தியிருந்தவனுக்கு இந்த ஐம்பது ஆண்டுகளிலும் என்றாவது ஒரு பின்னடைவு அல்லது தோல்வி? ரவீந்திரன் நன்றாகவே செஸ் விளையாடுவான். கமலாவும், ராதாவும் அவன் காய்களை நகர்த்துகின்ற நுணுக்கத்தைக் கண்டு பிரமிப்படைவார்கள். அவன் செஸ் விளையாட்டில் யாரிடமும் தோற்றுப் போனதில்லை. அதில் அவனுக்கு தனி கர்வமும் கூட. ஆனால் ஒரு நாள் அவன் ராதாவிடம் தோற்றுப் போய் விட்டான். தோற்றுப்போய் விட்ட அந்தக் கணங்களிலேயே அங்கே மௌனம் கனமான படலமாய் கவிழ்ந்து மூடிக் கொண்டது. அவன் செஸ் போர்ட்டை இறுகிப் போன முகத்துடனேயே பார்த்துக் கொண்டிருந்தான். நிமிராமல் மௌனமாக உட்கார்ந்திருந்தான். ராதாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அம்மாவைப் பார்த்தாள். அம்மாவின் முகத்தில் இனந்தெரியாத கவலை இருந்தது. கவலை மட்டுமா? மெல்லிய பரிவும் எட்டிப் பார்த்தது. ஆனால் மறுகணம் ஆச்சரியமொன்று சம்பவித்தது. செஸ் போர்டினில் கண் பதிந்திருந்த ரவீந்திரன் நிமிர்ந்தான். வெறும் முகமாய், உணர்ச்சிகளே உதிர்ந்து போன முகமாய் தெரிந்த முகத்திலே இப்போது கனிவு முற்றிலும் மலர்ந்த பூவின் பிரகாசமாய் பிரகாசித்தது. கண்களின் கனிவு முகத்தில் புன்னகையாய் பிசிறற்றுப் படர்ந்து பரவிய போ தினில்தான் ராதா, ரவீந்திரனை பிரியத்துக்குரிய அப்பாவாகக் கண்டாள்.

''அப்பா, நீங்க சின்னத் தோல்விகளைக் கூட தாங்கிக்க மாட்டீங்களா?'' என்று சின்னஞ்சிறு முயலினைப் போல முகத்தை வைத்துக் கொண்டு கேட்டாள் ராதா.

ரவீந்திரன் புன்னகை செய்தான். பதில் பேசாமல் ராதாவை சில கணங்களிற்குப் பார்த்தான். பின்னர் தனது கருத்து அடர்ந்த புருவத்தை வலது கை சுட்டுவிரலினால் வருடியவாறே, ''ராதா, நான் எதுக்கும் தோத்துப் போகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவனா, மத்தவங்களுக்கு முன்னால கை கட்டி நிக்காத வனா, மத்தவங்களால கேவலப்படுத்தப் படாதவனா வாழணும்னு விரும்பறவன்...'' என்றான் ஆழ்ந்தடங்கிய குரலில்.

ஆச்சரியம் கண்களின் படபடப்பாகத் தொனிக்க, ''சொந்த மகள் கிட்ட கூடவா அப்பா?'' என்றாள் ராதா.

''சரியான பெண்ணம்மா நீ...'' என்றவாறு செல்லமாக அவளின் கன்னத்திலே தட்டினான் ரவீந்திரன்.

இப்போது போலீஸ் இன்ஸ்பெக்டரின் முன்வே கை கட்டியவாறு நின்ற கணவனை, மனதினை முள்ளென அழுத்திய வேதனையோடு பார்த்தாள் கமலா.

''உங்கள் மகளுக்கு ஏதாவது காதல் விவகாரம் உண்டா? அவள் தன்னுடைய காதலனோடு ஓடிப்போயிருக்க மாட்டாங்கறதுக்கு என்ன உத்தரவாதம்?''

இன்ஸ்பெக்டர் 'பேப்பர் வெயிட்'டை உருட்டிக் கொண்டே சர்வ சாதாரணமாகக் கேட்டார்.

''இன்ஸ்பெக்டர்... அப்படி ஒரு நாளும் இருக்காது. அவள் அப்படிப்பட்ட ஒரு பெண்ணே இல்லை...''

ரவீந்திரன் உணர்ச்சி வசப்பட்டிருந்தான். வார்த்தைகள் அவனது தளதளத்த நெஞ்சின் வடிவத்தைக் கூறின. கமலா வின் நெஞ்சிற்குள் விம்மல் சுழித்தது. கண்கள் பனித்துப் பொட்டொன்று நீருருண்டது. தன்னை ஆறுதல் படுத்த முயன்றாள். பரிதாபமாக கணவனைப் பார்த்தபடியே நின்றாள். வேறொரு சந்தர்ப்பமாயிருந்தால் அவனை இந்த நிர்த்தாட்சண்யமற்ற குரூரம் கொப்புளிக்கின்ற சூழ்நிலை யிலிருந்து இழுத்துக் கொண்டு போயிருப்பாள். முட்டாள் தனமே முகந்தனில் எழுதியிருக்கிற மனிதர்களின் முன்னே பலமெல்லாமிழந்து கை கட்டி குன்றிப் போய் நிற்க இவனை விட்டு, தானும் பார்த்திருக்கிற நிலையை எண்ணியபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கு சத்தமிட்டு அழ வேண்டும் போலிருந்தது. ஆனால் வேறு வழியென்ன?

''நீங்க என்ன வேலை பாக்கறதா சொன்னீங்க... புரொபஸர்... அப்படித்தானே... ஆம் ஐ ரைட்... புரொபஸர் நம்ம காலமெல்லாம் இப்போ மாறிப்போச்சுது. இரண்டாங் கிளாசிலேயே நம்ப குழந்தைங்க 'லவ்' பண்ண ஆரம்பிச்சுடு துங்க. நாமெல்லாம் நம்ம காலத்திலேயே நிற்கிறோம்... என்ன போங்க உலகம்...''

''இல்லை... நீங்க எதுக்கும் கொஞ்ச முயற்சி பண் ணுங்க... ப்ளீஸ்...''

''சரி... நான் சொல்ல வேண்டியதை சொல்லிட்டேன். உங்க கஷ்டம் எனக்குப் புரியுது. என்னாலே செய்யக் கூடியதைச் செய்யறேன். எதற்கும் அவளுடைய ரூமை நன்றாகப் பாருங்கள். ஏதாவது கடிதம், தடயம் கிடைக்கும். 'கம்ப்ளெயிண்ட்'டை இப்போ கொடுங்க. நாளைக்குக் காத்தால என்னை இங்கே வந்து பாருங்க... கவலைப்படா தீங்க. சும்மாவா அந்தக் காலத்தில சொன்னாங்க... பிள்ளை மனம் கல்லு, பெத்த மனம் பித்துன்னு...''

வீட்டின் முன்னேயும், பள்ளிக் கூடத்தின் அருகேயு மிருந்த கடைகள் யாவிலும் விசாரித்தாயிற்று. வீட்டின் எதிர் மருங்கிலேயுள்ள பூ விற்கிறவன், ஷூ பாலிஷ் போடு கிறவன், பழக்கடைக்காரர், டீக்கடை நாராயணன், கிளி ஜோஸியம் ராஜ மார்த்தாண்டம் ஆகிய எல்லோருமே ராதாவை அன்று காலையிலே பார்த்ததாகக் கூறினார்கள். ஒரே விதமாக அடையாளம் சொல்லிவிட்டு கவலை மிகுக் கின்ற குரலிலே பெருமூச்செறிந்தார்கள். ''என்ன ஆச்சுங்க... நல்ல பெண்ணாச்சே அவ...''

இரண்டு தினங்கள் கழிந்த பின்னர் வீதியில் நடப்பதே கஷ்டமாயிற்று ரவீந்திரனுக்கு. அனுதாபத்தோடு கேட்ட வர்களையும், விஷமத்துடன் கேட்டவர்களையும் அடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளம் கண்டு கொள்வதே கஷ்டமாயிற்று அவர்களுக்கு. பத்திரிகைகளிலும்,பத்திரிகைப் போஸ்டர்களிலும்கொட்டை கொட்டையான எழுத்துக்களிலே செய்திகள். 'காணாமல் போய் விட்ட அழகிய மாணவி! காதலனுடன் ஓட்டம் என்று சந்தேகம்?!' என்று தடித்த எழுத்துச் செய்திகளும் போஸ்டர் தலையங்கங்களும் ரவீந்திரனை வீதியிலே தலைகுனிந்து நடக்கச் செய்தன. கமலம் கல்லூரிக்கு ஒரு வாரம் லீவு போட்டுவிட்டு வீட்டிலேயே குறுகிப் போய்க் கிடந்தாள். நிருபர்கள் கூச்ச நாச்சமின்றி செய்திகள் கேட்டனர். ராதாவின் புகைப்படத்தைத்தரும்படி கெஞ்சி மன்றாடினர்.

ரவீந்தரன் கவலையோடு சொன்னான்:

''எவ்வளவு குரூரமான மனிதராய் இருக்கிறாங்க. வெறும் யூகத்திலேயே எவ்வளவு அபத்தமாய் செய்திகளை வெளியிடுகின்றன இந்தப் பத்திரிகைகள்! ராதாவுக்கு ஒரு காதலனைச் சிருஷ்டித்து, அவன் அவளைக் கூட்டிக்கிட்டு ஓடிப் போனதா பத்திரிகைகள் சொல்லுது. தப்பா செய்திங் களை எல்லாம் வெளியிட்டு ஜனங்களை ஏமாத்துகின்றன. துன்பப்படுத்துகின்றன. அப்பாவிச் சிறுமி ஒருத்தியை யாரோ கடத்திக்கிட்டு போய் விட்டாங்க... அதைப் பத்தி கவலைப்படாம எவ்வளவு யூகங்களையும், விவாதங்களையும் இவங்க நடத்துறாங்க...''

ராதா பின்னர் எங்கே என்ற கேள்வி இப்போது விஸ்வ ரூபமெடுத்து நின்றது. அந்தக் கேள்வியை முழுமையாக எதிர் கொள்வதே கஷ்டமாயிருந்தது. உடல் அச்சத்தினால் நடுங்கிற்று. மூளையுள் நெருப்புத் தகித்து தகித்து அனலாய் எரிந்தது.

நான் ரவீந்திரனிடம் இருந்து விடை பெற்றுக் கொண்டு அவனது வீட்டிலிருந்து புறப்பட்டபோது வெளியே போலீஸ் ஜீப் ஒன்று வந்து நின்றது.

''புரொபஸர் இருக்கிறாரா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் என்னைப் பார்த்து கரகரப்பான குரலிலே கேட்டார்.

நான் பதில் கூறிவிட்டு அவரை உள்ளே அழைத்துச் சென்றேன்.

''பதினேழு பதினெட்டு வயசு மதிக்கத்தக்க பொண்ணு ஒருத்தியோடு ஒருத்தன் சந்தேகப்படறாப்பல மைசூர்ப் பக்கமா நின்னப்ப போலீஸாலை கைது பண்ணியிருக்கிறதா செய்தி வந்திருக்கு. மேற்கொண்டு அதைப் பத்தி பேசறதுக் காக உங்களை கூட்டிட்டு வரச்சொன்னாங்க...''

நான் ரவீந்திரனைப் பார்த்தேன். ரவீந்திரனின் முகத்தில் சந்தோஷம் குபுக்கென்று குதித்தது. கண்களிலே மீண்டும் உயிர்த்த பிரகாசம். லேசான புன்னகையோடு தலையை மெல்ல ஆட்டிக் கொண்டான். கமலம் கண்களை மூடிக் கொண்டு பரவசமாகவும் நிம்மதியாகவும் பெருமூச்சு விட்டாள்.

நாங்கள் இருவரும் அவசர அவரமாக அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டரோடு அங்கிருந்து புறப்பட்டு போலீஸ் ஸ்டேஷனை நோக்கிச் சென்றோம்.

ஸ்டேஷனில் இருந்த இன்ஸ்பெக்டர், ரவீந்திரனை உள்ளே வரும்படி அழைத்தார். உட்கார்ந்து கொள்ளும்படி எங்கள் இருவருக்கும் சைகை காட்டினார்.

''உங்க பொண்ணோட போட்டோ. அவளைப் பத்தின தகவலுங்க எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு வந்தீங்களா?''

ரவீந்திரன் அவற்றை ஏற்கனவே எடுத்துத் தயாராக வைத்திருந்தான். ராதாவின் படத்தை இன்ஸ்பெக்டர் கொஞ்ச நேரம் கூர்ந்து பார்த்தார். பின்னர் போட்டோவை மேஜையில் வைத்து விட்டு, ''பார்த்தா துறு துறுன்னு இருக்கிறா... புத்திசாலிப் பொண்ணா இருப்பா போலிருக்கே...'' என்றார் இன்ஸ்பெக்டர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பதினேழு வயழுதுன்னா நமக்கு கேஸ் பலமாயிருக்கும். மேஜராகாத பொண்ணொருத்தியை திருட்டுத்தனமா கடத்திக்கிட்டுப் போனதுக்காக, கடத்திக்கிட்டுப் போனவனுக்கு நிச்சயமா கடுமையான தண்டனை வாங்கித் தரலாம். ஆனா பாதியிலே கேஸை நிறுத்திட மாட்டீங்களே?''

''இல்லைங்க...''

''குட்... இப்பதான் ஒரு நியூஸ் கிடைச்சிருக்கு. மைசூரில போலீஸ் இளஞ்சோடி ஒண்ணைப் பிடிச்சு வச்சிருக்காங்க. அங்கே இருக்கிற போலீஸ் கிட்ட நேரில் போய் பேசித்தான் 'மாட்ட'ரை முடிக்க முடியும். இங்கேயிருந்து மைசூருக்குப் போக நம்மகிட்ட வாகன வசதி எதுவுமில்ல. நீங்கதான் இதை ஏற்பாடு செய்யணும். மற்ற ஏற்பாடுகளை நான் கவனிச்சுக்கறேன்.''

இன்ஸ்பெக்டர் ரவீந்திரனையே பார்த்தபடியிருந்தார்.

''ஏ.சியிடம் பர்மிஷன் வாங்கி என்னோட சப்—இன்ஸ்பெக்டரையும், நாலு கான்ஸ்டபிள்களையும் உங்க கூடவே அனுப்பிச்சுடறேன். ஆனா ஒண்ணு... சப்—இன்ஸ்பெக்டர் மலைக்குப் போறதுக்கு மாலை போட்டிருக்கிறாரு...''

சொல்லியவாறே அழைப்பு மணியை அடித்தார் இன்ஸ்பெக்டர். உள்ளே வந்த போலீஸ்காரரிடம் ''சுகுமாரனை வரச் சொல்லைய்யா...'' என்றார்.

இன்ஸ்பெக்டர், சப்—இன்ஸ்பெக்டரிடம் விஷயத்தைக் கூறிவிட்டு,

''நீங்க சாயந்தரம் ஆறு மணிக்கெல்லாம் இங்கே வந்திடுங்க. நல்ல காராக இருக்கணும். நாலு நாளாவது அங்கே நிற்க வேண்டி வரும். அப்புறம் எல்லாம் 'வேஸ்ட்'டாயிடும்.'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவீந்திரன் தனது பண நிலைமையை எண்ணிப் பார்த்தான். கையிலே ஆயிரத்திச் சொச்ச ரூபாய் தான் இருந்தது. அதை நினைத்தபோது தலைக்குள் குழப்ப மாயிருந்தது. பயமாயிருந்தது. தடுமாற்றம் உண்டானாற் போல இருந்தது. ஆனால் உடனடியாக எதையுமே பேச முடியவில்லை ரவீந்திரனால்.

''சுகுமார், நீ போய் இரண்டு கான்ஸ்டபிள்களையும் சேர்த்துக்க. உன்னோட ஒத்துவரத் தக்கவங்களா பாத்துக்கோ...''

சிறிது நேரம் கழிய இன்ஸ்பெக்டர் மெதுவான குரலிலே சொன்னார்:

''புரொபஸர் சார்... நீங்க எதைப் பத்தியும் யோசனை பண்ணாதீங்க. கவலைப்படாதேங்க. ராதாவோடதான் நிச்சயம் நீங்க ஊர் திரும்பப் போறீங்க. அப்படியே சாமூண்டீஸ்வரி கோயிலுக்கும் போயிடுங்க. வர வழியிலே நந்தி ஹில்ஸையும் பாருங்க... வந்தப்புறம் என்னை மறந்திடாம வந்து பார்க்கணும் என்ன...''

ரவீந்திரனின் முகத்திலே நன்றி பிரவகித்தது. அவனை யறியாமலே மனம் நெகிழ்ந்து குரல் தளும்பிற்று.

''நிச்சயமா பார்ப்பேங்க...''

வெளியே வந்த ரவீந்தரனைப் பார்த்தேன். முகம் வாடிச் சுருங்கியிருந்தது. எனக்கு அவனைப் பார்க்கவே கஷ்டமாயிருந்தது. நான் என்னவென்று கேட்க முதலே அவன் வாடகைக் காருக்கு கொடுப்பதற்கான பணப் பற்றாக்குறை பற்றி கவலையோடு கூறினான்.

''நாலு நாள்... அதுவும் மைசூருக்குப் போயிட்டு வர்றதுன்னா... அடேயப்பா! எப்படியும் ஐயாயிரத்துக்கு மேலே தேவைப்படுமே... என்கிட்ட ஆயிரத்து சொச்ச ரூபா தானே இருக்கு...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதுக்காக போவதை விட்டுவிட முடியுமா? நேரத்தை வீணாக்காம உடனே புறப்படறதுதான் நல்லது. நானும் உன்னோட வர்றேன். நீ வீட்டுக்கு போய் புறப் படுவதற்கு 'ரெடி' பண்ணு. நான் டாக்ஸியோட வீட்டுக்கு வர்றேன்.''

வியப்பு முகத்தில் தொனிக்க என்னைப் பார்த்தான் ரவீந்திரன்.

''யோ... பணத்திற்கு என்ன செய்யறது?''

''அதை பத்திக் கவலைப்படாதே. நான் பணங் கொண்டாரேன்...''

கண்கள் கலங்க என்னைப் பார்த்தான் ரவீந்திரன். வார்த்தைகளற்ற அவனது மன உணர்ச்சிகளை நான் புரிந்து கொண்டேன். அவனை என்னால் கொஞ்ச நேரத்துக்கு மேல் பார்க்க முடியவில்லை.

''அதெல்லாம் சரி. இப்ப நாம் மைசூருக்குப் போறோம். அங்கே ராதாவை மீட்கிறோம். அப்புறம் இங்கே அவளைக் கொண்டாந்துடறோம். ராதாவைப் பத்தி செய்திகள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியாகி, அவளைப் பற்றி எல்லாரும் பேசித் தீர்த்துட்டாங்க. இதுக் கப்புறம் அவளை யாரு கல்யாணம் செய்துக்குவாங்க? அவளை வீட்டிலேயே வச்சிருக்கப் போறீங்களா?''

சுகுமாரன் சொல்லிக் கொண்டிருந்த வார்த்தைகள் எனது நெஞ்சைத் தொட்டு உலுக்கின. ரவீந்திரன், கார் புறப்பட்ட நேரத்திலிருந்தே மௌனமாயிருந்தான். வெளியே கும்மிருள்.

''இவ்வளவு கால சப்—இன்ஸ்பெக்டர் சர்வீசில இப்படி நான் எத்தனையோ கேஸெல்லாம் பார்த்துட்டேன் ஸார்... முதல்ல இப்படி எல்லாருமே வருவாங்க... கடுமை யான வார்த்தையில 'கம்ப்ளெயிண்ட்' கொடுப்பாங்க. தனது பொண்ணை அவ விருப்பத்துக்கு மாறாக் கடத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டு போனதாயும், அந்தப் பொறுக்கிப் பயலை ஜெயில்ல போட்டே ஆகணுங்க என்றும் சொல்லுவாங்க. அந்தப் பொண்ணு அவங்கிட்ட இருந்து திரும்பி வரலைன்னா சாவுக்கு கூட அவ தன் மூஞ்சில முழிக்கக் கூடாது எம்பாங்க. ஆனா அது அந்தப் பொண்ணுக்கு ஒரு கொழந்தை பொறக்கிற வரை தாங்க. அப்புறம் பேரப் புள்ளையைக் கொஞ்சி சமாதானமாயிடுவாங்க. இதுக்கு எவ்வளவு செலவுங்க. வீண் செலவு தானே இது... இதை இப்போவே அந்தப் பொண்ணு கையில கொடுத்திடலாங்க .. என்னவோ இது என் அனுபவங்க...''

''ஸார்... ராணிப்பேட்டையிலே காப்பி சாப்பிட்டிருவோமா?'' என்றான் சுகுமாரன் கொட்டாவி விட்டபடியே.

''டிரைவர் ராணிப்பேட்டையில நிறுத்தப்பா...'' என்றேன் நான். எவ்வளவோ வற்புறுத்தியும் காப்பி சாப்பிடுவதற்கு மறுத்து விட்டான் ரவீந்திரன். நாம். காப்பி சாப்பிட்டுக் கொண்டிருந்த மேஜையின் கீழே, மல்லிகைப் பூக்கள் இதழ் இதழாய் உதிர்ந்து சிதைந்து நசுங்கிப் போய் கிடந்தன. அந்தச் சிதைவைப் பார்க்கையில் மனம் மிகுந்த சங்கடப்பட்டது. அந்த அழகும், வாசனையும் எவ்விதம் அர்த்தமிழந்து சிதைந்து போய் விட்டன என்று நினைத்த போதே மனதினுள் இனந்தெரியாத சோகம் பனிக்கட்டிப் போல அடர்ந்து பரவி அழுத்திற்று.

அந்த மல்லிகைப் பூக்களையே விசனத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான் ரவீந்திரன்.

மல்லிகைப் பூக்களை வெகு அக்கறையோடு தொடுத்தவாறே அப்பாவை செல்லமாக அதட்டிக் கொண்டிருந்தாள் ராதா. கமலம் உள்ளேயிருந்து வெளியே வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன ராதா, அப்பாவை இப்படியெல்லாம் அதட்டிக் கொண்டிருக்கிறாய்?''

''அதட்டக் கூடாதே... அதட்டக் கூடாதே... கொஞ்சமும் சத்தங் கேட்கக் கூடாது. சத்தங் கேட்ட உடனேயே அந்த இடத்துக்கு வந்திடுவீங்க...''

நாடக பாணியில் பேசிக் கொண்டிருக்கின்ற மகளையும், மனைவியையும் புன்னகையோடு பார்த்த வாறிருந்தான் ரவீந்திரன்.

''இதென்னம்மா இது? அப்பாவோட தானே பேசிக் கொண்டிருக்கிறேன்...''

சிணுக்கம் குரலில் எட்டிப் பார்த்தது.

அம்மாவின் முகம் கண்டிப்பான பாவனையில் இருந்து இன்னமும் மாறவில்லை. சிணுக்கம் முகத்திலே நிறைய அப்பாவைப் பார்த்தாள் ராதா.

ரவீந்திரன் குறுக்கிட்டான்.

''கமலம்... தோளுக்கு மிஞ்சினால் தோழன் தானே...''

ராதாவின் முகத்தில் பரவசம் கொஞ்சிற்று. அப்பாவின் அருகே குடுகுடுவென்று ஓடிப் போய் நின்றாள்.

''பாரம்மா, அப்பாவின் தோளுயரத்திற்கா, காதுயரத்திற்கா நான் நிற்கிறேன்னு...''

அம்மா லேசாய் புன்னகை துளும்பிடக் கூறினாள்:

''உங்க ரெண்டு பேரையும் பார்த்தா அப்பாவும் மகளுமாவா தெரியுது?''

''என்னப்பா சொன்னீங்க? தோளுக்கு மிஞ்சினால் தோழன்... இல்லேப்பா தோழி... நம்ப பழமொழிகளை எல்லாம் ஆண்பால்ல இருந்து பெண்பாலுக்கு மாற்ற வேணும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலம் தன்னை மறந்து கொல்லென்று சிரித்தாள். பின்னர் புன்னகையோடு உள்ளே போய் விட்டாள்.

''அப்பா என்னப்பா இது? எதையெடுத்தாலும் ஆண்களை மேன்மைப்படுத்துகிற விஷயங்கள் தான்! பழமொழி, கவிதை, இலக்கியம், சினிமா... எல்லாமே இதுதான்...''

அலுத்துக் கொண்டாள் ராதா.

''அப்பா, சில வேளை இதையெல்லாமே யோசிக்குறப்போ எனக்கு காளியைப் போல ரூபங்கொள்ளலாமான்னு தோணுது. ஒரு நாளல்ல பல நாளா என்னையே காளியா நான் கனவில கண்டிருக்கிறேன். ஆயிரங்கண்களும், ஆயிரங்கைகளும், கைகளில் சூலாயுதங்களுமாய்...''

ரவீந்திரன் இன்னமும் மூட்டம் விலகாத பரவசத்தோடு அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். ராதா அவனை உலுப்பினாள். ஆனால் அவன் அதற்கு உட்படாதவனைப் போல அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''எப்படியம்மா உன்னால் இப்படி எண்ணவும், பேசவும் முடிகிறது?''

மறுகணமே நூறு மணிகள் சிணுங்கிச் சலசலக்கும் அவளின் சிரிப்பாக. அடுத்த கணமே உணர்ச்சி பொங்கித் துளும்பிடும் அவள் முகத்தினில்.

''அப்பா...''

''சொல்லம்மா?''

''நான் யார்?''

''நீயே சொல்லு...''

''அம்மா நீங்க சொல்லுங்க...''

அம்மா புன்னகையாவாள். தலையைச் சரித்தவாறே அப்பாவையும் மகளையும் பார்ப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்பாவின் கனவு. அப்பாவின் நனவாகி விட்ட கனவு'' என்பாள். பார்வை அப்பாவைத் தொட்டிருக்கும்.

அவ்வளவு தான். ராதா வண்ணத்துப் பூச்சியாய் அம்மாவின் கன்னங்களோடு இழைவாள். ராதாவின் விழியோரம். பனித்துளியாய் கண்ணீர்த் தூவி ரகசியமாய் கரையும், அம்மா அதை நன்கு அறிவாள். தனது புளகாங்கித உணர்வில் அரும்பித் துளிர்த்த கண்ணீரை நெஞ்சினுள்ளே அந்தரங்கமாய் ஏந்திக் கொண்டே கனிவும் கண்டிப்பும் மயங்குகிற குரலிலே, ''இன்னும் நீ பச்சைப் பாப்பாவா?'' என்றபடி அவளைப் பார்ப்பான்.

......விம்மி விம்மி அழுதான் ரவீந்திரன். நான் அவனது தோளில் பரிவோடு கை வைத்தேன்.

''ரவி, ராதா கிடைச்சுடுவா... இன்னுங் கொஞ்ச நேரந்தான். தைரியமாயிரு...''

''அந்த மல்லிகைப் பூக்களைப் பார்த்ததுமே அவ நினைவு வந்திரிச்சு. யோ... அவ நினைவு இல்லாத இடம் எனக்கு ஏது? அவ என்ன சொல்லுவா தெரியுமா? நானும் ஒரு காளியைப் போல ஆயிரங்கைகளும். ஆயிரங் கண்களுமாய்...''

அவனது குரல் உடைந்தது.

''என்ன ஸார்... ஏன் நீங்க இப்படி அழுவுறீங்க? கலியாணமாகிப் போவப் போற பொண்ணுக்காக இப்படி அழுவுறீங்களே! எப்பவோ ஒரு நாள் இன்னொருத்தனுக்கு கழுத்தை நீட்டப் போற பொண்... எனக்குந்தான் ரெண்டு பொட்டைக் கழுதைங்க இருக்கு. எப்போ அதுங்களையெல்லாம் துரத்தப் போறேன்னு காத்துக்கிட்டிருக்கேன்...''

போலீஸ்காரர் சொல்லி விட்டு லொக்கு லொக்கென்று இருமினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ராதாவெல்லாம் அந்த மாதிரிப் பொண்ணில்லங்க. அவ அபூர்வமானவ. அபூர்வமாப் பொறந்தவ...''

நான் சொன்ன போது எனது கையை ரவீந்திரன் பற்றிக் கொண்டான். ''சத்தியமான வார்த்தை...''

''இருங்கள்'' என்று அதட்டுகிற ஆங்கிலத்திலே கூறிய உதவிக் கமிஷனர், ரவீந்திரனையே சிலகணங் களிற்கு உற்றுப் பார்த்தார். நெற்றி சுருங்கிற்று.

''மெட்ராஸ் யூனிவர்ஸிடி...'' என்றவாறே இருபத் தைந்து வருஷங்களின் பின்னால் அவனை இழுத்துச் சென்றார் உதவிக் கமிஷனர்.

''என்னைக் ஞாபகம் இல்லை... அவ்வளவுக்கு நான் கிழவனாகி விட்டேனா? மை காட்...''

முடி முற்றிலும் உதிர்ந்து போய் விட்ட பளபள வென்ற தலையை தடவியவாறே உதவிக் கமிஷனர் அட்டகாசமாகச் சிரித்தார்.

ராமகிருஷ்ணா! மனம் சுண்டு விரல் நீட்டிற்று. சுருள் சுருளான முடியும், கம்பீரமுமாய் காதல் இளவரசனாய் திரிந்த ராமகிருஷ்ணா!

''மிஸ்டர் ராமகிருஷ்ணா!''

''நோ... நோ... யுவர் பேட்ஜ்மேட் யுவர் இன்டிமேட் பிரண்ட்...''

ராமகிருஷ்ணாவின் கைகள், ரவீந்தரனது கைகளைப் பற்றிய வாஞ்சைதனில் துகள் துகளாய்க் கரைந்துப் போனான் ரவீந்திரன். அவனது கைத் தழுவலினுள் சுருங்கி அடங்கிப் போனாற்போல எண்ணிற்று ரவீந்திரனின்மனம். மூச்சு இனந்தெரியாத உணர்வினால் அடைத்து முட்டினாற் போல உணர்ந்து கொண்டான்.

''உணர்ச்சி வசப்படாதே ரவி. உனது கவலையை, கண்ணீரை அதன் முழுமையான அர்த்தங்களோடு என்னால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர முடிகின்றது. நான் இருக்கிறேன். ராதா எங்கேயிருந்தாலும் சல்லடை போட்டுத் தேடிக் கண்டுபிடித்துத் தர நான் இருக்கிறேன். என் நண்பனே, என்னை நம்பு... காப்பி சாப்பிடுவாயா? கூல் டிரிங்க்ஸ்ஸா?''

ரவீந்திரனின் உதடுகள் நடுங்கின.

''காப்பி...'' என்றான்.

''அந்த ஜோடியை ஸ்டேஷனில் இருந்து கூட்டிகொண்டு வா...''

இன்ஸ்பெக்டர் தலையைச் சொறிந்தார்.

''என்ன என்ன விஷயம்?''

''நேற்று மத்தியானமே அவர்களை ரிலீஸ் செய்துட்டாங்க ஸார்...''

''என்ன?''

''ஆமா ஸார்... அவர்கள் சித்தூர்க்காரங்க... மெட்ராஸ் காரங்க இல்லை... சொந்தக்காரர்களே வந்து கூட்டிப் போயிட்டாங்க...''

நெற்றியில் விரலால் சுரண்டியவாறு தலையைக் குனித்துக் கொண்டார் உதவிக் கமிஷனர்.

சிமெண்ட் தரை ரவீந்திரனது கால்களின் கீழே பொடிப் பொடியாய் உதிர்ந்து சிதறிப் பொல பொலத்தது.

"அதெப்படீங்க... அவளை யாரோ கடத்திக்கிட்டுப் போயிட்டாங்க. ரெண்டு நாளாச்சு. அதுக்குள்ளே என்ன வெல்லாமோ ஆயிருக்கும். இனி அந்தப் பொண்ணை மீட்டு வந்து என்னங்க பண்ண முடியும்? அணில் கொறிச்ச பழத்தை சந்தையிலே விக்க முடியுங்களா?''

அந்த தமிழ்ப் போலீஸ்காரர் மற்றவரைப் பார்த்துக் கூறியது எனது காதுகளில் தெளிவாக விழுந்தது. வெறுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடு அவர்களைப் பார்த்தேன். மற்ற போலீஸ்காரர் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார்.

''இல்லைங்க... இது கடத்தல் விஷயங்க...''

பாருங்க. நீங்கள் படித்தவர்கள். பெண்ணைக் கடத்திக் கொண்டு போனவன் நிச்சயமாக இதுவரைக்குள் அவளைக் கெடுத்து விட்டிருப்பான். அவர்கள் சில வேளை ஒருவரை ஒருவர் காதலிக்கவும் கூடும்.''

''அப்படியெல்லாம் இல்லை. நீங்கள் நினைக்கிற மாதிரியான பெண் அல்ல அவள். அவள் மிகவும் சிறந்த பெண்.''

இன்ஸ்பெக்டரின் கண்களில் ஏளனம்.

ராதாவுக்கு தலை வலித்துக் கொண்டேயிருந்தது. அரை குறையாகக் கண் விழித்துப் பார்த்தாள். கண்கள் எரிந்தன. உடம்பு அசதியாய் கிண்கிண்ணென்று வலித்தது. மெது மெதுவாக அந்தப் பயங்கரமான சம்பவம் நினைவிற்குவந்தது வீட்டிலிருந்து பள்ளிக்கூடம் போய்க் கொண்டிருக்கிறாள் அவள். நடந்து போய் கொண்டிருந்த பாதையில் எப்போதும் ஜன நடமாட்டம் குறைவு. இன்றைக்கு அபூர்வமாக யாருமே இல்லை. அவள் மட்டும் தான்.

திடீரென்று அவள் அருகே ஒரு கார் வந்து நின்றது. கணப்பொழுதுதான். காரைத் திறந்து கொண்டு இரண்டு மூன்று பேர் இறங்கி அவளை அப்படியே தூக்கி காரினுள் திணிக்க, அவள் அலற நினைத்து வாயைத் திறக்க என்னவோ மூக்கில் அழுத்த அவள் அலற முடியாமல் சோர்ந்து வாடி, வாடிய கொத்துப் பூவாய் மயங்கிச் சரிந்தாள்.

மலையாளத்தில் கூறினான் சத்யன்.

''சத்யன் யாரை விரும்பினானோ அவளையே கல்யாணமும் செய்து கொள்வான். எத்தனை நாள் இவளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துச் சிரித்திருப்பேன். ஒரு பதில் சிரிப்பு... ஹூம்... இது திமிரா அகம்பாவமா? எதுவாயினும் என்ன? இனி என்னோடு தான் வாழ்ந்தாக வேண்டும்... இந்தக் குட்டி...''

''ஆனாலும் எனக்கு பயமாயிருக்கிறது'' என்றான் வேணு.

''பயப்படாதே... எர்ணாகுளம் எம். எல். ஏ. பேரன் அவ்வளவு சாமான்யமானவல்ல. அதுவும் முன்னேறிக் கொண்டிருக்கிற சினிமா நடிகன்.''

''அது சரிதான்... ஏன் பயப்படணும்? சினிமாவைப் போல இவள் மீது வில்லத்தனமா பண்ணப் போறான். சத்யா... இவளை திருமணம் தானே செய்யப் போறான். சத்யன் என்ன சாதாரண ஆளா? கேரளக் குட்டிகளின்ர கனவுகளிலை இவன் ஒரு ராஜகுமாரனல்லோ?''

...தூக்கத்திலிருந்து விழித்தெழுந்த ராதா சுற்றும் முற்றும் பார்த்தாள். புதிய சூழ்நிலை. புதிதான அறை. புதிய படுக்கை விரிப்பு. புதிய தலையணைகள். சுவரிலே குச்சுப்புடி நடன மாது. மம்முட்டி, ஜெயபாரதி, மோகன் லால், அதன் அருகே இன்னொரு இளைஞனின் புகைப்படம். இவன்... இவனை ஞாபகம் வருகிறது. தன்னை அடிக்கடி பார்த்துச் சிரித்தவன். மோட்டார் சைக்கிளில் தன் பின்னாலும் முன்னாலும்அடிக்கடி சுற்றி வந்தவன்.ஒரு நாள் அழகிய பார்சலொன்றை அவளிடம் நீட்டியபடி 'ஐ லவ் யூ' என்று சொன்னவன். அந்தப் பார்சலை மறுகணமே ராதா, அவனது முகத்திலே விசிறியடித்த போது வன்மம் பொங்க அவளைப் பார்த்து விட்டுச் சென்றவன். பிறகும் பிறகும் அவளைத் தொடர்ந்தவன். ஹம்ஸா மூலம் தன்னைப் பற்றி சொல்லுவித்தவன். அந்தப் பொறுக்கியின் வேலையா இது? நிதானமாக எழுந்தாள் ராதா. மூடியிருந்த ஜன்னல் கதவை மெதுவாகத் திறந்தாள். காற்று முகத்தை வருடிற்று. எதிரேயே தென்னை மர ஓரமாக முண்டு கட்டிய பெண் ஒருத்தி. காதினுள் சத்தமிட்டு அறைகின்ற யேசுதாஸின் பாட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொட்டைச் சுவரில் ஒட்டியிருக்கிற மம்முட்டியின் சினிமா போஸ்டர். யாத்ரா. பாலு மகேந்திராவின் புதிய படம். அவளுக்கு மனது திக்கென்றது. உடல் நடுங்கிற்று. லேசாக வேர்த்தது. அவளுக்கு மலையாளம் சிறிதளவு எழுத வாசிக்கத் தெரியும். பிரேமா சொல்லிக் கொடுத்திருந்தாள். 'யாத்ரா'வின் அருகே சிறியதொரு பெட்டிக்கடை. அதன் நெஞ்சிலே தெரிந்த விளம்பரத்தைப் படித்தாள். 'ஐயப்பன் ஸ்டோர்ஸ், எர்ணாகுளம் ஜங்ஷன்...'

வெளியே கதவு திறக்கும் சத்தம் கேட்டது...

ஆவலோடுன் திரும்பினாள். வயதான கிழவியொருத்தி புன்னகையோடு நின்றாள். அழகாகத் தோன்றினாள் அவள்.

''மோளே'' என்றாள் கனிவாக கிழவி.

ராதாவின் மூளைக்குள் சட்டென்று வெளிச்சம் கீற்றுகளாய் பொங்கிற்று. புன்னகை செய்தவாறு கிழவியின் அருகே சென்றாள். எதிர்பாராத விதமாக அவளைத் தள்ளினாள். கிழவி மல்லாக்காகச் சரிந்தாள். மறுகணமே கதவைத் திறந்து கொண்டு ராதா மான் குட்டியாய் வெளியே ஓட ஆரம்பித்தாள்......

''ரவி, உன்னை நினைத்து நான் பெருமைப் படுகின்றேன். உனது பெண் நிர்ப்பந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டாள். அவன் அவளைக் கொண்டு போய் வைத்திருந்த அந்தச் சில நாட்கள் இம்சைக்காக அந்த அயோக்கியனோடேயே அவளது வாழ்வு திருமணம் என்ற போர்வைக்குள் கசங்கி உருவிழந்து போவதைத் தடுத்து அவளை அவள் விருப்பப்படியே வாழ வைத்து விட வேண்டுமென்று நீ படுகிற அவஸ்தை இருக்கிறதே— அதை என்னால் நன்றாக உணர முடிகிறது. கற்பழிப்போ, கடத்திச் செல்லலோ ஒரு இம்சை தான். அதன் பொருட்டு ஒரு யுவதி போராடுவதும், அதிலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்து விடுபட்டு புது வாழ்வு தொடங்குவதும் ஆணைப் போலவே பெண்ணுக்கும் உள்ள உரிமை என்று நீ சொன்னாய் பார். ரவி, யூ ஆர் கிரேட். உன்னைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன். எனினும் என்னால் உனக்கு உதவி செய்ய முடியவில்லையே என்பது பெரிய கவலை. ஆனால் உனது மகள் எவ்விதமான சேதமுமின்றி உன்னிடம் திரும்பி வருவாளென்று நான் நம்புகிறேன். உன்னைப் போன்ற அப்பாவின் மகளுக்கு சேதமென்பது எவ்விதம் தான் சாத்தியமாகும் ?''

ராமகிருஷ்ணாவின் கண்களை நீர்த் திரை மறைத்தது. நாங்கள் காரில் ஏறிக் கொண்டோம்.

●1988

□

UNIVERSITY OF PERADENIYA
3-7-1995
LIBRARY

# அவளும் அவனும்

அவள் அழகாகவே இருந்தாள். பார்த்தவுடன் மனதை வசீகரிக்கின்ற புன்னகை. மல்லிகை மொட்டுகளாய் பல் வரிசை எப்போதுமே முகத்தினிலே மணக்கிறது. அந்தப் பளிச்சென்ற புன்னகை. கூரான மூக்கு.சீராயமைந்த ரோஜா உதடுகள். நடந்து வருகின்றபோதே மற்றவர்களிடமிருந்து தனியாகத் தெரிகின்ற கம்பீரம். எந்த வண்ணத்திற்கும் பொருந்திப் போகின்ற ஒரு வித மஞ்சள் வண்ணமான உடல் நிறம். கண்ணுக்கு எப்போதுமே சற்று அதிகமாகத் தான் மையிட்டுக் கொள்வதால் புன்னகைக்கு அடுத்த தாயோ சமமாகவோ எ ரையும் தொடுகின்ற கண்கள் அவளுக்கு.

பஸ்ஸிலிருந்து இறங்கி ஒவ்வொரு நாளும் அவள் ஐந்து நிமிஷ தூரத்திற்கு நடந்து சென்றே வேலை செய்கின்ற இடத்தை, அந்த 'டிப்பார்ட்மெண்டல் ஸ்டோரை' அடைய வேண்டும். 'எலக்ட்ரானிக்ஸ்' சம்பந்தப்பட்ட விற்பனை நிலையம் அது. கடுமையான சட்ட திட்டங்கள் அங்கே. எல்லாவற்றையும் விட மிகவும் முக்கியமானது அங்கே மிக வசீகரமாகத் தோற்றங் கொடுக்க வேண்டுமென்பதுதான்.

கமலாதான் அவளிற்கு அந்த 'சேல்ஸ் கேர்ள்' வேலையினை வாங்கிக் கொடுத்தவள். தற்செயலாக ஒரு ஞாயிற்றுக் கிழமை பின்னேரம், கமலாவை தேவிகா சந்தித்தபோது பழைய நட்பின் தொடர்புகள் மீண்டும் அரும்பி மலர்ந்தன. தேவிகா தன்னுடைய அன்றாடக் கஷ்டங்களையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலம் பற்றிய அச்சத்தையும் கமலாவிடம் விவரித்தாள் கமலா மிகப் பரிவோடு அவள் சொல்லியவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''இன்னும் கொஞ்ச நாளைக்கு நீ பொறுத்துக்கொள்... எங்களுடைய ஸ்டோரில் சிலர் தேவைப்படுகிறார்கள். ஆனால் ஒன்று, சில கட்டுப்பாடுகள் அவர்களிடமுண்டு. மிகக் கச்சிதமாகத் தோற்றமளிக்கிறவர்களைத்தான் அவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளுவார்கள். உன்னைப் பொறுத்தவரையில் அதிலொன்றும் பிரச்சினை இல்லை. நீ மிகவும் அழகானவள். ஆனால் முதல் சில மாதங்களிற்கு உனது 'டிரஸ்'சுக்கு நீ கொஞ்சம் அதிகம் செலவழிக்க வேண்டும். மற்றது உன்னை யாரும் வேலை நேரங்களில் இங்கே வந்து சந்திக்கக் கூடாது. அடிக்கடி நீ லீவு எடுக்கக் கூடாது. எந்நேரமும் வேலை செய்யத் தயாராயிருக்க வேண்டும். தொழிற் சங்கம் அது இதென்றால் உடனேயே டிஸ்மிஸ்...''

மூச்சை இழுத்துக்கொண்டே தொடர்ந்தாள் கமலா.

''ஆனால் தேவி... இன்றைக்கு நாம் எங்கே வேலை தேடிப் போனாலும் இதைவிட மோசமான நிலைமைகள் தான் உள்ளன. கையிலே சம்பளத்தை நமக்குத் தருகிற வேளையிலேயே, நம்மை தங்களுடைய அடிமைகள் போல நினைக்கிற நிலைமைதான் எங்குமே உள்ளது. அவற்றோடு ஒப்பிடுகிறபோது இங்கே நல்ல சுதந்திரம் இருப்பதாகவே எனக்குப் படுகின்றது... எதற்கும் யோசித்து உன்னுடைய முடிவைச் சொல்லு...''

தேவிகா தீர்மானமாக கமலவைப்பார்த்தாள்.

''இல்லை கமலா... நீ சொன்னதற்குப்பிறகு நான் இதைப்பற்றி யோசிக்க ஒன்றுமில்லை. என்ன கஷ்டமான வேலையாக இருந்தாலுங்கூட, இப்போது எனக்குள்ள நிலைமையிலே அதை நான் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலா நிறைவோடு அவளைப்பார்த்தாள்: ''நல்லது... நீயும் என்னோடு வேலைக்கு வந்தாயானால் எனக்கு மிகச்சந்தோஷமாயிருக்கும். நான் உன்னை இன்னும் சில நாட்களுக்குப்பிறகு வந்து சந்திப்பேன்...''

சொல்லிவைத்து பத்து நாட்களின் பின்னர், ஞாயிற்றுக்கிழமை காலை—கமலா, தேவிகாவை அவளது வீட்டிலே வந்து சந்தித்தாள்... கமலாவைக் கண்டதும் திகைத்துப்போய்விட்டாள் தேவிகா. சாதாரண நேரத்திலேயே அவளது குடிசை அலங்கோலமாயிருக்கும். மூன்று தினங்களாய் பெய்த மழை குடிசையை இன்னும் மோசமாக்கியிருந்தது. முன்புறத்திலே ஆடுகள் குட்டிகளோடு எவ்வித இடையூறுமின்றிப் படுத்திருந்தன. அவற்றை ''சூசூ'' வென்று கலைத்தபடியே கமலாவை அழைத்து உள்ளே கூட்டிச் சென்றாள் தேவிகா.

''நிலமெல்லாம் தண்ணீர் ஊறிவிட்டது. இந்த சின்ன ஸ்டூலில் நீ உட்கார்ந்துகொள். உனது சேலை கசங்கிப் போய்விடும். சேலையைக் கொஞ்சம் உயர்த்திக்கொண்டு உட்கார்... நீ ஒரு 'கார்ட்' போட்டிருந்தால் நானே உன்னை வந்து சந்தித்திருப்பேன்... இங்கேயெல்லாம் நீ வந்து...''

தேவிகாவிடம் பரபரப்பு. வருத்தம். மெலிதான கோபம்.

புன்னகையோடு அவளை ஏறிட்டாள் தேவிகா.

''இப்போது என்ன?... நீ ஏன் இவ்வளவு பதட்டப் படுகிறாய்? எல்லா இடத்திலுந்தான் மழை பெய்திருக்கிறது. இப்படித்தானிருக்கும்... அதெல்லாம் சரி, இப்போது நீ என்னோடு புறப்பட்டு வரப்போகிறாய்...''

கையிலிருந்த பார்சலைப் பிரித்தவாறே சொன்ன கமலாவை வியப்போடு பார்த்தாள் தேவிகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எங்கே போக?''

''டெய்லர் கடைக்கு...'' சொன்னவாறே பார்சலி னுள் இருந்த மூன்று பிளவுஸ் துணிகளை வெளியே எடுத்தாள் கமலா. ''உனக்கு பிளவுஸ் தைக்கவேண்டும். இந்தக் கலர்கள் உனக்குப் பிடித்திருக்கிறதா பார்?... உனக்கென்ன... உன்னுடைய நிறத்துக்கு என்ன 'கலரா' யிருந்தாலும் அது நன்றாக 'மாட்ச்' ஆகும்... ஏன் இப் பிடித் திகைத்துப்போய் நிற்கிறாய்? கையில்தான் வாங்கிப் பாரேன்... பிடி...''

திடீரென்று இதயத்துள் நெகிழ்வு பொங்கிற்று தேவி காவுககு. தொண்டை அடைத்து வார்த்தைகள் நெஞ்சி னுள்ளேயே அமுங்கிப் போயின. பொட்டென்று கண் களில் கண்ணீர் உடைந்தது. அந்தப் பிளவுஸ் துணிகளை கையில் வாங்கியபடியே கணங்களாய் பேச்சற்று நின்றாள்!

''என்ன கமலா... இதெல்லாம் எனக்கு... எனக்குத் தானா?...''

கமலா புன்னகை செய்தாள்:

''உனக்கே... இதோ... இந்த இரண்டு ஸாரிகள் கூட உனக்கே... ஏன் தெரியுமா? இன்றைக்கு ஞாயிற்றுக் கிழமை இருபத்தெட்டாந்திகதி. நீ முதலாந்திகதியிலிருந்து என்னுடைய ஸ்டோருக்கு வேலை செய்ய வருகிறாய்... அதற்கான முன்னேற்பாடு இது... இதையெல்லாம் பெரிதாக எடுக்காதே... இந்தப் பொருட்களுக்கான பணத்தைக் கொஞ்சங்கொஞ்சமாக எனக்கு நீ திருப்பித் தந்துவிடு அதுவும் அவசரமாயில்லை... அதையெல்லாம் பிறகு பேசிக்கொள்ளலாம்... இப்போது நீ புறப்படு...''

தேவிகாவின் தாய் அப்போதுதான் தண்ணீர்க் குடத் துடன் அவசர அவசரமாக உள்ளே வந்தாள். எதிரே ஸ்டூலில் வண்ணப் பூவாய் உட்கார்ந்திருக்கிற கமலாவைக் கண்டதும் திடுக்கிட்டுப் போனாள். பின்னர் தன்னைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதாரித்துக் கொண்டே தண்ணீர்க் குடத்தை குடிசை மூலையிலே வைத்துவிட்டு அவசரமாகவே வெளியே போனாள். வெளியே அவளுடைய இரண்டு பெண்களும் ஒதுக்கத்தில் நின்று பார்த்துக் கொண்டிருப்பதனைக் கண்ணுற்றாள். உள்ளே வெகு நேர்த்தியாக உடை உடுத்தி அழகாக உட்கார்ந்திருக்கின்ற அந்தப் பெண் யாரென்று அவர்களைப் பார்த்து மௌனத்தாலேயே வினவினாள் தாய்.

''அந்தப் பெண், அக்காவைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறாள். என்ன அழகான ஸாரி உடுத்தியிருக்கிறாள் பார்த்தாயா ? அசப்பிலே பார்த்தால் ஸ்ரீதேவி மாதிரி இருக்கிறாள்...''

தாய்க்கு உள்ளே போவதா வெளியே நிற்பதா என்று முடிவினுக்கு வரமுடியவில்லை. தீர்மானத்துக்கு வர இயலாமல் நின்றவளை வெளியே வந்த தேவிகா சுய நினைவிற்குக் கொண்டு வந்தாள். வந்திருந்தவள் யாரென்பதைக் கூறிவிட்டு, ''பின்பக்கத்திலே— காயப்போட்ட துணி அரைகுறையாகத்தான் காய்ந்திருக்குது. இப்போது கமலாவோடு வெளியே போகணும்... என்ன செய்கிறது?'' என்றாள் தேவிகா.

தாய் தெளிவோடு அவளைப் பார்த்தாள்: ''உன்னுடைய சீலை ஒன்று பெட்டிக்குள்ளே இருக்கவேணும்... எனக்கு நன்றாக நினைப்பில் இருக்கிறது...''

தேவிகாவிற்கு தலையிலிருந்த குழப்பம் பாதி குறைந்தாற் போலிருந்தது. ''அப்படியிருந்தாலும் அது கசங்கிப் போய்த்தானிருக்கும். அதுக்கு ஏற்ற பிளவுசும் வேணுமே...''

''நான் உள்ளே போய்ப் பார்க்கிறேன்... எதுக்கும் நீ முதலில் போய் அந்தப் பெண்ணோடு பேசிக்கொண்டிரு...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினைந்து நிமிஷங்களில், மங்கிப்போன அந்த நீல நிற ஸாரியையும், பிளவ்சையும் இஸ்திரி போட்டுக் கொண்டு வந்துவிட்டாள் தாய். அவற்றை அணிந்துகொண்டு கமலா வோடு புறப்பட்டபோது தேவிகாவுக்கு கொஞ்சம் வெட்க மாகவே இருந்தது.

முதல் நாளன்று புதிய ஆடைகளை அணிந்து கொண்டு வேலைக்குப் புறப்பட்ட மகளைப் பார்த்ததும் திகைத்து ஸ்தம்பித்துப் போய் நின்றுவிட்டாள் தாய். மெல்லிய நீலவர்ணப் புடவையினுள் பளிச்சென்று தோன் றிய மகளின் அழகை அன்றுதான் கண்டாற்போல் பரவசமடைந்தாள் அவள்.

''என்னுடைய கண்ணே பட்டுவிடும் போலிருக்குது... ராசாத்தி மாதிரி இருக்கிறாய்... வீட்டிலே இனி கொஞ்சம் பெரிய கண்ணாடியாய் வாங்கி வைக்கவேணும்...''

மகளின் அருகே போய் அவளது நெற்றியிலே துளிர்த் திருந்த வியர்வையை மெல்லத் துடைத்துவிட்டாள் தாய்.

தங்கள் பகுதியிலே வந்து குதித்த தேவதையைப் போல இப்போது தேவிகாவைப் பார்த்தார்கள் அந்தப் பகுதிப் பெண்கள். அவளோடு வலிந்து பேசினார்கள். சிரித்தார்கள். நேயங் கொண்டார்கள். தங்களையும் அவளைப் போலவே வேலையில் சேர்த்துவிடும்படி மெல்லிய குரலிலே இறுதியாகக் கேட்டுக்கொண்டார்கள், தேவிகாவின் கைகளைப் பற்றியபடியே.

தேவிகா இரண்டு நாட்களாக அவனை அவதானித் திருக்கின்றாள். பஸ்ஸிலிருந்து இறங்கி அவள் நடக்கத் தொடங்கியதும் அவனும் சொல்லிவைத்தாற்போல அவளைப் பின்தொடர்கின்றான். திரும்பிப் பார்த்தால் வேறெங்கோ பார்வையைத் திருப்பிக்கொண்டு நடந்து வருகின்றான், காலையிலும் மாலையிலும் இப்படித்தான். ஸ்டோர்சிலிருந்து பஸ் நிலையம், பஸ் நிலையத்திலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்டோர்ஸ் வரை. சந்தேகமில்லாமலே தன்னை அவன் தொடர்கிறானென்பதனை தேவிகா நன்றாக உறுதிப்படுத்திக் கொண்டாள்.

மூன்றாவது நாளும் அவன் அப்படியே அவளைப் பின்தொடர்ந்து நடந்து வந்து கொண்டிருந்தபோது திடுமென அவனை அவள் திரும்பிப் பார்த்தாள். அவன் அதை எதிர்பார்த்திருக்கவில்லை என்பதனை அவனுடைய திகைத்துப்போன முகம் தெளிவாகவே எடுத்துச் சொல்லிற்று.

''என்ன விஷயம்? எந்தநாளுமே என்னைப் பின்தொடர்கிறாயே... உனக்கு வேறே எந்த வேலையும் இல்லையோ?...''

அந்த வார்த்தைகள் அவனை உதைத்த கடுமையில் என்ன செய்வதென்றே தெரியாமல் அவன் அசைவற்று நின்றான். அந்தக் கணங்களிலேதான் அவனுடைய முகத்தினை அவள் நன்றாகவே கண்டு கொண்டாள்.

அவன் அழகாகவே இருந்தான். சுருள்முடி. பார்த்தாலே உடனே மனதில் பதிந்துவிடுகிற முக அமைப்பு. கம்பீரமான உடல் வாகு. பளிச்சென்று தோன்றினான்.

தேவிகா அதே வேகத்தில் திரும்பி, மீண்டும் நடக்க ஆரம்பித்தாள். கொஞ்ச தூரம் நடந்தவளுக்கு திரும்பிப் பார்க்க வேண்டும் போல மனம் உந்தியது. திரும்பினாள். ஆச்சரியமாயிருந்தது. இன்னமும் அவன் நின்ற இடத்திலேயே— அதே நிலையில் நின்றிருந்தான்.

தான் இவ்வளவு கடுமையாக யாரோடும் இதுவரை காலமும் நடந்ததில்லையே என்று நினைத்தபோது இவளுடைய மனதில் இலேசான துயரம் கீறிட்டது. அவனை ஒருமுறை உறுத்துப் பார்த்ததோடு நிறுத்தியிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக ஆத்திரத்தோடு ஏக வசனத்திலே திட்டியிருக்கத் தேவையில்லையே என்று மனம் அங்கலாய்த்துக் கொண்டது.

ஸ்டோர்ஸில் ஆள் நடமாட்டம் குறைந்தபோது இவள் சாவகாசமாக நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். வெளியிலே இருந்து குளுகுளுவென்று காற்று வீசிக்கொண்டு உள்ளே நிறைகையில் உடலுக்கு மிகவும் இதமாயிருந்தது. எதிரேயுள்ள சடைத்துச் சிலிர்த்த வேப்ப மரத்தின் உபயமே அந்தத் தென்றல். காற்றினைப் போலவே மனதினை நிறைக்கின்ற கரும்பச்சையான வேப்பிலைகளில் இப்போது துணுக்குகளாய் தலைநீட்டு கின்ற மஞ்சட் பூங்கொத்துகள். வெளியே சென்ற அவளது பார்வையிலே இப்போது மீண்டும் அவன் தோன்றினான் திடுமெனவே.

தேவிகா திகைத்துப் போனாள்.

இவன் வெய்யிலுக்காகத்தான் வேப்பமரத்தின் கீழே வந்து நிற்கின்றானா, அல்லது தன்னைப் பார்ப்பதற் காகவா?

தேவிகா யோசனையோடு பெருவிரலால் முன்பற் களை லேசாகத் தட்டியவாறே, வேப்பமரத்தைப் பார்த் துக்கொண்டிருந்தாள்.

அவன் பார்வை இப்போது தன்னை நோக்கிப் பரவு வதை அவள் உணர்ந்தவாறே நினைத்தாள். 'காலையில் இவனுக்குக் கொடுத்த திட்டுதல் போதாமலிருந்ததாலே தான் இப்படி இவன் வந்து நிற்கிறானா? இவனுக்காக இரக்கப்பட்டதே தவறுதான் போல இருக்கிறது... சரி. சரி... இனி அப்படி நடக்கட்டும், பார்ப்போம்...'

கமலா உலுப்பியபோதுதான் மீண்டும் சுயநினைவிற்கு வந்தாள் தேவிகா: "என்ன தேவி... சாப்பாட்டைக்கூட மறந்து போய் உன் பாட்டுக்கு யோசனையிலே அப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூழ்கிப் போய் விட்டாய்... என்ன விஷயம்? எனக்குச் சொல்லு... ஏதாவது அப்படி இப்படியா?...''

வெட்கமுற்ற பார்வையோடு தேவிகா அவளைப் பார்த்தாள்.

''இல்லை... அப்படியொன்றுமேயில்லை...''

கமலா அவளை ஊடுருவினாள்.

''இல்லை தேவி... நீ எதையோ எனக்கு மறைக்க நினைக்கிறாய்... ஆனால் அதைப்பற்றி ஒன்றுமில்லை... என்னவானாலும் நீ என்னிடம் சொல்லலாம். எதைப்பற்றியும் கூச்சப்படாதே... ஏன், உனது வீட்டில் ஏதேனும் கஷ்டமா?...''

தேவிகாவிற்கு மனதினுள் என்னவோ கனத்தது. மிக்க நன்றியோடு கமலாவைப் பார்த்து, ''இல்லை... அப்படி ஒன்றுமே இல்லை...'' என்றாள். பிறகு இருவரும் சாப்பிடுவதற்காக டிபன் காரியர்களுடன் உள்ளே சென்றார்கள். போய்க் கொண்டிருக்கையில் தேவிகாவைப் பார்த்து இளவரசி ஆச்சரியமான குரலிலே, ''என்ன தேவி... முகம் வாடிப் போயிருக்கிறாய்?'' என்று கேட்டாள்.

கமலா அர்த்தபுஷ்டியோடு தேவிகாவைப் பார்த்து, ''இதற்கு என்ன பதிலினைச் சொல்லப்போகிறாய்?'' என்று கேட்டாள். தேவிகா எதையும் பேசாமலே டிபன் காரியரைத் திறந்தாள்.

மீண்டும் அதட்டுகிறாற்போல, ஆனால் தணிந்த குரலிலே, ''நீ ஏன் கையலம்பவில்லை?'' என்று கேட்டாள் கமலா. அவளைப் பார்க்கவே சங்கடமாயிருந்தது தேவிகாவுக்கு இப்போது. கையை அலம்பிக்கொண்டே நினைத்தாள். 'நான் இதை அப்போதே கமலாவுக்கு சொல்லியிருக்கலாம்... இவன் என்னைப் பின் தொடர்ந்து வந்தானென்பதைச் சொல்ல நான் ஏன் தயங்கினேன்... அதுவும் இப்படியான ஒரு நல்ல சிநேகிதிக்கு...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டு முடிந்து 'கவுண்டர்' பக்கமாக வந்ததும் வேப்பமரத்தடிக்குத்தான் பார்வை சென்றது. இன்னும் அவன் நின்றிருந்தான். இவள் பார்த்ததும் அவசரமாக மறுபக்கமாகத் திரும்பி நின்று கொண்டான். இவளுக்கு சிரிக்க வேண்டும் போலிருந்தது, அவனது அவசரத்தைப் பார்த்து. தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள்.

பஸ்ஸிலிருந்து இறங்கியதும் வழமையாகவே அவன் நிற்குமிடத்திலே தேவிகாவின் பார்வை விழுந்தது. கடந்த இருபது நாட்களிலும் இன்றுதான் அவன் அந்த இடத்திலே காணப்படவில்லை. எவ்வளவோ திட்டினபிறகும் அவளை அவன் தொடர்ந்து வந்துகொண்டேயிருந்தான்.

இன்றைக்கு அவன் எங்கே போயிருப்பான்? நேற்றும் அவனை அவள் திரும்பிப் பார்த்தாள். முகம் நன்றாகத் தானிருந்தது. ஆகையால் ஏதும் சுகவீனமாயிருக்க நியாய மில்லை, எங்காவது அவசரமாக போயிருக்கலாம். அவன் எங்கு போனால்தான் எனக்கென்ன என்று தன்னையே இப்போது கடிந்து கொண்டாள் தேவிகா. அவளைத் தாண்டிக்கொண்டு ஒருவன் வேகமாகச் சைக்கிளில் சென்றதைப் பார்த் தாள் தேவிகா. இதுபோல துளிர் நீல ஷர்ட்டை அடிக்கடி அவன் அணிந்து வந்ததை அவள் கண்டிருக்கிறாள். சைக்கிளில் போனவன் திரும்பிப் பார்க்காமலே வேகமாகப் போய்க்கொண்டிருந்தான். இவளையறியாமலே மனதினுள் ஏமாற்றம் பெருமூச்சு விட்டது.

அவனாயிருந்தால் நிச்சயம் திரும்பிப் பார்த்திருப்பான் என்று தேவிகாவின் மனம் கூறிற்று. பின்னர் அலுத்தும் கொண்டது. இன்றைக்கு அவளும் துளிர் நீலத்திலேதான் ஸாரி அணிந்திருந்தாள்.

தங்கச்சி பவளமணி, சம்பளம் எடுத்ததும் இதே போலே ஸாரியொன்று தனக்கு வாங்கித் தரும்படி கேட்டிருந்தாள். அதுமட்டுமில்லை, ஒவ்வொரு நாளும் அக்காவிற்கு அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் தேநீர் கலந்து கொடுப்பவள். அக்காவின் துணிமணி களை எல்லாம் அலம்பிப் போடுவது, இஸ்திரி போட்டு வந்து கொடுப்பது எல்லாமே அவள்தான். முன்பை விட இப்போது குடிசையையும் நல்ல துப்புரவாக அவளே கூட்டிப் பெருக்குகின்றாள். முந்தாநாள் காலையில் தேவிகா வுக்கு அருகாக வந்து காதோடு கிசுகிசுத்தாள் பவளமணி:

''அக்கா, எனக்கும் உன்னைப்போல வேலைக்குப் போக விருப்பமாயிருக்கிறது. என்னை உனது ஸ்டோரிலே சேர்த்து விடுகிறாயா?''

திகைத்துப் போய் அவளைப் பார்த்தாள் தேவிகா. பவளமணி அசப்பில் அப்படியே தேவிகாதான். நிறம் மட்டும் மங்கலாக.

''வீட்டுக்குள்ளேயே இருக்க அலுப்பாய் இருக்கிறது. வேலைக்குப் போனால் சந்தோஷமாயிருக்கலாம்... அக்கா, வேலைக்குப் போகத் தொடங்கினத்துக்குப் பிறகு? நீ எவ்வளவு அழகாகிவிட்டாய். உன்னைப் போல வர நான் ஆசைப்படுகிறதிலே என்ன தவறிருக்கிறது?''

தேவிகா திகைப்பிலிருந்து மீண்டாள். ''நீ என்னவோ நினைத்துக்கொண்டு என்னவோ பேசுகிறாய்...''

''இல்லை அக்கா... அம்மாவும் இதை உன்னோடு பேசும்படிதான் சொன்னாள்...''

நிறுத்திவிட்டு, தேவிகாவைப் பார்த்தபடியே தொடர்ந் தாள் பவளமணி.

''அக்கா... நான் அதிகமாகப் பேசுகிறேன் என்று நினைக்க வேண்டாம். உண்மையாகச் சொன்னால் இந்தப் பக்கத்திலே உள்ள எல்லாப் பெண்களுமே உன்னைப்போல இருக்கவே விருப்பப்படுகிறார்கள். உன்னைப்பற்றி இதனாலே எங்களுக்கு எவ்வளவு பெருமையாக இருக்கிறது தெரியுமா? நீ வேலைக்குப் போனதுக்குப் பிறகு என்னென்ன பொருட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையெல்லாம் வாங்கித் தீரவேண்டுமென்று அம்மா கணக்குப் போட்டு வைத்திருக்கிறாள் என்று உனக்குத் தெரியுமா... உன்னோடு சேர்ந்து நானும் வேலைக்கு வரத் தொடங்கினால் இன்னும் எவ்வளவு நன்றாக நாம் இருக்கலாம்...''

சொல்லிக்கொண்டிருக்கையிலேயே, பவளமணியின் முகத்தில் எல்லையில்லாத பரவசம்.

''சரி இதைப்பற்றி பிறகு பேசலாம்'' என்று கதையினை அவ்வளவோடு முடித்தாள் தேவிகா. இந்த மாதம் சம்பளத்தை எடுத்ததும் என்னென்ன செய்ய வேண்டும் என்ற பட்டியலை முதன் முறையாக மனதினுள்ளே கொண்டு வந்தாள் தேவிகா. ஆயிரத்து இருபது ரூபாவுக்கு கணக்கு வந்தது. இவள் திகைத்தே போனாள். இவ்வளவுக்கும் அவளது மாதச் சம்பளம் முன்னூற்றி இருபத்தைந்து ரூபா.

திடீரென்று கேட்ட சைக்கிள் மணி ஓசை அவளது யோசனைகளை நிறுத்திற்று. எதிரே சைக்கிளில் அந்த துளிர்நீல ஷர்ட்காரன் வந்துகொண்டிருந்தான். இவனை அவள் முதற்பார்வையிலேயே அறிமுகமில்லாதவனாகக் கண்டாள். இவன் ஏதோ அவசரத்திலே விரைந்து அவளைத்தாண்டிச் சென்றான். இப்போது மீண்டும் அவனைப்பற்றிய நினைவு தேவிகாவின் மனதிலே அடியெடுத்து வைத்தது.

அவனைப்பற்றி ஒருநாள் கமலாவும் அவளிடம் மிகவும் நாசுக்காகக் கேட்டிருக்கின்றாள்.

''என்ன தேவி... நானும் சில நாளாக கவனித்துப் பார்த்தேன். யாரோ ஒருவன், நீ வேலை முடிந்து போகிற போது உன்னையே பின்தொடர்ந்து வருகிறான்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவிகா மனதினுள்ளே. உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு சாதாரணமாகச் சொன்னாள்; ''அப்படியா...? நான் கவனிக்கவில்லையே...''

அந்தப் பதில் கமலாவைத் திருப்திப்படுத்தவில்லை.

''என்னவோ எனக்குத் தெரியாது. இந்தக் காலத்திலே நம்மை இலேசாகவே ஏமாற்றி விடுவார்கள். கவனமாக இருந்து கொள். அவசியம் ஏற்பட்டால் உன்னுடைய செருப்பையே நீ உபயோகித்துக் கொள்ளலாம்... அல்லாவிடில் பிறகு வருத்தப்பட வேண்டிவரும்...''

தேவிகாவுக்கு கமலாவின் வார்த்தைகளிலுள்ள முரட்டுத்தனத்தைக் கேட்க என்னவோ போலிருந்தது. ஆனால் அப்போது அதையிட்டு எதுவும் சொல்லத் தோன்றவில்லை. புன்னகையோடு அவளைப் பார்த்தாள்.

''சரி கமலா... இனிமேல் நான் அவனைக் கவனித்துக் கொள்கிறேன்...'' என்றாள் தேவிகா. ''சும்மா தமாசுக்காகத்தான் கேட்கிறேன். அவன் எப்படியிருப்பான்?''

இப்போது கமலா சத்தம் போட்டுச் சிரித்தாள்.

''அவனா? அவன் அழகாகத்தான் தோற்றமளிக்கிறான். சினிமா நடிகனைப்போல... ஆனால் உள்ளுக்குள்ளே இப்படியானவர்களெல்லாம் பச்சை அயோக்கியன்களாகவே இருப்பார்கள்...''

சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவளையறியாமலே கமலாவின் குரல் உடைந்து தளும்பியதை அவதானித்தாள் தேவிகா. இருக்கலாம். இவளும் யாரிடமாவது ஏமாற்றமடைந்திருக்கலாம். தோல்வியடைந்திருக்கலாம்.

—நினைவுகளை உடைத்து வெளியேறியவாறு எதேச்சையாக பின்னே திரும்பிப் பார்த்தாள் தேவிகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது நெஞ்சு திடீரென அதிர்ந்ததை உணர்ந்தாள். அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்றுவிட்டாள் அவள்.

அவன் அவசர அவசரமாக நடந்து வந்து கொண்டிருந்தான். ஆனால், பாவம், நெற்றியில் பெரிய கட்டுப் போட்டிருந்தது.

தேவிகாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தன்னைச் சுதாரித்துக்கொண்டு சுற்று முற்றும் பார்த்தாள். நிறையப்பேர் இப்போது அவளின் கண்களிலே தோன்றினார்கள். ஒவ்வொருவரும் தன்னையும், அவனையும் விஷமத்தனமாகப் பார்த்துச் சிரிக்கிறாற்போல அவளுக்கு உணர்வு தட்டிற்று. குப்பென்று வியர்த்தது. முடிவுக்கு வராமலே திடீரென்று ஸ்டோர்ஸை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

'கவுண்டரி'ல் போய் உட்கார்ந்தவளுக்கு வேலையில் கவனம் வரவில்லை. 18 ரூபாவையும் 23 ரூபாவையும் 31 ரூபா எனக் கூட்டினாள். 79 ரூபாவையும், 280 ரூபாவையும் 369 ரூபா எனக் கூட்டி ரஸீதை எழுதினாள். காஷியர் தன்னுடைய கவுண்டருக்கு அவளைக் கூப்பிட்டு கடுமையாக, மெதுவான குரலிலே திட்டினான். காஷியர் சிவசம்பு நல்ல மனிதன். சிவசம்பு வராமல் கணேசன் இன்று காஷியராக இருந்தால் விஷயம் அவ்வளவுதான். வீட்டிற்குப் போக வேண்டி வந்திருக்கும். தேவிகா தன்னைச் சுதாரித்துக் கொண்டு அவன் நிற்பதைப் பார்க்க முடியா வண்ணம் சிறிது தள்ளியுள்ள 'கவுண்டர்' பக்கமாக நகர்ந்தாள்.

மாலையில், ஸ்டோர்ஸிலிருந்து அவள் புறப்பட்ட போது வேப்பமரப் பக்கமாகப் பார்த்தாள். அவன் இன்னொருவனுடன் எதையோ பேசிக் கொண்டு நின்றான். அவனிடமிருந்து கழன்று வர இவன் பகீரதப்பிரயத்தனம் செய்து கொண்டிருந்தானென்பதை, அவனது அலைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கள் தெரிவித்தன. மற்றவன் தாடியும் மீசையுமாய் கண்கள் சிவந்திருந்தான். சத்தம் போட்டுப் பேசிக் கொண்டிருந்தான்.

தேவிகா கொஞ்ச தூரம் சென்றபின்பு திரும்பிப்பார்த்தாள். இன்னமும் தாடிக்காரன் அவனோடு பேசிக் கொண்டிருந்தான். இப்போது மிகுந்த அந்நியோன்னியமாக அவனது கையைப் பற்றியவாறே பேசிக் கொண்டிருந்தான் அந்தத் தாடிக்காரன். இவளுக்கு மனதினுள்ளே லேசான எரிச்சல்.

பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து கொண்டே வீதியைப் பார்த்தாள். அவனைக் காணவில்லை. கீழே நின்ற ஒருவன் தன்னை உறுத்துப் பார்த்தவாறு நிற்பதை அப்போதுதான் அவள் கண்டாள். தனது உடல் முழுவதிலும் அவனது பார்வை புரள்வதை உணர்ந்தபோது மனம் அருவருப்புற்றாள். உள்ள எரிச்சல் முழுவதையும் ஒன்றாக்கி வெளியே காறித்துப்பினாள். பஸ் புறப்பட்டதும் மீண்டும் வீதியைப் பார்த்தாள். அவனைக் காணவேயில்லை. தேவிகாவுக்கு எரிச்சல் தாள முடியாமல் போயிற்று.

அவன் அவளோடு இப்போதுதான் முதன் முதலாகப் பேசினான். குரலிலே கண்ணியம் தொனித்திட அன்போடு அவளை நோக்கியபடியே தயங்கித்தான் பேச்சைத் தொடங்கினான்.

''மிஸ்... ஒரு விஷயம்...''

''அவன் தனக்குப் பின்னாலே வருவதை உணர்ந்தவாறே, அவன் குரலைக் கேட்டதும் உடனேயே திரும்பினாள் தேவிகா.

''என்ன?''

''இன்றைக்கு உங்களின் கடைப்பக்கம் எல்லாக் கடைகளும் பூட்டியிருக்கிறார்கள். ஏதோ போலீஸ் நடவடிக்கைக்கு எதிராக கடை அடைப்பாம். இன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமை சரிவரவில்லை... கல்லெறி, சோடா போத்தல் வீச்செல்லாம் நடந்திருக்குதாம்...''

அவள் அவனையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

''உங்களுக்கு ஏதும் கஷ்டம் வராமல் இருக்கவேண்டு மென்று தான் இதைச்சொல்ல வேண்டுமென்று இங்கேயே உங்களைப் பார்த்துக்கொண்டு நிற்கிறேன். தவறாக எடுக்கவேண்டாம்...''

அவளின் மனதிலே பயம் ஊர்ந்தது. சுற்று முற்றும் பார்த்தாள். அவளை யாருமே கவனிக்கவில்லை.

''நானும் இதுபோலதான் ஒரு கலாட்டாவுக்குள்ளே அகப்பட்டு தலையில்லே நல்ல காயம். மூன்று இழை. தையலை அவிழ்க்க இரண்டு கிழமை ஆகுமாம்...''

அவள் தன்னை மறந்து பரபரப்போடு கேட்டாள்:

''மூன்று இழை... தையலா போட்டார்கள்?''

கேட்ட பின்னர்தான் அவளுக்கு மனதினுள் என்னவோ போலிருந்தது. மீண்டும் சுற்றுமுற்றும் பார்த்தாள். பரபரப்பு முகத்திலே பரபரத்தது.

''ரொம்ப தாங்க்ஸ்... நான் அடுத்த பஸ்ஸிலேயே வீட்டுக்குப் புறப்படுகிறேன்...''

ஏக்கத்துடன் நிற்கின்ற அவனைப் பார்க்காமல் மீண்டும் பஸ்ஸிலே ஏறி உட்கார்ந்து கொண்டாள் தேவிகா. ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள். அவன் இன்னமும் நின்று கொண்டிருந்தான். அவனோடு இன்னும் கொஞ்சம் பேசியிருக்கலாமே என நினைத்து கழிவிரக்கப்பட்ட தேவிகா முதன் முறையாக அவனைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

முதலில் அவன்தான் அவளுக்கு கடிதம் எழுதினான். புத்தகம் ஒன்றினுள் வைத்து அந்தக் கடிதத்தை கொடுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். அந்தப் புத்தகத்தை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டபோது இவளின் கைகளும் உடம்பும் சட்டென நடுங்கிற்று.

அந்தக் கடிதத்தை அவள் எத்தனை முறை வாசித்திருப்பாள். எண்ணிக்கையிடலங்காது. புத்தகத்தினுள் வைத்து எத்தனை முறைவாசித்திருப்பாள். வாசிக்க வாசிக்க வாசிக்க திகட்டவில்லை அந்தக்கடிதம். கடிதத்தை மெல்லிய நீலவண்ணத்தாளிலே அவன் எழுதியிருந்தான். என் இனிய அன்பே என்று தொடங்கி, உங்கள் பதிலை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் ஆருயிர்க் கண்ணன் என்று கடிதத்தை முடித்திருந்தான் அவன்.

அவனைப்போலவே அவனது பெயரும் வசீகரமாயிருந்தது தேவிகாவுக்கு. தனது பெயரையும் அவனது பெயரையும் சேர்த்து மனதினுள்ளே சொல்லிப்பார்த்தாள், அதுவும் கவர்ச்சியாயும் இனிமையாகவுமிருந்தது. ஐந்தாறு தடவைகள் சொல்லிப்பார்த்துவிட்டு மனதினுள்ளே சந்தோஷம் பூத்து மலர்ந்திடச் சிரித்தாள்.

அடுத்து இரண்டு நாட்களாக அவள் மிகவும் கவனமாக தன்னை அலங்கரித்துக் கொண்டாள். கண்ணாடியின் முன்பு நெடுநேரமாக நின்று பார்த்து விதம்விதமாகச் சிரித்துக் கொண்டாள். பாயினில் கிடந்தவாறு கண்களை மூடிக் கொண்டு அவனைப் பார்த்தாள். ஓரக்கண்ணால் பார்க்காது நேராகவே நோக்கினாள். மானசீகமாக அவனது கன்னத்தில் தொட்டபோதே தனது உடல் சிலிர்ப்பதை உணர்ந்தாள்.

''என்னக்கா நித்திரையிலேயே சிரித்துக் கொண்டிருக்கிறாய்?'' என்று பவளமணி கையிலே தொட்டதும் உடனேயே பாயிலிருந்து எழுந்தாள் தேவிகா.

மறுநாள் அவன் தேவிகாவுக்குப் பக்கத்திலே வந்து, ''எனது லெட்டருக்கு பதில் தரமாட்டீர்களா?'' என்றான். இவளுக்கு என்ன பதில் சொல்வதென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தாள். அவனை முந்தி நடந்தவாறே, "ஆட்கள் பார்க்கிறார்கள்... நாளைக்கு" என்றாள் பதறுகிற குரலில்.

இப்படி ஒரு மாதம் போக அவளிடமும் இவனிடமும் நாற்பது கடிதங்கள் பரிமாற்றமாயின. ஒவ்வொருநாளும் எத்தனை விதமான சாக்லெட்டுகள்.

கடைசிக் கடிதத்திலே தேவிகாவை மிகவும் அன்போடு வேண்டி, சினிமாப்படம் பார்க்க அவன் அழைத்திருந்தான்.

'...உங்களோடு தனியாக நிறையப் பேச விரும்புகிறேன். ஞாயிற்றுக்கிழமை பகல்காட்சிக்கு கட்டாயம் நீங்கள் என்னோடு வரவேண்டும். பஸ்நிலையத்தில் உங்களை எதிர்பார்த்துக் காத்திருப்பேன். என்மீது நீங்கள் வைத்துள்ள அன்பை இதன் மூலமே நான் அறிந்து கொள்ளுவேன்... ஆசைகளுடன் கண்ணன்...'

தேவிகாவுக்கு மனதினுள் நடுங்கிற்று. கடிதத்தை திரும்பவும் படித்தாள்... அவனே இப்போது எதிரே வந்து நின்று கெஞ்சுகிறாற்போல உணர்ந்தாள். மீண்டும் அந்தக் கடிதத்தைப் படித்து விட்டு மடித்து பத்திரமாக வைத்தாள். அவனது வார்த்தைகள் நெஞ்சுக்குள் கெஞ்சிறாற் போல மீண்டும் ஒலித்தன.

பின்பக்கமாகப் போனாள். அணிற்பிள்ளைகள் அங்கு மிங்குமாய் விளையாடிக் கொண்டிருந்தன. ஒரு அணில், பழமொன்றைக் கொறித்து வாலை ஆட்டிக் கொண்டிருந்தது. தேவிகா அவைகளைப் பார்த்தவாறே, 'கணணா... கட்டாயம் சினிமாவுக்கு நான் வருகின்றேன்...' என்று மனதினுள்ளே முணுமுணுத்துக் கொண்டாள்.

தேவிகாவுக்கு அவன் தன்னுடைய வீட்டு முகவரியைக் கேட்டதும் மிகுந்த சங்கடமாகி விட்டது. தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுடைய குடிசையை, அதன் சுற்றுப்புற அலங்கோலங்களை உடனேயே மனம் நினைத்துக் கொண்டே அருவருப்பும் வெட்கமும் அடைந்தது. தன்னுடைய வீட்டுக்கு அவன் வந்தால் எப்படி வரவேற்பது, யாரென்று அறிமுகப்படுத்துவது... அது பெரிய சங்கடமாகிவிடும். அவையெல்லாவற்றையும் விட அந்த அயலில் உள்ளவர்கள், வாயினாலேயே அவளுக்கும் அவனுக்கும் திருமணம் செய்து வைத்துவிட்டுத்தான் அடுத்த வேலை பார்க்கப் போவார்கள்.

''என்ன... பேச்சு மூச்சையே காணேல்லை......?''

கண்ணன் அவளது சிந்தனையைக் கலைத்தான்.

''இல்லை... ஒன்றுமில்லை...'' புன்னகையை வருவித்துக் கொண்டே பதில் கூறினாள் தேவிகா. ''அட்ரஸ் தானே கேட்டீங்க?''

''ஆ... அதேதான்...''

''ஒவ்வொரு நாளுமே சந்திக்கிறோம்... பிறகேன் அட்ரஸ்?''

அவன் அவளை வசீகரமாகப் பார்த்தான்.

''இல்லை, தேவி... நான் உங்கள் வீட்டுப் பக்கமாக ஒரு முறை வந்து பார்க்க வேணும்... அதுதான். ப்ளீஸ்...''

தேவிகாவுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ஏதோ சொல்ல அவள் வாயெடுத்தபோது, அவளைப் பேசவிடாமல் குறுக்கிட்டான் கண்ணன்.

''ஞாயிற்றுக்கிழமை தேவியைப் பார்க்காமல் இருக்கிறபோது பைத்தியமே பிடித்துவிடும்போல இருக்கிறது. அந்த ஒரு நாளைக்கு மட்டும் உங்கள் வீட்டுப் பக்கமாக வந்து பார்க்கவேணும் போல இருக்கிறது தேவி...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாஞ்சை பொங்க அவளைப் பார்த்தான் கண்ணன். தேவிகாவுக்கு நெஞ்சினுள் வாத்ஸல்யம் தளும்பிற்று. ஆர்வத்தோடு அவனையே கண்களினுள்ளே பார்த்தாள்.

''அதேல்லாம் இப்போதைக்கு வேண்டாம்.''

''தேவி என்ன கல்நெஞ்சு உமக்கு? நான் எவ்வளவு சொன்னாலும் கேட்கவே மறுக்கிறீர்? என்னுடைய என்ன விருப்பத்தைத் தான்...'' அவன் வார்த்தைகளைத் தொடராமல் நிறுத்தினான். பின்னர் அவளுடைய சம்மத மான பதிலிற்காக தேவிகாவை உறுத்துப் பார்த்தான்.

''என்ன நீங்க? யாராவது கண்டால் என்ன நடக்கும் என்று யோசித்துப் பாருங்க...''

''ஓ!'' கொஞ்சம் மிகைப்படுத்தலோடு சிரித்தான் அவன். ''யார், என்ன நினைக்கப் போகிறார்கள்? அது வும் நாளைக்கு கல்யாணம் ஆகப்போகிற நம்மைப் பற்றி...''

தேவிகாவுக்கு அவனது வார்த்தைகளில் அவ்வளவு ஈடுபாட்டோடு மனம் படியவில்லை. இதற்கு முன்னர், அவன் அவளிடம் எறிந்து முட்களாய் அவளது நெஞ் சினில் விழுந்து உறுத்திக்கொண்டிருந்தன அச் சொற்கள்.

'...என்னுடைய என்ன விருப்பத்தைத்தான்... என் னுடைய என்ன விருப்பத்தைத்தான்... என்னுடைய...'

அவனது வார்த்தைகள் திரும்பத்திரும்ப தேவிகாவின் மனதிலே உழுது புரண்டு கொண்டிருந்தன.

அன்றைக்கு சினிமாத்தியேட்டரில் நடந்த சம்பவத்தை வெவ்வேறு வார்த்தைகளில், வெவ்வேறு விதங்களில் எத்தனை தரங்கள் இவன் கூறிவிட்டான். அப்படியானால் அதைஇன்னமும் இவன் தவறென்று உணரவில்லைதானே... 'ஐ ஆம் ஸோ ஸாரி' என்று சொன்னதெல்லாம் ஒப்புக்குத் தானே, பொய்க்குத்தானே, பாசாங்கிற்குத்தானே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவிகாவின் நெஞ்சினுள் என்னவோ உடைந்தாற் போல உணர்ந்தாள், மனந்தளும்பிட அவனைப் பார்த்தாள்.

''என்ன தேவி 'மூடா'கி விட்டீங்க...''

தலைஸ்ய அசைத்தவாறே ''ஒன்றுமில்லை...'' என்றாள் தேவிகா. ''எனக்குள்ள கஷ்டங்களை நீங்கள் கொஞ்சம் புரிந்து கொள்ள வேண்டும்...''

அவள் நிறுத்திவிட்டு அவனைப் பார்த்தாள்.

''கொஞ்சம் யோசித்துப் பாருங்க... நான் வேலை யிலே சேர்ந்து இன்னமும் இரண்டு மாதங்கள்கூட ஆக வில்லை. அதற்குள்ளே இப்படியெல்லாம் என்றால் வீட் டிலே என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்? அதைவிட எனக்கென்றும் கொஞ்சம் கடமைகளும் உண்டல்லவா?... என்ன, சொன்ன உடனேயே உங்களுக்கு முகம் இப்படிச் சுருங்கிப் போச்சுது?...''

அவன் வலிந்து புன்னகை செய்தான்.

''தேவி... அப்படியொன்றுமில்லை. உமக்கு இஷ்ட மில்லை என்றால் விட்டுவிடுகிறேன். நீர் அட்ரஸ் தர வேணாம்...''

''ஏன் அதை நன்றாகச்சிரித்துக் கொண்டு சொல்ல வேண்டியது தானே...'' என்று தேவிகா சிரித்தவாறே அவனைப் பார்த்துக் கூறினாள். கண்ணன் அவள் சொன்னதைப்பற்றி அக்கறைப்படாமல் எதையோ யோசித்துக் கொண்டிருந்தான்.

பாயில் படுத்தபடியே அவன் சொன்ன வார்த்தை களைப்பற்றித் திரும்பத்திரும்ப யோசித்துக் கொண்டிருந் தாள் தேவிகா. அவனைப்பற்றி யோசிக்கின்றபோது இப்போது மனதினுள் லேசானதோர் அவநம்பிக்கை முளைகொண்டெழுவதனை அவள் உணர்ந்து கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...சினிமாத் தியேட்டருக்குள் இருவருமே ஒருவருக் கொருவர் தெரியாதவர் போல தலையைக் குனிந்தவாறு ஒருவர்பின்னொருவராய் சென்று அருகருகாக உட்கார்ந்து கொண்டனர். தலையைச் சாய்த்து அவளையே பார்த்துக் கொண்டிருந்த கண்ணனைப் பார்த்து முணுமுணுத்தாள் தேவிகா:

''இப்படிப் பார்த்துக்கொண்டிருக்காதீங்க... என்ன அப்படி இதுவரையுமில்லாத பார்வை...? நிறையப் பேச வேண்டுமென்று தானே கூட்டிக்கொண்டு வந்தீங்க...''

அவன் பதிலே சொல்லாமல் மெல்லிய புன்முறு வலோடு, அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''நான் சொன்னதொன்றும் உங்களுக்கு காதிலே விழவில்லையா ?''

அவன் அப்படியே பார்த்தவாறு பதில் சொன்னான்.

''கோபம் வருகிறபோதுகூட தேவிகா... நீர் அழகாக, நல்ல அழகாக இருக்கிறீர்... சுவீட் லிப்ஸ்...''

இப்போது தேவிகாவுக்கு முகம் சிவந்தது. எரிச்ச லோடு அவனைப் பார்த்தாள். அவன் பார்வையைத் திருப்பிக்கொண்டபோது விளக்குகள் அணைந்து சினிமா தொடங்கிற்று.

காதல் கதை.

கதாநாயகன் நாயகியைப் பாட்டுப் பாடியபடியே பூந் தோட்டத்தினுள் விட்டுத் துரத்திக் கொண்டிருந்தான்.

''தேவீ''

அவன் குரல், தேவிகாவின் அருகே தளதளத்தது.

''ஸ்ஸ்... தேவீ...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தன் அருகே அவனது மூச்சுக் காற்றை உணர்ந்ததும் சங்கடத்துடன் கழுத்தை அசைத்தாள்.

''என்ன நீங்க ?...''

அவளது கையைத் திடீரென அவனது விரல்கள் தகிப்போடு தொட்டதும் இவள் மூளையினுள் எரிச்சல் அவிழ்ந்தது. கையை விலக்கிக்கொண்டபோது பின்னாலிருந்து 'க்ளுக்' என்ற பெண் சிரிப்பு மெல்ல எழுந்து கரைந்தது. இவளுக்கு உடம்பெல்லாம் கூசிற்று.

கண்ணனின் பெருமூச்சு இவளின் மனதை ஏதோ செய்தது. பிறகு அவளால் படம் பார்க்கமுடியவில்லை. தனக்கு அருகே திரும்பினாள். இருளிற்குப் பார்வை பழகியதும் அவனும் தன்னைப் பார்த்துக்கொண்டிருப்பதனை அறிந்தவளாய் மீண்டும் படத்தைப் பார்த்தாள். கதாநாயகியை வில்லன் துகிலுரியத் தொடங்கியிருந்தான். அதைப்பார்க்க அருவருப்புற்றபோது இடைவேளை வந்து விளக்குகள் எரிந்தன.

வெளிச்சத்தில்— பின்னே திரும்பிப் பார்க்கவோ, கண்ணனை நோக்கிடவோ இவளுக்குச் சங்கடமாயிருந்தது. சில கணங்கள் தனது கால்களைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு தன்னைச் சுதாரித்துக்கொண்டே கண்ணனைப் பார்த்தாள். ''எதையாவது பேசலாந்தானே...''

அவளை வெறுமையாகப் பார்த்தான் கண்ணன்.

''என்ன கோபமா ?''

''......''

''இதற்காகத்தான் சினிமாவுக்கு கூட்டிக் கொண்டு வந்தீர்களா...''

அவன் மௌனமாகவே உட்கார்ந்திருந்தான். முகம் வாடியிருந்தது. அவனைப் பார்க்க தேவிகாவுக்கு இரக்கமா

இ—7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்தது. மெதுவாக அவனது கையைத் தொட்டாளீ. அப்போதும் பேசாமலிருந்தான். பின்னர் அவனது கையில் மெல்லக் கிள்ளினாள் தேவிகா.

''என்ன பேசமாட்டீங்களா !''

மெதுவாக விளக்குகள் அணைய, மீண்டும் படம் தொடங்கிற்று. அவனிடமிருந்து பேச்சுக்குரலே இல்லை. மனதிற்குள் சிரித்துக்கொண்டே அவன் கையிலே இறுக்கிக் கிள்ளினாள் தேவிகா.

''என்னவேணும் உங்களுக்கு ?''

அவ்வளவுதான்.

தன் தோளிலே படர்ந்த அவனது ஒருகையை அவள் மெதுவாக தட்டிவிட்டபோது, மறுகை முரட்டுத்தனமாக அவளது கழுத்தடியைத் தொட்டது. பின்னர் உடனே இவளின் குரல் கோபத்தோடு உலுக்கிற்று அவனை.

''கைகளைஎடுங்க. அல்லாவிட்டால் இங்கிருந்து போய் விடுவேன். எடுங்க கையை...''

அவன் அதிர்ந்து போய்விட்டான்.

படம் முடிந்த பின், அவனைப் பார்க்க முடியாமலிருந் தது தேவிகாவுக்கு. தலை வலித்துக் கொண்டிருந்தது. எரிச்சல் மனதிலும் முகத்திலும்.

''ஸாரி... ஐ ஆம் ஸோ...''

அவளது பார்வை அவனை வார்த்தைகளை விழுங்க வைத்தன. மௌனமானான்.

வெய்யில் இவளின் கன்னத்தில் சுரீரிட்டது.

மறுநாள் அவனோடு அவள் எதுவுமே பேசவில்லை. அதற்கு மறுநாள் அவன் கொடுத்த புத்தகத்தை வாங் கினாள். ஏழுபக்கத்தில் கடிதம் எழுதியிருந்தான். எழுபத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரண்டு முறை, 'அன்பே, நீர் என்னை மன்னித்தேன் என்று சொன்னால்தான் நான் நிம்மதி அடைவேன்' என்று அக் கடிதத்தில் எழுதி அடிக்கோடு இழுத்திருந்தான்.

'கவுண்டரி'ல் இருந்து வெளியே பார்த்தாள். அவன் நின்றிருந்தான். அவனைப் பார்க்க தேவிகாவுக்கு இரக்கமா யிருந்தது. அவனோடு, தான் முரட்டுத்தனமாக நடந்து விட்டேனோ என்றுகூட வருந்தினாள்.

மாலையில் அவனை மன்னித்தாள். தனது மனதிலிருந்து அந்தச் சம்பவத்தை உரித்தெடுக்க முயன்றாள். ஆனால் அவன் மறுபடியும் மறுபடியும் அதை நினைவூட்டிக் கொண்டேயிருக்கின்றானா...?

அவனை நினைத்துக்கொண்டே கண்ணயர்ந்து போனாள் தேவிகா.

மீண்டும் அவளை அவன் சினிமாவுக்கு வரும்படி அழைத்தான். அவள் உடனேயே பதில் சொல்லாமல் தட்டிக் கழித்தாள்.

''நான் கேட்கிற எல்லாவற்றையும் ஏன்தான் நீர் மறுக் கிறீரோ தெரியவில்லை... ஏன் இப்படி?...''

''என்னவோ எனக்குச் சினிமாவுக்குப்போகவே பிடிக்க வில்லை. சின்ன வயதிலிருந்தே அப்படித்தான். வேறயொரு காரணமும் இல்லை... நீங்கள் வீணாக ஒன்றுக்குள்ளே இன்னுமொன்றை தொடர்புபடுத்தி குழப்பாதீங்க...''

''என்னுடைய விருப்பத்திற்காக ஒரே முறை, ஒரே யொரு முறை சினிமாவுக்கு வரக்கூடாதோ ?...''

அவன் குரல், அவளதுகால்களில் மண்டியிட்டது. இரங்கினாள். பின்னர் புன்முறுவல் செய்தாள்.

''என்ன படம் ?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஹேமாவின் காதலர்கள் ?...''

''என்ன ?''— குரலிலும் கண்களிலும் அதிசயம் மலர்ந் திடக்கேட்டாள் அவள். ''ஹேமாவின் காதலர்கள் ?... ஹேமா, காதலர்கள் ?... ஒரு மாதிரியான படமோ ?''

''இல்லை... அப்படியான படமாயிருக்காது. தியேட்ட ரில் கூட்டமே இல்லே. யாரும் காணாமல் இருந்து பார்க்க லாம்; நிறையவே பேசலாம்...''

''பேசலாம்?...'' விஷமமாகச் சிரித்தாள் தேவிகா. பின்பு அதே விஷமக் குரலில் தொடர்ந்தாள். 'ஒரு நிபந்தனையோடுதான் வருவேன், பிராமிஸ் செய்ய வேண்டும்...''

''என்ன?''

''இரண்டு கைகளையும் இறுக்கிக் கட்டிக்கொண்டிருக்க வேண்டும் படம் முடியும் வரை, முடியுமா?''

''முடியும்...''

''என்ன நிபந்தனை, திருப்பிச் சொல்லுங்க...''

அவனும் விஷமமாகச் சிரித்தான்.

''இரண்டு கைகளையும் இறுக்கிக் கட்டிக்கொண்டிருக்க வேண்டும். அவவளவே தான்...பேச்சு மாறக்கூடாது...''

ஹேமா கீழ் நடுத்தர வர்க்கப்பெண். அம்மா. டிராபிக் கான்ஸ்டபிளான அண்ணன். மனைவி. வீணையோடு வாழ்கின்ற தங்கை. எதற்கும் அடிவாங்கவுள்ள கண்ணாடி அணிந்த தம்பி. குடிகார அப்பா. ஹேமா கஷ்டப்பட்டு வேலை தேடிக்கொள்கிறாள். அலுவல்கத்திலே வேலை செய்கிற தடிப்பயல் ஒருத்தன் இவளைத் துரத்தோ துரத்து என்று துரத்துகிறான். அவளைப் புகழுகிறான். நம்பிக்கை கொடுக்கிறான். கடைசியில் அவள் அண்ணனின் எதிர்ப் பையும் பொருட்படுத்தாமல் வீட்டைவிட்டு ஓடிவந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனோடு வாழ்க்கையைத் தொடங்குகிறாள். திருமணமானதும் அவளை வேலையிலிருந்து நிறுத்தி விடுகிறான் அவன். இவளுக்குரிய சுதந்திரங்களைப் பறித்தெடுக்கிறான். இவளுக்கு ஆறுதல் கூறுகிற தொழிற்சங்கவாதியான நண்பரோடு சேர்த்துப் பேசுகிறான். இவளோடு வேலை செய்த இன்னொருவன்— இவள்மேல் மனதினுள் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தவன் மீண்டும் இவளோடு தொடர்புகொள்ள விரும்புகிறான். தொழிற்சங்கவாதியிடம் இவள் தனது கஷ்டங்களைக் கூறியபோது, கிராமத்திற்குப் போய் ஏழைகளின் நல்வாழ்விற்குப் பணியாற்ற இவளை அழைக்கின்றான். ஒருநாள் இரவு கணவனால் சந்தேகப்பட்டு முரட்டுத்தனமாகத் தாக்கப்பட்ட அவள் வீட்டிலிருந்து தப்பியோடி தொழிற்சங்கவாதியின் அறைக்குள் அடைக்கலமாகிறாள். இரவு, தொழிற்சங்கவாதி சிலரால் கொலை செய்யப்பட்டதாய் செய்தி வருகிறது. அவளைப்பற்றிய சந்தேகத்தை மாற்றிக்கொண்டு கணவன் தன்னோடு வாழ அழைக்கிறான். இவள் மறுக்கிறன்றாள். மனதுக்குள் ஆசைப்பட்டுக் கொண்டிருந்த இன்னொருவன், மிகச்சாதாரண தொழிற்சங்கவாதிக்கும் இவளுக்கும் தொடர்பு இருந்ததா இல்லையா என்பதை அறிந்து கொண்டு அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறான். இவள் குமுறிக்குமுறி அழுகிறாள். ஆண் மேலாதிக்க சுபாவங்களை வெறுத்து அங்கிருந்து வெளியேறி கிராமத்திற்குப் புறப்படுகின்றாள்...

ஹேமாவிற்காக பலமுறை அவளையறியாமலே தேவிகா கண்களைத் துடைத்துக் கொண்டாள். தன்னை ஹேமாவில் கண்டு கொண்டாள் அவள். இப்போதுதான் காதலைப் பற்றிய சந்தேகங்கள் அவளின் மனந்தனிலே அரும்பத் தொடங்கின... வெறும் உடற்பசியைத் தீர்த்துக் கொள்வதற்குத்தானா பெரும்பாலான ஆண்கள் பெண்களைத் துரத்திக் கொண்டு திரிகிறார்கள்? அது, அது ஒன்றிற்காகத் தானா காதல் என்ற போர்வையை இவர்கள் போர்த்திக் கொள்கிறார்கள்? சீ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படத்தில் இவள் ஒன்றிப்போயிருந்தபோது தன்னுடைய காலை அவனது கால் தொட்டவுடன் இவள் அருவருப்போடு இரண்டு மூன்று முறை தனது கால்களைத் தள்ளி வைத்து ஒதுங்கியிருந்தாள்.

''லூஸ் படம். நல்லதாக ஒரு பாட்டுக்கூட இல்லை. அறு அறு என்று அறுத்துவிட்டார்கள். தேவி இல்லா விட்டால் நான் முதல் சீனிலேயே எழுந்து போயிருப்பேன்...'' என்றான் வெறுப்போடு கண்ணன்.

தேவிகா பதில் சொல்லவில்லை.

''என்ன தேவி, பேச்சையே காணவில்லை. நான்தான் கைகளைக் கட்டிக் கொண்டிருந்தேனே. எவ்வளவு சங்கட மான வேலை தெரியுமோ?''

தேவிகா மௌனமாக அவனைப் பார்த்தாள்.

''என்ன... எதையாவது பேச வேண்டியதுதானே...''

''எனக்கு படம் நல்லாகவே பிடித்திருக்கிறது...'' — சொல்லி விட்டு அவனைப் பார்த்தாள் தேவிகா. ''ஹேமாவைப் போல ஒரு நிலைமை நிச்சயமாக இன்னொரு பெண்ணுக்கு வரக்கூடாது...''

ஹேமாவின் காதலர்களைப் பற்றி கமலாவிடம் சொன்னபோது அவள் கொஞ்ச நேரம் பேசாமலிருந்தாள். கவலை முகத்திலே படர அவளைப் பார்த்தாள் கமலா. விரக்தியோடு சிரித்தாள்

''நீ திருமணமான ஹேமாக்களைப் பற்றிக் கவலைப்படு கிறாய். ஆனால் திருமணமாகாமலே துயரப்படுகிற ஹேமாக் களை நீ அறிய மாட்டாய்...''

''என்ன கமலா, புரியும்படி சொல்லேன்...''

''படத்திலே அவன் ஹேமாவைத் திருமணம் செய்து கொண்டு கொடுமைப்படுத்தினான். ஆனால் காதலித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு திருமணம் செய்யாமல் ஏமாற்றப்பட்டு எத்தனை ஹோமாக்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் தெரியுமா...''

தேவிகா மௌனமாயிருந்தாள்.

''தேவி, உனக்கு நான் சொல்வது அதிர்ச்சியையும் சிலவேளை என் மீது வெறுப்பையும் தரக்கூடும்... அதனாலென்ன?... நானும் அப்படியொரு ஹோமாதான்...''

''..........''

திகைத்துப்போன தேவிகாவின் கையை வாஞ்சையோடு பற்றிக்கொண்டாள் கமலா.

''அதெல்லாம் முடிந்துபோன கதை. அதனால்தான் நான் அடிக்கடி உம்மை எச்சரிக்கை செய்துகொண்டிருப்பேன்...''

தேவிகாவின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

அன்று மாலை அவனைப் பார்த்தபோது தேவிகாவுக்கு நெஞ்சு கனத்தது. இயல்பாகச் சிரிக்க முடியவில்லை.

அவன் அவளின் அருகாக வந்தான். புன்னகையோடு அவளைப் பார்த்தான்: ''தேவிக்கு இரண்டு செய்திகள் நான் சொல்லப் போகிறேன்... அவை ஆச்சரியமான செய்திகள்...''

தேவிகா இலேசாகப் புன்னகை செய்தாள்.

''எனக்கு அப்பா ஒரு ஸ்கூட்டர் வாங்கித் தந்திருக்கிறார்...''

சொல்லிக் கொண்டே அவளைப்பார்த்தான் கண்ணன்.

''மற்றது?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வருகிற ஞாயிற்றுக்கிழமை தேவியும் நானும் இதே ஸ்கூட்டரிலே மகாபலிபுரம் போகிறோம்...''

''என்ன?'' அதிர்ந்து போய் நின்றாள் தேவிகா! ''என்ன சொன்னீங்கள்!''

அவளது அதிர்வில் இவன் திடுகிட்டபோதும் மறு நிமிஷமே அவன் சுதாரித்துக்கொண்டான்.

''மகாபலிபுரத்துக்கு இருவரும் போகலாம்'' என்றேன்.

''இதிலென்ன தப்பு? எல்லா இளசுகளும் இப்படித் தான் செய்கிறார்கள்...?''

வெடுக்கென்று பதில் சொன்னாள் தேவிகா. ''நான் ஒன்றும் அப்படியான பெண்ணில்லை''

அவனது முகம் சுருங்கிற்று. அமுந்திய ''கோபம் தொனிக்கின்ற குரலினிலே அவளைப் பார்த்து, ''நன்றாக யோசித்து எனக்கு நாளைக்குப் பதிலைச் சொல்ல வேணும்...'' என்று கூறிவிட்டு விடுவிடுவென்று அவளைப் பாராமலே திரும்பி நடந்தான்.

அவன் அப்படி நடந்து கொள்வானென்று தேவிகா எதிர்பார்த்திருக்கவில்லை. திரும்பிப்பார்த்தாள். அவன் வேகமாக நடந்து போய்க்கொண்டிருந்தான்.

இரண்டு நாட்களாய் மகாபலிபுரம் போவது பற்றி அவளிடம் கேட்டான், வற்புறுத்தலோடு கேட்டான், திரும்பத் திரும்பக் கேட்டான்.

''இப்போதைக்கு வேண்டாம். இன்னொரு நாளைக்கு...''

அவள் சொன்னதுதான் தாமதம் அவன் கோபம் சீற அங்கிருந்து திரும்பிப் போய்விட்டான்.

மறுநாள் ஒரு கடிதத்தை அவளிடம் கொடுத்துவிட்டு உடனேயே அங்கிருந்து போய்விட்டான் கண்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ்ஸிலிருந்து இறங்கியவள் பழக்கதோஷம் காரண மாக அயலெல்லாம் பார்வையால் தடவனாள். அவன் இனி வரமாட்டான் என்று தெரிதிருந்தும் திரும்பிப் பார்த்தமைக்காக தன்னைத்தானே கடிந்துகொண்டாள். மனதிலிருந்த கவலையை உதறித் தள்ளியவாறு அமைதி யாக நடந்து கொண்டிருந்தாள்.

அவள் தந்த கடிதம் மீண்டும் நினைவிலே வந்து தொற்றிக் கொண்டது.

'தேவி, எனது உணர்ச்சிகளை கொஞ்சமும் உள்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. என்னைப் புண்படுத்து கிறாய். உனது வீட்டுப்பக்கம், உனக்குத் தெரியாமலே நான் வந்திருக்கிறேன். நீ குடிசையிலிருந்தாலும் உன்னைக் கோபுரத்தில் வைக்க நினைத்தேன். நீ அதற்கு அருகதை யற்றவள். நான் உன்னை மறப்பதற்கு முடிவு செய்து விட்டேன். மறந்தும் விட்டேன். இனிமேல் உனக்குப் பின்னாலே நான் எக்காரணங்கொண்டும் வரமாட்டேன். இது உறுதி. உன்னை மறந்துவிட்ட கண்ணன்.'

அந்தக் கடிதத்தை இப்போதும் கைப்பையினுள் வைத்திருப்பது நினைவிற்கு வந்தது. எடுத்தாள். சுக்கல் சுக்கலாகக் கிழித்தாள். நடு வீதியிலேயே அதை வீசி எறிந்தவாறு நடந்தாள் தேவிகா.

அவளுக்கு ஓவென்று அழவேண்டும் போலத் தோன்றிற்று. தன்னைச் சாமாளித்துக் கொண்டாள். கமலாவை நினைத்தாள். கமலாவோடு பேசிய ஒவ்வொரு வார்த்தைகளும் நினைவிலே வந்தன.யோசிக்க வைத்தன. வாழ்க்கையில் எத்தனை ஏமாற்றங்கள் வந்து போகின்றன. அது போலவேதான் இதுவும் ஒன்று. அதற்காக அழுவதே தனக்கு ஒரு அவமானமென்ற எண்ணம் மனதிலே அரும் பிற்று. லேசான சந்தோஷமும் உண்டாயிற்று. முழுமையாக இவனிடம் ஏமாந்திருந்தால் ?... அந்த நினைவே இவளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியதானதொரு தெம்பினையும் கொடுத்தது. நிம்மதியாகவே பெருமூச்சு விட்டுக்கொண்டாள்.

பின்னால் மணிச்சத்தம் கேட்டது. திரும்பினாள். சைக்கிளில் ஒருவன் வந்துகொண்டிருந்தான். இவள் திரும்பியதும், சொல்லி வைத்தாற்போலச் சிரித்தான். தேவிகாவுக்கு எரிச்சல் தாள முடியவில்லை. அவனுக்கு எதிரிலேயே காறித்துப்பினாள். அவனுக்கு கேட்கின்ற குரலிலே, ''பொம்பளை பொறுக்கிகள்'' என்று கூறியவாறு மீண்டும் காறித் துப்பினாள்.

● *1986*

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதியில் அப்படித்தான்

மனோகரனை பார்க்கவே வினோதினிக்குக் கூச்சமாக இருந்தது. தயக்கமாக இருந்தது. வார்த்தைகள் திடீரென்று எங்கோ ஒளிந்து கொண்டுவிட்டன. தைரியத்தை வரவழைத்துக்கொள்ள முயற்சித்தாள். முடியவில்லை. அவனும் எதையும் பேசாமல் நின்றது இன்னும் சங்கடத்தை அதிகரித்து. அவனது முகத்திலே இலேசான சினம் துளிர்த்திருந்தது. உற்றுப் பார்த்தாள். சினத்தோடு வெறுப்பும் தெரிந்தது. வழமையாகவே அவர்களிருவரும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற இந்த நிமிஷங்கள் வசீகரமும் சந்தோஷமும் நிரம்பப் பெற்றவை. கலகலப்பும் களிப்பும் கைகோர்த்திருப்பவை. மோகனம் நிறைந்தவை.

வினோதினி குழந்தையொன்றின் தவிப்பு முகத்திலே தொனிக்க சட்டென்று மனோகரனைப் பார்த்தாள்—

''மனோ, என்னோடு கோபமா?''

சட்டென்று, எதிர்பார்த்துக் காத்திருந்தவைபோல அந்த வார்த்தைகள் சீறி வெடித்தன.

''ஆமாம், உன்னைக் கட்டிப்பிடித்துக் கொஞ்சவேணும் போல இருக்கிறது...''

சவுக்கு நுனியாய் அந்த வார்த்தைகள் அவளது நெஞ்சிலே சுளீரிட்டன. சினத்தின் உச்சியிலே நின்ற அந்த வார்த்தைகள் அவனது கோபத்தை நியாயப்படுத்தின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பிளீஸ் மனோ, என்னுடைய நிலைமையைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். அத்தோடு, வெறும் சாம்பிரதாய மான போக்குகளுக்கு அடிபட்டுப் போகாத ஆளென்று நீங்கள் உங்களைச் சொல்லிக் கொள்வீர்கள்.''

மனோகரன் மூக்குக்கண்ணாடியைக் கழற்றி கைக்குட்டையால் துடைத்தபடியே ஏளனமாக அவளைப் பார்த்தான்.

''வினோ, முன்பென்றால் ஒரு விஷயத்தைத் தவறு என்று சொன்னால் உடனேயே ஒத்துக் கொள்கிற பழக்கம் உன்னிடமிருந்தது. இப்போதோ ஒவ்வொரு விஷயத்தையும் நீ நியாயப்படுத்திப் பேசுகிறாய். இவையெல்லாம் உன்னு டைய மூளையிலிருந்து உருவான கருத்துக்கள் இல்லை என்பதையும் நான் அறிவேன். உனக்கு இவர்களால் எப்படி இவ்வளவு எளிதிலே மூளைச் சலவை செய்ய முடிந்தது என்பதனைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதுதான் எனக்கு அளவு கடந்த வெறுப்பை உண்டாக்குகிறது...''

வினோதினி மௌனமாக நின்றாள்.

இந்த டீ சர்ட்டும், ஸ்கர்ட்டும் அணிந்ததற்கும் இப்போது ஒரு காரணம் கற்பிப்பாய். உன்னைப் பளீச்சென்று கண்ணைக் குத்தும் விதத்தில்காண்பித்து உனது கடைக்கும் வருகிறவர்களைக் கவரப் பண்ணி வியாபாரம் செய்வதற்குத்தான் உன்னுடைய முதலாளி விரும்புகிறான். அதற்காகத்தான் இந்த டிரஸ்ஸை உனது கடையில் வேலை செய்கிற ஒவ்வொரு பெண்ணையும் அணியச் செய்யும்படி வற்புறுத்துகிறான் உனது ஓனர்...''

வினோதினி மௌனத்தைக் கலைத்தாள்.

''இப்போ என்னை என்னதான் செய்யச் சொல்கி றீர்கள்? இந்த வேலையை விட்டுவிடச் சொல்கிறீர்களா? இந்த வேலையை விட்டு நிற்கிற அடுத்த நிமிஷத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய நிலை எப்படியிருக்கு மென்று நான் சொல்வித் தான் உங்களுக்கு...''

அவன் எரிச்சலோடு குறுக்கிட்டான்.

''வினோ, முன்னைப்போல என்னோடு பேசிப்பழகு. மரியாதையான வார்த்தைகளைப் பேசி கஸ்டமரைக் கவரவேண்டுமென்ற உன் முதலாளியின் ஆலோசனைப்படி என்னோடு பேசாதே. என்னை அது எரிச்சலூட்டுகிறது. இவ்வளவு காலமாக என்னை நீ, போ, வா என்றுதானே அழைத்து வந்தாய். இந்த ஆறு மாதமாக மட்டும் என்ன புதிய மரியாதை...?''

வினோதினியின் முகம் சட்டென்று சுருங்கிற்று. வாடிய முகத்தோடு அவனைப் பார்த்தாள்.

''இன்றைக்கு சண்டை போட்டு விட்டுப் போகத்தான் இவ்வளவு வேகமாக வந்திருக் கிறீர்களா?''

''சொன்னபிறகும் பார்... எப்படிப் பேசுகிறாய்?'' அவன் பொய்க்கோபத்துடன் அவளை அடிக்கிறாற்போல கையை வீசினான். அவள் அவனது கையைத் தடுக்க, அவன் அவளது கையைப் பிடித்து உள்ளங்கையில் 'பச்...' என்று முத்தம் சிந்திவிட்டு வாஞ்சையோடு அவளைப் பார்த்தான்.

''வினோ எனக்கு உன்னை நினைத்தாலே பயமாகவும் கவலையாகவும் இருக்கிறது. உண்மையில் என்னால் இதே போக்கில் போனால் உன்னை நான் இழந்து போய்விடுவேனோ என்றுகூட என்மனம் சஞ்சலப்படு கிறது...''

வினோதினி தலையை ஆட்டியவாறு சூழ்நிலையையும் கவனியாமல் கொஞ்சம் உரத்த குரலிலே கூறினாள்.

''வீண் கற்பனையெல்லாம் செய்யாதீர்கள். எதற்காக இப்படியெல்லாம் யோசிக்கிறீர்கள்...?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இல்லை வினோ, எனது அச்சத்தில் நியாயம் இருக்கிறது. நன்றாகவே யோசித்துப் பார். போன வருஷம் இதே நேரத்தில் இந்த மாதிரியா நீ இருந்தாய்? அப்போதெல்லாம் இந்தக் கடையில் வேலை செய்வதைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசமாட்டாய். வேலை முடிந்து ரோட்டுக்கு வந்த மறுகணமே கடையை மறந்து போய் விடுவாய். ஆனால் கடந்த ஒரு வருஷத்துக்குள்தான் இந்த மாற்றம். கடையின் புது முதலாளி அமெரிக்கா சென்று வணிகவியல் துறை படிப்பு படித்து வந்தவன். 'இந்தக் கடை உங்களின் சொந்தக் கடை என்று நினைத்து இதை முன்னேற்ற வேண்டியது உங்களின் கடமை' என்று சொல்லிச் சொல்லியே உங்களை இந்தக் கடைக்குக் கொத்தடிமை ஆக்கிவிட்டான். பேச்சு முறை, ஆடையணிகளில் எல்லாம் உங்களின் மீது மாற்றத்தைத் திணித்து விட்டான்...''

வினோதினி உற்சாகமாகக் கேட்டாள்.

''ஆறு வருஷமாகத்தான் நான் இந்தக் கடையில் வேலை செய்து வருகிறேன். பழையவர் ஏனோ தானோ வென்றுதான் கடையை நடத்தினார். அவரின் மகன் வந்ததும் கடை எப்படி மாறிப் போய்விட்டது? கடைக்கு மூன்று மாடிக் கட்டிடம், ஏ.ஸி., இரண்டு பிராஞ்சுகள்... புதிதாக சேல்ஸ் கேர்ள்ஸ்... இதெல்லாம் பெரிய சாதனையில்லையா?''

அவள் தன்னை மறந்து பேசிக் கொண்டு போனது மனோகரனுக்கு எரிச்சலை உண்டாக்கிற்று.

''அதோடு உன்னைப் போல பலருக்கு புதிய பதவி. புதிய பெண்கள் 'மேடம்' என்று உங்களைக் கூப்பிடுகிற மரியாதை. இந்த வெற்றுக் கௌரவங்களைவிட வேறு என்ன உங்களுக்கெல்லாம் கிடைத்தது? கடையின் ஒட்டு மொத்த லாபத்தில் பங்கு தந்தார்களா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தனது காதுகளைப் பொத்திக் கொண்டாள்.

''முதலாளிதானே முதல் போட்டு இந்தக்கடையை இவ்வளவு உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தார். அதிலே போய் பங்கு கேட்கலாமா? என்ன அரசியல் நீங்கள் பேசுவது? இது அநியாயம் இல்லை? போனஸ் கேளுங் கள். அதில் நியாமுண்டு... எப்படியோ... யோசித்துப் பாருங்கள். நாம் எந்த இடத்தில் வேலை செய்கிறோமோ அந்த இடத்திற்கு விசுவாசமாக இருந்தால்தானே அவர் கள் தருகிற சம்பளம் நமது உடலிலே ஒட்டும்...''

மனோகரன் தன்னையறியாத பரிவோடு அவளைப் பார்த்தான். கடந்த ஆறு மாதகாலமாக அவர்களிருவரும் அடிக்கடி சந்தித்துப் பேச இயலாமற்போனதால் ஏற்பட்ட பெரிய விபத்து அவனது மனதினை உலுப்பிக் கொண் டிருந்தது. அந்தப் பூங்காவின் பசுமையான சூழ்நிலைகூட அவனுக்கு எரிச்சலூட்டுவதாக உணர்ந்தான். அவளை தான் காதலிக்கத் தொடங்கிய நாட்களை ஒவ்வொன் றாக யோசித்தான். புத்திசாலித்தனம் நிறைந்த, எதற்கும் இலேசில் மசிந்து கொடுத்திடாத அவளா இப்படி மாறிப் போய்விட்டாள் என்ற பச்சாத்தாபமும் அவன் நெஞ்சிலே அரும்பிற்று. வினோதினியைப் பற்றி யோசித்த வேளையி லேயே ஊருக்கும் போன போது சந்தித்த நண்பன் ராமு வின் ஒரே தங்கை மந்தாகினி கூறிய சம்பவமொன்றும் மனதினை நெருடிற்று. அதை இப்போது வினோதினியிடம் சொல்லலாமா என்று எண்ணினான். அப்போதைய மன நிலையில் சொல்லத் தோன்றாததால் அதைப்பற்றிப் பேசாமலே விட்டுவிட்டான்.

''என்ன இது, நான் பேசப் பேச நீங்கள் ஒன்றுக்குமே பதில் சொல்லாமல் இருக்கிறீர்கள்? நான் உங்களோடு எதுபற்றிப் பேசினேன் என்றாவது ஞாபகத்தில் உள்ளதா?''

மனோகரன் வினோதினியை வெறுமையாகப் பார்த் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எல்லாமே கேட்டுக்கொண்டு தான் இருக்கிறேன்...''

''பாருங்க. இன்னும் மூன்று மாத காலத்திற்குள் நான் ஐந்து கிலோ எடையாவது குறைந்தாக வேண்டும். அதற்கு நீங்கள்தான் ஏதாவது வழி செய்ய வேண்டும். உங்களுக்குத் தெரிந்த நல்ல டாக்டரிடம் என்னைக் கூட்டிச் செல்லுங்கள்...''

தன்னை மீறிய வியப்புடன் மனோகரன் வினோதினியைப் பார்த்தான்.

''ஏய்... ஏன் உனக்கு என்ன ஆச்சு! இப்பவே பார்க்க தளதள வென்று தக்காளிப்பழம் போலத் தான் இருக்கிறாய்...''

''அதுதானே வேண்டாமென்கிறேன். ஒல்லியாய் ஒடிசலாய் இருந்தால் நல்லது. எங்க ஓனரே இரண்டு மூன்று தரம் இதைக் கூறிவிட்டார். ஜெயப்பிரதா போல என்னுடைய முகம் இருக்கிறதாம். உடலை 'ஸ்லிம்'மாக்கிவிட்டால் அச்சா ஜெயப்பிரதாதானாம். கடைக்கு வரவங்களைக் கூட நான் 'ஸ்லிம்'மாயிருந்தா நல்லாகவே கவரலாமென்று ஓனர் சொன்னார்...''

மனோகரன் தாங்க முடியாத எரிச்சலோடு அவளைப் பார்த்தான். மூக்குக்கண்ணாடியைக் கழற்றி கைக்குட்டையால் துடைத்தான்.

''நீங்க என்ன சொல்கிறீங்க?''

''நான் ஏற்கனவே சொன்னேன் அல்லவா... திரும்பத் திரும்ப ஏன் கேட்டுக் கொண்டிருக்கிறாய்?'' குரலில் கோபம் தொனிக்கக் கூறினான் மனோகரன்.

''தக்காளிப்பழம்போல என்றீர்கள். அதுதானே...''

''ஆமாம்...''

''அது நல்லாவே இல்லை. எனக்கு அப்படி இருக்க இஷ்டமே இல்லை...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்புறம் உன் இஷ்டம்...''

அவள் அவனுக்கு அருகே வந்தாள்.

''என்ன... என்மேலே கோபமா?''

''இல்லை வினோ. உன்னை நினைத்தால் எனக்குக் கவலைதான் வருகிறது. உனக்கு உன் கடையில் சொல்லப் படுவதுதான் வேதவாக்காகிவிட்டதா? உன் ஓனர் சொல் வதை மட்டுந்தான் நீ நன்மையான விஷயம் என்று நினைக் கின்றாயா?''

வினோதினியின் முகம் லேசாகச் சுருங்கிற்று.

''எதற்கும் நீங்கள் ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? உங்களுக்கு எனது கடையையும் பிடிக்கவில்லை. எனது ஓனரையும் பிடிக்க வில்லை...''

மனோகரன் குறுக்கிட்டான்.

''வினோ... இனி அந்தப் பேச்சு வேண்டாம். எனக்கு உன்னுடைய கடையையோ, ஓனரையோ பிடிக்கிறதா பிடிக்கவில்லையா என்பதல்ல விஷயம். எனது கவலையெல் லாம் உன்னைப்பற்றியதுதான். நீ வீணாக ஏமாற்றப்பட்டு உன் சுய குணங்களை எல்லாம் இழந்து கொண்டிருக்கிறாயே என்பதுதான் என் கவலை. என்ன செய்வது... நானும் எந்த வேலையும் கிடைக்காமல் அலைந்து கொண்டிருக் கிறேன்...''

அவன் பெருமூச்சுவிட்டான். பிறகு உற்சாகம் பொங்குகிற குரலில், ''அடடா, சொல்ல வந்த விஷயத்தை மறந்து போய்விட்டேன். அடுத்த மாதம் ஒன்பதாந் தேதி என்ன விசேஷம் தெரியுமா?'' என்றான்.

வினோதினி புன்னகை செய்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னுடைய பிறந்த நாள்...''

''அடடா... பெரிய விஷயந்தான் அதை ஞாபகம் வைத்திருப்பது. அன்றைக்கு நாம் இருவரும் கீதா ஓட்டலுக்குச் செல்கிறோம். அப்புறம் வண்டலூருக்கு போகிறோம்...''

''என்ன?''

அவளின் குரல் பதறிற்று.

''அன்றைக்கு வேற எந்தக் கவலையும் நமது மனதில் இருக்கக் கூடாது.''

''இல்லை...'' வினோதினி இழுத்தாள்: ''அன்றைக்கு எனக்கு லீவே இல்லை. அன்றைக்குத் தான் எங்க கடையில் வருஷாந்தர சேல்ஸ் தொடங்கறாங்க. என் பொறுப்பிலே தான் ஓனர் ஸேல்ஸ் விஷயங்கள் முழுவதையும் ஒப்படைத்திருக்கிறார். அந்த வாரக் கடைசியில் நாம் போனால் என்ன?''

மனோகரனின் மனதினுள் படக்கென்று என்னவோ உடைந்தாற்போல உணர்ந்தான். அவனையறியாத கவலை பொருமிற்று. கவலையோடு கோபமும் சேர்ந்து கொண்டது. கோபமும் வெறுப்புணர்வும் தலையெடுக்க அவளோடு ஒன்றும் பேசாமல் அங்கிருந்து அவசரமாகப் புறப்பட்டான்.

வினோதினி அவன் இப்படி நடந்து கொள்வானென்று எதிர்பார்க்கவில்லை. திகைத்துப் பேச்சற்றுப்போய் நின்றாள்.

படுக்கையில் கிடந்த வினோதினியின் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தோடிக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அழாதே வினோ, இப்போது என்ன நடந்து போய் விட்டது? காலில் வாதம் வந்துவிட்டது. ஒரு மாதத்திற்குள் முறைப்படி மருந்து மாத்திரை சாப்பிட்டால் குணமாகி விடப் போகிறது...''

வினோதினி மௌனமாயிருந்தாள். அப்போது ஏதோ சரசரப்புச் சத்தம் கேட்டது. உள்ளே வினோதினியோடு வேலை செய்கிற பெண்கள் வந்தார்கள். அவர்களைக் கண்ட மனோகரன் எழுந்து வெளியே சென்றான்.

அவர்கள் வெளியே போன பிறகு மீண்டும் உள்ளே போனான் மனோகரன்.

வினோதினியின் முகம் இப்போது இருள் படர்ந் திருந்தது. கண்ணீர் அரும்பியிருந்தது.

''ஏ வினோ... என்ன?''

அவன், அவளுக்கு அருகே சென்றான்.

''இந்த வாரம்... முழுவதும் வேலைக்குப் போகவில்லை என்று ஓனர் மிகக் கோபப்பட்டாராம். எனக்கு வியாதி என்பதை அவர் நம்பவே இல்லையாம். உடம்பில் கொழுப்பு அதிகமாக ஏறித்தான் இப்படி நான் திமிராக நடக்கிறேன் என்று அவர் சொன்னாராம். இதைத்தான் என்னால் தாங்க முடியவில்லை.''

அவள் விம்மினாள்.

மனோகரன் அவளைத் தேற்றினான். அவன் மனதினுள்ளே இப்போதுதான் நிம்மதி தலைநீட்டிற்று: பெரியதொரு பாரம் இறங்கினாற்போல் உணர்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அது மட்டுமில்லை. இந்த மாதச் சம்பளத்தில் ஒரு வாரப் பணத்தைப் பிடித்துக்கொண்டு அனுப்பியிருக்கிறார். இரண்டு தினங்களில் நான் வேலைக்கு வரா விட்டால் எனக்கு வேலையே இல்லை என்று சொல்லிவிட்டிருக் கிறார்...''

மனோகரனுக்கு மனதினுள் வெறுப்பு சுழித்தது.

''அதைப்பற்றி ஒன்றுமில்லை. ஆனால் அந்தக் கடையை நான் என்னுடைய வீட்டைப் பராமரிப்பது போல பராமரித் தேன்...''

வினோதினி குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கினாள்.

● 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பனைகள்

புரடக்ஷன் மானேஜர் சேதுவுடன் சுபாஷ் ஒருபோதும் இப்படி எரிந்து விழுந்ததில்லை. சேதுவுக்கு அந்தக் கெட்ட வார்த்தைகளை தாங்கிக்கொள்ள முடியாதபோதிலும் வேறு வழியில்லாததால் மௌனமாக நின்றான். எள் முனையளவு காரணமிருந்தாலும் போதும், சுபாஷ் ஷூட்டிங்கை உடனடியாக 'கான்ஸல்' செய்துகொண்டு போய்விடுவான். இன்றைக்கு இந்த நிமிடத்தில் சூப்பர் ஸ்டார் சுபாஷ்.

''லைட்ஸ் ஆன்'' என்ற டைரக்டர் குரல் சேதுவை உலுப்பிற்று. சுபாஷைப் பார்த்தான் சேது. சுபாஷ் வெகு சாதாரணமாக உட்கார்ந்திருந்தான். அவனுக்கு அருகே நின்ற 'டச்அப்' சுந்தரம் சுபாஷின் முகத்தில் துளிர்த்த வியர்வையை ஒற்றியெடுத்து விட்டு ஒதுங்கி நின்றான். அஸிஸ்டென்ட் டைரக்டர் ஸ்கிருப்டுடன் வந்து சுபாஷ் அந்தக் காட்சியில் பேசவேண்டிய வசனங்களை சொல்லிக் கொடுத்தார். சுபாஷ் அக்கறையின்றி வசனத்தைக் கவனித்தான். பிறகு லேசான கோபத்தோடு அஸிஸ்டெண்ட் டைரக்டரைப் பார்த்தான்.

''ஏய்யா, பதினாறு வருஷமா டயலாக் எழுதுறேன்னு குப்பை கொட்டறியே... என் டயலாக்கில இந்த லானா ளானா எல்லாம் வரக்கூடாதுன்னு சொன்னேனில்ல... கூட்டய்யா அந்த சேதுவை... ஒன்னை மாத்திடுறன்... சுத்த மண்டூகப் பிறப்பய்யா நீ...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸிஸ்டெண்ட் டைரக்டரின் முகத்திலே அவமானம் பொங்கிற்று. பத்து ஆண்டுகளின் முன்னே, இதே ஸ்டூடியோ வாசலில் சுபாஷ் தன்னை கையெடுத்துக் கும்பிட்டு சான்ஸ் கேட்ட காட்சி மனதிலே தோன்றிற்று. ஓரளவுக்கு அவன் சினிமாவிலே அறிமுகமாக அவரும் ஒரு காரணம். அவனை தன்னிடம் அறிமுகப் படுத்தியதற்காக டைரக்டர் தங்கதுரை பயங்கரமாகத் திட்டியது பசுமையாகவே நினைவில் இருக்கிறது. அந்தத் திட்டுதல்களை புன்னகையோடு தாங்கிக் கொண்டு, ''எப்படியும் ஒரு சின்ன ரோலாவது கொடுத்திடுங்க ஸார்... நம்ம பக்கத்துப் பையன். இயல்பாவே சண்டையெல்லாம் போடுவான்...'' என்றார் அஸிஸ்டெண்ட் டைரக்டர்.

தங்கதுரை அவனை நிமிர்ந்து பார்த்தார்.

அவன் தேக்க மர நிறத்தவனாயிருந்தான். தியாகராஜ பாகவதரைப் போல தலை நிறைய எண்ணெய் பூசி வாரி விட்டிருந்தான். பற்கள் லேசாய் முன் தள்ளியிருந்தன. கண்கள் பிதுங்கினாற்போல, சிவந்து போயிருந்தன.

''என்னய்யா நீ'' என்று அலுத்துக்கொணடே உதட்டைச் சுழித்தார் தங்கதுரை. ''சினிமாவில நடிக்கிறதுக்கு ஏதாவது ஒண்ணாவது இருக்கணுமய்யா... முன்னப் போல மேக்காப் டெஸ்ட் எல்லாம் வைச்சா இந்தாள் தேறுமான்னு நீயே சொல்லலய்யா ?''

''ஸார் ஒரு சான்ஸ்... ஒரேயொரு சான்ஸ் குடுத்திடுங்க. அப்புறம் பையன் அதிர்ஷ்டம்...''

''சரி... உன் பேர் என்ன?''

''சொல்லு தம்பி...''

''பளராமன்...''

''அதென்னய்யா... பளராமன்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸிஸ்டெண்ட் டைரக்டர் பரிதாபமாகக் குறுக்கிட்டார். "இல்லைங்க பலராமன். பையனுக்கு கொஞ்சம் உச்சரிப்பு சொல்லிக் கொடுக்கணுங்க. நான் பண்ணிருவேன்..."

"என்னய்யா நீ, பேரே சொல்லத் தெரியல்லே. அப்புறம் இவனெல்லாம் 'டயலாக்' பேசி... சீ... சினிமாவிலே வரவர எதுக்குமே விவஸ்தை இல்லாமப் போச்சுதய்யா..."

தங்கதுரை தலையில் அடித்துக் கொண்டார். "முதல்ல இவன் பேரை மாத்தய்யா... என்ன ? 'சுபாஷ்'னு வைச்சிடுவமா ?"

"அருமையான பேருங்க... தம்பி உன் பேரு இனி சுபாஷ். என்னா?"

"சரிங்க. ரொம்ப நன்றிங்க..."

பலராமன் என்ற சுபாஷ் திடீரென்று தங்கதுரையின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்து அவரின் கால்களைப் பிடித்துக் கொண்டான்.

"எந்திரிய்யா... எந்திரி..." என்று கூறிவிட்டு, "சரி, சீக்கிரம் முன்னுக்கு வந்திடு" என்று சுபாஷ் தலையில் விரல்களால் தொட்டார் தங்கதுரை.

தங்கதுரையின் புதிய படத்திற்கு இரண்டு கதாநாயகர்கள். இரண்டாவது கதாநாயகன் கந்தர்வன் கால்ஷீட் தகராறு பண்ணியபோது தங்கதுரைக்கு எரிச்சல் தாங்க முடியவில்லை. அப்போது அஸிஸ்டெண்ட் டைரக்டர் தங்கதுரையின் காதைக் கடித்தார். "ஸார் நம்ம சுபாஷை அந்த ரோலுக்கு யூஸ் பண்ணிடலாம் ஸார்... சைட் ரோல் தானே..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ ஒரு வேகத்தில் தங்க துரை, ''சரி கூப்டய்யா அவனை...'' என்று கூறினார். ஒரு வாரத்திலே படப்பிடிப்பு தொடங்கியது. சுபாஷ் அஸிஸ்டெண்ட் டைரக்டர் காலில் விழுந்தான்.

பக்கத்தில் நின்ற சேதுவின் கால்களில் விழுந்தான். ''ஸார்... நான் உங்களையெல்லாம் சாகும் வரை மறக்க மாட்டேன்'' என்றான் நாத்தழுதழுக்க.

அப்போதுதான் படப்பிடிப்புத் தளத்தினுள் எலுமிச்சம் பழமாய் மினுமினுத்தவாறு நுழைந்தாள் நடிகை மைதிலி. புரக்டஷன் மானேஜர் சேது, சுபாஷை அவளுக்கு அறிமுகம் செய்தான்.

''சுபாஷ்... இவங்க மைதிலி. இந்தப் படத்தில உங்க ஜோடி இவங்கதான்...''

சேது சொல்லி முடியும் முன், மைதிலி வயிற்றைக் குமட்டினாற்போல பாவனை செய்து கொண்டே, ''ஐயையோ ஐயையோ...'' என்றாள்.

''என்னம்மா அது?'' என்றான் சேது, விபரம் ஏதும் புரியாதவனாக.

அதே முகச் சுழிப்போடு, மைதிலி கூறினாள். ''என்னங்க சேது? இந்தாள் கூடவா என்னை நடிக்கச் சொல்றீங்க? உங்களுக்கு கண்ணு கெட்டுப் போச்சுதா என்ன? சினிமாவிலே யாரும் நடிச்சிட முடியுமா? இந்த மாதிரி ஆளோட நடிக்கறதை என் ரசிகர்கள் ஒத்துக்கொள்ள மாட்டாங்க... என் இமேஜ் வேற போயிடும். அட்வான்ஸை வந்து மானேஜர் கையில வாங்கிடுங்க... ஏ கமலா... வா வீட்டுக்கு போயிடலாம்...''

சேது இடிந்து போனான். மைதிலியின் பின்னாலே தொடர்ந்து சென்று கெஞ்சினான். அவள் திரும்பிக்கூடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கவில்லை. அன்று மாலைப் பத்திரிகையில் பெட்டிச் செய்தியாக இந்தச் சம்பவம் வெளியாகியிருந்தது. புரடக்ஷன் மானேஜர் சேது, கனகதாராவிடமும், உஜ்ஜயாவிடமும், ஸ்ரீமங்களாவிடமும், சென்றபோது அவர்கள் அந்த மாலைத் தினசரியை சேதுவின் முன்னே விசிறியடித்தனர். ''ஏன் ஸார் எங்களையெல்லாம் விட மைதிலி பெரிய அழகின்னு நெனைச்சா எங்களை நீங்க தேடி வந்தீங்க?''

கடைசியில் அஞ்சலிதான் சேதுவுக்கு கை கொடுத்தாள். அஞ்சலிக்கு இது ஆறாவது படம். பிரபலமாகிக்கொண்டிருந்தாள். நல்ல பெண். சினிமா வட்டாரத்திலே அவளது இளகிய மனம் பிரசித்தமானது.

''அந்த ஆளைப் பார்த்தாலே பாவமாயிருக்கு ஸார். தைரியமா நடிக்கச் சொல்லுங்க...''

அஞ்சலிக்கு சுபாஷை மிகவும் பிடித்துப் போயிற்று. அனுதாபமும் அன்பு வளரக் காரணமாகிறது போலும். அவனது ஹேர்ஸ்டைலை அவளே மாற்றுவித்தாள். தனது மேக்கப்மேனை அவனுக்கும் மேக்கப் செய்ய வைத்தாள். ஒரு ஆசிரியரை வைத்து ஆங்கிலமும் உச்சரிப்பும் சொல்லிக் கொடுத்தாள்.

தனியாக ஸ்டண்ட் மாஸ்டர் மூலம் சண்டைப் பயிற்சி கற்றுக் கொடுத்தாள். தான் நடிக்கிற படங்களில் எல்லாம் அவன் பேரையும் சிபாரிசு செய்தாள்.

சினிமாவில் நுழைந்த மூன்று வருஷங்களில் அவன் தலை நிமிர்ந்துவிட்டான்.

ஒருநாள் அவன் தனியாக இருந்தபோது அஞ்சலி அங்கே வந்தாள். அவனையே பார்த்தபடி பேசாமல் இருந்தாள். சுபாஷே மௌனத்தைக் கலைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன அஞ்சலி என்ன ஆச்சு...?''

''ஒண்ணுமில்லை...''

''சொல்லம்மா...''

அவள் அவனையே உற்றுப் பார்த்தாள் பிறகு தன் பெருவிரல் நகத்தைக் கடித்துக் கொண்டாள்.

''நேற்றைய 'கதம்பம்' பத்திரிகை பார்த்தீங்களா?''

''இல்லையே...''

''பொய் சொல்லாதீங்க...''

''இல்லைக்கண்ணா, ஏன் ஏதாவது கிசுகிசு வந்திருக்கா''

''கிசுகிசு இல்லை. உங்க பேட்டி வந்திருக்கு...''

அவள் கூறியபடி அவனது முகத்தையே உறுத்துப் பார்த்தாள். அவன் சலனமேதுமின்றி இருந்தான்.

''அஞ்சலிக்கும் எனக்கும் காதலோ கத்தரிக்காயோ கிடையாது. அவ என் உடன் பிறந்த சகோதரி மாதிரின்னு கூறியிருக்கிறீங்க...''

''ஓஹ்ஹொஹாஹ்ஹோ...'' என்று அட்டகாசமாகச் சிரித்தான் சுபாஷ். பிறகு தன்னுடைய இருகைகளாலும் அஞ்சலியின் முகத்தை நிமிர்த்திக் கொண்டான்.

''டார்லிங்... இதுதானா நீ என்னைப் புரிந்துகொண்ட விதம்? என் நெஞ்சில ஒன்னைத்தவிர வேற யாருமே இல்லை. இது சத்தியம்...''

அவளது கண்கள் கலங்கின.

''நாம ரெண்டு பேருமே இப்பத்தான் பிரபலமாக வந்து கொண்டிருக்கிறோம். ரெண்டு பேருமே காதலிக்கிறதாச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னா சினிபீல்டிலே என்ன ஆகும்? நாம ரெண்டு பேருந் தானே இதனால பாதிக்கப்படுவோம்... மற்ற நடிக நடிகைங்க நம்மோட ஜோடியாகச் சேர்ந்து நடிக்க மறுப் பாங்க. இதனாலதான் அப்படிச் சொன்னேன்... அது நிஜம்னு நீ நெனச்ச பாரு, அதுதான் எனக்கு சங்கட மாயிருக்கு...''

அஞ்சலி அவன் வாயைப் பொத்தினாள். பிறகு அவனை ஆரத்தழுவிக் கொண்டாள். தன்னை மீறிய வெறியோடு அவனை முத்தமிட்டாள். அன்று அவள் அவனை ஹோட்ட லுக்கு அழைத்துச் சென்றாள். தானே வலிந்து அவனுக்குப் பலியானாள்,

இடையிடையே. அவனையும் கனகதாராவையும் ஷர்மிளாவையும் இணைத்து கிசுகிசுக்கள் வந்தபோது அஞ்சலி அவனை ஒரு நாள் செல்லமாகக் கடிந்தாள். அவன் கண்கள் கலங்க அவனைப் பார்த்தாள். அவளால் அவனது கண்ணீரைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. கண்களைத் துடைத்துவிட்டவாறு, ''குழந்தை போல அழாதீங்க... சும்மா தானே கேட்டேன்'' என்று பரிவோடு கூறினாள் அவள்.

இன்னொரு நாள் சேதுவும் இந்தச் செய்தியை அஞ்சலி யிடம் கூறி எச்சரித்தான். அஞ்சலி அதை நம்பவில்லை. ''உங்க எல்லாரையும்விட எனக்கு அவரை நல்லாவே தெரியுங்க...'' என்றாள் கலங்காத குரலில் அஞ்சலி.

சுபாவிஷின் ஊர்த்தோழன் ராஜன், துபாயில் இருந்து நிறையப் பணத்தோடு ஊர் திரும்பினான். சென்னையில் சுபாஷைத்தான் முதன்முதலில் சந்தித்தான். தமது பழைய தோழமையினை இருவரும் விடிய விடியப் பேசிக்கொண்டிருந்தனர். ராஜன் தனது பணத்தை வைத்து படங்கள் தயாரிக்கப் போவதாகக் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது எல்லாப் படங்களிலும் சுபாஷே கதாநாயகனாக நடிக்க வேண்டுமென்று அவனுக்கு அன்புக் கட்டளையிட்டான் ராஜன். சுபாஷும் அதற்குச் சம்மதித்தான்.

தயக்கத்தோடு தனது காதல் விவகாரத்தை சுபாஷ் ராஜனிடம் கூறினான். ''அதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்'' என்று அசிரத்தையாகவே ராஜன் பதில் சொன்னான்.

''சுபாஷ், இப்போ நம்பர் ஒன் ஹீரோயினிகள் யாரோ அவகூட எல்லாம் நீ நடிக்கோணும். அப்போதான் உன் மார்க்கெட் உயரும். ஹீரோயினிகள் சிபாரிசுல நீயும் மேல மேல போயிடலாம்.''

''சரி...''

''என் படத்தில ஹீரோயினி யார் தெரியுமா?''

''சொல்லு.''

''ரசனா...''

''ரசனாவா?'' திகைப்போடு கேட்டான் சுபாஷ். பிறகு தயக்கமாக, ''அவ சம்மதிப்பாளா?'' என்றான்.

ராஜன் அட்டகாசமாகச் சிரித்தான்.

''சம்மதிக்க வைக்கிறேன். அவளையே தொடர்ந்து உன் ஹீரோயின் ஆகவும் நடிக்க வைக்கிறேன். உனக்கு இஷ்டம்னா அவளையும் காதலிச்சுக்கோ.''

''போடா...'' செல்லமாக நெளிந்தான் சுபாஷ்.

''அதுமட்டுமல்ல. தாய்க்குலம் உன்னைப் போற்றுகிற மாதிரித் தான் நான் சினிமா எடுக்கப் போறேன். இன்னொரு எம். ஜி. ஆராய் உன்னை ஆக்கப்போறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ உன் பிறந்தநாளின்போதும், பண்டிகை நாட்களிலும் ஆயிரம் இளம் பெண்களுக்கு கல்யாணம் பண்ணி வைக்கப் போறே. தாய்மாருக்கு புடவை வழங்கப் போறே. இதைப் பண்ணிட்டா அப்புறம் நம்ம படம் இருநூறு நாள் வரை ஓடும். தாய்க்குலம் உனக்குக் கோயிலே கட்டிடும்...''

ராஜனையே வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தான் சுபாஷ். ''என்ன அருமையான நண்பன் இவன்!''

ரசனாவும் சுபாஷும் நடித்த நான்கு படங்களும் நூறு நாட்களைத் தாண்டி ஓடின. பத்திரிகைகள் ரசனா வையும், சுபாஷையும் கிசுகிசுக்கத் தொடங்கின. ரசனா புன்னகையோடு அந்தக் கிசுகிசுக்களை ஒப்புக்கொண்டு பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்தாள்.

இரண்டு வயதுக் குழந்தையோடு விளையாடிக் கொண்டிருந்த அஞ்சலி, சேது சொன்ன செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டாள். ''என்னால நம்பக்கூட முடியல லேங்க. நேற்றுக் கூட அவர் இங்கே வந்தாருங்க. சீக்கிரமே நம்ம திருமணத்தைப் பற்றி பகிரங்கமா தெரியப் படுத்தோணும் என்று சொன்னாருங்க.'' அஞ்சலி விம்மி விம்மி அழுதாள்.

''கவலைப்படாதம்மா. நானே சுபாஷோட பேசிப் பார்க்கிறேன். நம்ம டைரக்டருக்கும் சொல்லிடுறேன். நீ தைரியம்மா இரு. இந்தாளை நம்பி, நீயும் நடிப்பை விட்டு...''

''அவர்தாங்க நடிப்புக்கு முழுக்குப் போடு, வீட்டோ டேயே இருன்னு சொன்னார்.''

''அப்படியா?'' என்று சொன்ன சேது, மனதினுள் முணுமுணுத்துக் கொண்டான். 'பாவம். அப்பாவிப் பெண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் திட்டமிட்டே இவளை ஏமாற்றிவிட்டான். ஏறின ஏணியையே உதைத்துத் தள்ளிவிட்டான்.'

அஞ்சலி, சேது அங்கிருந்து போனதைக்கூட கவனி யாமல் யோசனையில் ஆழ்ந்து போயிருந்தாள். அவளை யறியாமலே அவள் மனதினுள்ளே முடிவொன்றையும் உருவாக்கிக் கொண்டிருந்தாள்.

படப்பிடிப்பு இடைவேளையின் போது, ரசனாவின் தோளில் கை போட்டவாறு மெதுவான குரலில், ''ரசா, நம்ம திருமணத்தை அடுத்தவாரமே 'சிம்பிளா' பெங்களூர்ல வைச்சா என்ன?'' என்று கேட்டான் சுபாஷ்.

ரசனா சூழ்நிலையையும் மீறி சிரித்தாள். பின்னர் மெல்லிய குரலில், ''அதெல்லாம் சிம்பிளா பண்றதாயில்ல. தமிழுலகின் ராஜாவும் ராணியும் ரகசியமாவா கல்யாணம் பண்ணிக்குவாங்க. திரையுலகமும், ரசிகர் கூட்டமும் அலை அலையாய்த் திரளணுங்க'' என்றாள்.

அப்போது படப்பிடிப்புத் தளத்தினுள் பரபரப்புச் சத்தம் கேட்டது.

கையில் குழந்தையோடு அங்கே ஓடி வந்தாள் அஞ்சலி... மூச்சிரைத்தபடி சுபாஷின் முன்னே நின்றாள். பேச முடியாமல் தத்தளித்தாள்.

''என்னங்க... என்னங்க...''

அவளால் பேச முடியவில்லை.

சுபாஷ் அதட்டினான்.

''ஏ... ஏ... நீ இங்கே... ஏன் வந்தே? போயிடு...''

''எனக்கு எதுவும் கேட்க வரல்லேங்க. இது உங்க குழந்தை. இதைப் பிடிச்சிடுங்க. நா இனி பிழைக்க மாட்டேங்க...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் வாயில் மெல்லிதாக சீறுகிற நுரை.

ரசனாவின் மூளையினுள் மின்னலடித்தது

ரசனா, ''டிரைவர்'' என்று அலறியவாறே அஞ்சலியை தாங்கிக் கொண்டாள் காரை நோக்கி நடந்தாள். அவளின் பின்னே ராஜன் விரைந்தான். உணர்ச்சியற்ற குரலில் சத்தமிட்டான்.

''ரசனா... ஏதோ தப்பு நடந்து போச்சு. நடந்ததை மறந்திடுங்க. நானே அஞ்சலியைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன்...''

ரசனா வெறுப்போடு திரும்பினாள். கோபங்கொப்பளிக்க ராஜனைப் பார்த்தாள். தாள முடியாத வெறுப்போடு காறித் துப்பினாள்.

''பொம்பிளைப் பசங்கன்னா உணர்ச்சியே இல்லாத ஜடம்னா நெனச்சீங்க... நீங்கெல்லாம் மிருகங்களைவிட அற்பமானவங்க. ஓங்களையெல்லாம் நடுரோட்ல விட்டு கல்லால அடிக்கணும்டா''...

●1989

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்று

லேசான மழைத் தூற்றல் வெய்யிலிடையே நெளிந்து விழுகிறாற்போல தோன்றுகின்ற மாலைப் பொழுது. அந்தத் தூற்றலை மதியாமல் விரைகின்ற மக்கள் சாரி. அவர்களில் ஒருவராய் மாணிக்க வாசகர். கையை தலைக்குக் குடையாகச் சரித்துக்கொண்டே பஸ்தரிப்பின் ஓரமாக ஒதுங்கினார் அவர். அண்ணாசாலையில் எல். ஐ. சிக்கு முன்னாலுள்ள பஸ் ஸ்டாப்பில் நின்றுதான் தியாகராய நகருக்குப் போகிற பஸ்ஸில் ஏறவேண்டும் என்று சொல்லியிருந்தான் மனோகரன்.

யாழ்ப்பாணத்திலிருந்து, சென்ற வியாழக்கிழமைதான் தமிழ் நாட்டுக்கு அவர் வந்தார். ஒரு சூழ்நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட இன்னொரு சூழ்நிலைக்குள்ளே அவரால் உடனேயே அமுங்கிப்போய்விட முடியவில்லை. அங்கே இரவிரவாய்த் தூக்கமில்லை. விமானங்களின் இரைச்சல். துப்பாக்கிச் சத்தம். விழுந்து சிதறும் ஷெல்களின் சத்தம். லாரிகளின் சத்தம். மூளையும், புலன்களும், எதுவும் எப்போதும் எங்கேயும் நடக்கும் என்பதால் உண்டான அபாயத்திற்குப் பயந்திருந்தன. புன்னகை செய்யப் பயந்திருந்தன. விமானத்தில் ஏறி உட்கார்ந்த போது உடலைக் கட்டியிருந்த முட்கயிறுகள் ஒவ்வொன்றாய் அவிழ்ந்து தளர்ந்தாற்போல மாணிக்கவாசகம் உணரத் தலைப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் மனம் இன்னமும் ஊரிலேதான் நின்றது. கலகலப்பாய் குழந்தைகளோடு போகிற இளந்தம்பதிகளைப் பார்த்தால் ராதா நினைவில் வருவாள். அவளுக்குத் திருமணமான அன்றே ராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு கணவனோடு பலியானவள். அன்றைக்கு இவர்தான் மல்லிகை மாலை வாங்கிக்கொண்டு வந்து ராதாவிடம் கொடுத்தார். அங்கே இப்போது பூமரங்கள் பாதி கருகிப்போயின. மீதியில் பூக்கள் மலர்ந்து தொடுவார் அற்று தாமாகவே வாடி உதிர்ந்தன. அவர்தான் வாடிப்போகிற பூமரங்களுக்கு நீர் வார்த்தவர்.

குப்பென்று மல்லிகை மணத்தது. திரும்பினார். கணவனோடு நின்ற மனைவியின் கூந்தலில் சிரளாய்ச் சேர்ந்திருக்கின்ற மல்லிகை.

அவளைப் பார்த்த பார்வை சிறிது தள்ளி அப்பால் போயிற்று. தன்னையே பார்த்துக்கொண்டு நின்ற இளம் பெண்ணிலே போய்ப்பதிந்தது. உற்றுப் பார்த்தார். நினைவின் ஆழம்வரை அந்த முகத்தினை மனம் தேடிற்று. அந்த வட்ட வடிவமான, தீட்சண்யமான கண்களுள்ள, எப்போதும் புன்னகையால் மலர்ந்திருக்கின்ற அந்த முகம் நினைவிலே சடாரென்று கைவைத்து நிறுத்திற்று.

''எப்பிடி இருக்கிறீங்க? ஊரிலே இருந்து எப்ப இங்கை வந்தீங்க?''

சந்திரலேகாவின் முகத்தில் துலங்கிய அன்பும் உற்சாகமும் அவருக்கு இனிய தென்றலாய் மனதினை தழுவி இதப்படுத்திற்று.

சொன்னார்.



UNIVERSITY OF PERADENIYA LIBRARY
-7-1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சொல்லி முடித்ததும் அவள் தன்னை மீறிய ஆர்வத்தோடு கேட்டாள்:

''மாஸ்டர், நீங்கள் ஐயாவைக் காணுறதில்லையோ?''

மாணிக்கவாசகத்தின் முகத்திலே இலேசாகச் சுருக்கங்கள் கீறின. அவரையறியாத பெருமூச்சு மெல்ல உதிர்ந்தது.

''அடிக்கடி பார்ப்பேனே... தானுண்டு தன் பாடுண்டு என்று இருக்கிறார். யாரோடும் எதையும் பேசுறதில்லை. கொஞ்ச நாளாய்ப் பிள்ளையார் கோயிலடியில் உட்கார்ந் திருப்பார். பிறகு அதுவும் முடியாமல் போயிற்று. எந்த நேரமும் விமானத்திலே வந்து குண்டு போடத் தொடங்கின துக்குப் பிறகு கோயிலுக்குப் போறதையும் விட்டிட்டார். அவர் நினைச்சது போலவே மூன்றாம் நாளன்று அந்தக் கோயிலுக்கு மேலே குண்டு விழுந்து, அது முற்றாகவே உடைஞ்சு பொச்சுது... அன்றைக்குப் பின்னேரம் பிள்ளையார் கோயிலடியில் உன்னுடைய ஐயாவைக் கண்டேன். அன்றைக்குத்தான் அந்த மனுஷன் விம்மி விம்மி அழுததை நான் கண்டேன்.''

மாணிக்கவாசகத்தின் குரல் தளும்பிற்று. சில கணங் கள் மௌனமாய் நின்றுவிட்டுத் தொடர்ந்தார்.

''நான் நம்பியிருந்ததெல்லாம் என்னிட்டே இருந்து போயிட்டுதடா தம்பி...'' என்று சொல்லிச் சொல்லி அழுதார். அது உண்மைதான். உன்னுடைய அண்ணன் ஆர்மிக்காரனால் சூடுபட்டுச் செத்துப் போனான், நீயோ திடீரென்று மறைஞ்சு போனாய். ஆனாலும் உங்கள் ரெண்டு பேரைப் பற்றியும் உன்னுடைய ஐயா எந்தக் குறையும் சொன்னதில்லை. கடைசியிலே தனக்கு ஆறு தலாயிருந்த பிள்ளையாருக்கும் இப்படிக் கதி வந்ததே என்று அவர் சரியாகக் கவலைப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரலேகா தொய்ந்த குரலிலே கேட்டாள்:'

''ஐயா டயபெட்டிசுக்கு ஒழுங்காக மருந்தெடுக்கிறாரோ?''

மாணிக்கவாசகம் விரக்தியோடு சிரித்தார்.

''மருந்தா? அங்கே என்ன மருந்து இருக்கிறது? சாப்பாட்டுக்கே பெரிய பஞ்சம். நாலைஞ்சுமாசமா எந்த உணவுப் பொருளும் ஊருக்கு வரல்லை. எப்படியோ சமாளிச்சுக் கொண்டு சனத்தினுடைய சீவியம் போகுது.''

சந்திரலேகா பெருமூச்செறிந்தாள்.

''நீ எவ்வளவு கெட்டிக்கார மாணவியாக இருந்தாய். என்னுடைய கையினாலே நான் உன்னைத் தூக்கி வளர்த்திருக்கிறேன். உன்னை ஒரு டாக்டராக்க வேணுமென்று உன்னுடைய ஐயா விருப்பப்பட்டார்.''

சந்திரலேகா மௌனமாய் நின்றாள்.

''எங்களினுடைய இளந்தலை முறையை நினைத்தால் எனக்கு ஒருபுறம் அதிசயமாயிருக்கும். மற்றொரு பக்கம் பயமாயிருக்கும்.''

''ஏன் மாஸ்டர் அப்பிடி நினைக்கிறீங்கள்?'' என்று சட்டென்று கேட்டாள் சந்திரலேகா.

''இல்லை. இவர்களின் எதிர் காலத்தை நினைத்தால் பயமாக இருக்கிறது. எத்தனைபேர் உன்னுடைய அண்ணனைப்போல இளங் குருத்துகளாகவே கருகிப்போய் விட்டார்கள். ஒரு தேசத்துக்கு இளைஞர்களைவிட அற்புதமும் பெறுமதியும் மிக்க சொத்து வேறென்ன இருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது? இதை நினைத்து நினைத்துத்தான் எனக்குக் கவலை தாங்க முடிகிறதில்லை.''

சந்திரலேகாவின் முகத்தில் இலேசான புன்னகை. குட்டையாக வெட்டப்பட்டிருந்த தலைமயிரைத் தடவியவாறே சொன்னாள் :

''ஒரு நல்ல எதிர்காலத்துக்காகத்தான் நாங்கள் எமது எதிர்காலத்தை பலியிடுகிறோம் மாஸ்டர். மோசமான நிலைமைகளையெல்லாம் கைகட்டி உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருக்கிற இளமைப் பருவத்தை நான் ஒருபோதும் மதிக்கமாட்டேன். எங்களுக்கு சாவுக்கு அச்சமில்லை. ஏனென்றால் சாவு எங்களை வெல்ல முடியாது.''

அவளின் கண்களில் பொங்குகிற தீட்சண்யமும், முகத்தில் தவழ்ந்த இறுமாப்பும் அவளிடத்தே தனிக் கம்பீரமாக மிளிர்ந்ததை மாணிக்கவாசகம் உணர்ந்து பெருமிதங்கொண்டார்.

பிறகு அவனிடம், ''அதெல்லாம் சரி, உன்னுடைய அழகான கூந்தலை ஏன் இப்படி குட்டையாக வெட்டிக் கொண்டாய்?'' என்று கேட்டார் மாணிக்கவாசகம்.

அவள் தனது பிடரியைத் தடவிக்கொண்டே, ''எல்லாத்துக்கும் இந்த நீண்ட கூந்தல் இடைஞ்சலாக இருந்தது. இராணுவப் பயிற்சிக்காக நாங்க எல்லாருமே முடியை இப்படித்தான் ஒட்டக் கத்தரித்து விட்டோம்'' என்று வெகு சாதாரணமாகக் கூறினாள்.

''மாஸ்டர், நான் இனி எனது இடத்துக்குப் போய் விடவேணும். நான் அனுமதி கேட்டுக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைக்கு சாயந்தரம்போலே உங்களை வீட்டில் வந்து பார்க்கிறேன்.''

மறுநாள் எல்டாம்ஸ் ரோடு வளைவில் திரும்பிக் கொண்டிருந்த போது தனக்குப் பக்கத்தில் சர்ரென்று வந்த காரின் ஓசை கேட்டுத் திரும்பினார் மாணிக்க வாசகம். கார் அவருக்கு முன்னே போய் நின்றது. கதவைத் திறந்துகொண்டு ஆஜானுபாகுவான இளைஞன் ஒருவன் இறங்கி புன்னகையோடு அவரை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

மாணிக்கவாசகம் அவனை உற்றுப்பார்த்தார். முரளி. அவரது மாணவன். குளுகுளுவென்றிருந்தான். முன்னரை விட இப்போது நன்கு சிவத்திருந்தான். புன்னகையை அணிந்து தோன்றினான்.

''மாஸ்டர், என்னைத் தெரியுதோ?'' என்று அவன் அவரிடம் கேட்டான்.

''ஓ... முரளி... உன்னை மறப்பேனா? இப்பவும் முன்னைப் போலத்தான் இருக்கிறாயோ...?''

முரளியின் முகம் இலேசாகச் சிவந்தது.

''இல்லை மாஸ்டர்... இப்ப நான் அப்பிடி எல்லாம் இல்லை. மெடிக்கல் காலேஜில் மூன்றாம் வருஷத்தில் இருக்கிறேன்...''

''மெடிக்கல் காலேஜ்?'' அவரின் முகத்தில் ஆச்சரியம் மிதந்தது. எப்படி அது சாத்தியமாயிற்று என அவர் எண்ணியபோது அதற்குச் சரியாக அவனது பதில் வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இனக்கலவரம் முடிந்து இங்கே நிறையப்பேர் அகதிகளாக ஓடி வந்தனர். நாங்களெல்லாம் அப்பிடி வந்த ஆட்களில்லை. என்னுடைய ஃபாதருக்கும், இங்குள்ள மினிஸ்டருக்கும் ஏற்கனவே சினேகிதம். அவர்தான் அப்பாவை இங்கே வரச் சொல்லி, அப்பாவை இங்கே ஒரு பிளாஸ்டிக் பாக்டரியில் முதலீடு செய்ய வைத்தார். மினிஸ்டர் அங்கிள்தான் எனக்கு மெடிக்கல் காலேஜில் சீட் எடுத்துக் கொடுத்தார்... அதுவும் இலங்கையிலிருந்து வந்த அதிகளுக்கான 'கோட்டா' வுக்கான சீட்.''

அவனது முகத்தில் உற்சாகம் கரைபுரண்டது. கழுத்தில் புரண்ட சங்கிலியை இலேசாக வருடியபடி கூறிய அவனை மாணிக்கவாசகம் வெறுமையாகப் பார்த்தபடியே கேட்டார்:

''அதெல்லாம் சரி. அப்போ நீங்களெல்லாம் ஒரேடியாய் இங்கேயே தங்கப் போகிறீர்கள்?''

அவன் சிரித்தான்.

''என்ன மாஸ்டர் இது? இந்த பாக்டரிக்காக இங்கேயே உட்கார்ந்திருக்க முடியுமா? கொழும்பிலே கூட அப்பாவுக்கு அலுமினிய பாக்டரி ஒன்று இருக்குது. அங்கேயுள்ள பைனான்ஸ் மினிஸ்டர் அப்பாவோட காலேஜ் மேட். அவருடைய வற்புறுத்தலாலேதான் அப்பா அந்த பாக்டரியை நடத்துகிறார். ஆனால் அப்பாவுக்கு இதெல்லாவற்றையும் விட பெரிய இலட்சியம் ஒன்று இருக்கிறது.''

டோக்கியோவிலும், சிங்கப்பூரிலும், ஐரோப்பிய நாடுகளிலும் பறந்து திரிந்து விதவிதமான பாக்டரிகள் பற்றி அறிந்து அந்தத் தொழில் துறைகளில் முதலீடு செய்கிற அவனது தகப்பனுக்கு ஒரு லட்சியம்? மாணிக்கவாசகம் அதிசயமாக அவனைப் பார்த்தார்.

''என்ன லட்சியம்... ?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவர் சொல்லுவார். நீ நல்லா கவனமாகப் படித்து டாக்டராக வா. உன்னை நான் லண்டனுக்கு அனுப்பி எம்.டி.யும் அதற்கு மேலும் படிக்கச் செய்வேன். நவீன மருத்துவனாக நீ வரவேண்டும். அதுவரை எந்த விஷயத்தி லும் நீ தலையிடாதே. குறிப்பாக அரசியலில் இந்தப் பொடியன்களோடு மட்டும் நீ சேராதே. ஏனென்றால் பொடியன்கள் சண்டை போட்டு நிச்சயம் ஈழம் கிடைக்கும். அப்போ அங்கு உன்னைப்போலே திறமை யுள்ள டாக்டர்கள் தேவைப்படும். என்னைப்போல தொழில் அதிபர்களும் வேணும். அந்த நேரம் நீயும் நானும் அங்கே போய் ஒன்றாக இறங்கலாம். அதுதான் எனது கனவு என்று அப்பா அடிக்கடி சொல்லுவார்.''

மாணிக்கவாசகத்தின் மனதினுள்ளே அருவருப்பு சட் டென்று பொங்கிற்று.

''அப்பாவுக்கு தனது பிறந்த ஊரிலே நிறைய விருப் பம் இருக்குது. எல்லாப் பிரச்சினைகளும் முடிஞ்சபிறகு அங்கே போய்ப் பெரிய பாக்டரி ஒன்று உண்டாக்கவேணு மென்றதுதான் அவருடைய கனவு. அதெல்லாம் சரி மாஸ் டர், இந்தப் சண்டையிலே எங்களினுடைய பொடியன் களுக்கு வெற்றி எப்ப கிடைக்கும்?''

மாணிக்கவாசகத்தின் மனதில் எரிச்சல் சீறிக்கொண் டிருந்தது. தன்னைத் தணித்துக்கொண்டு கேட்டார்.

''அதெல்லாம் சரி எங்களுடைய இளைஞர்களை நீ சந்தித்துப் பேசிறதில்லையோ?''

''ஐயையோ, நான் சிலோன் ஆள் என்று இங்கே காண்பிக்கிறதே இல்லை. அதெல்லாம் எனக்கு விருப்பமும் இல்லை. அப்பா வேறே அதிலே கண்டிப்பா சொல்லியிருக் கிறார். அந்தக் கதைகள் எல்லாம் வேண்டாம் மாஸ்டர். வாருங்க காரிலயே போயிடலாம். சொல்ல மறந்திட்டேன் மாஸ்டர். இது என்னுடை கார்தான் மாஸ்டர். மாருதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுசுக்கி நியூமாடல். மினிஸ்டர் அங்கிள் ரெகமண்டேஸனிலே தான் இதுவும் சீக்கிரமே எனக்கு...''

மாணிக்கவாசகம் காறித் துப்பினார். பிறகு ஆத்திர மான குரலில் சொன்னார்.

''முரளி! உனக்கு கறையான் புற்றெடுக்க பாம்பு குடி கொண்ட கதை தெரியுமா?''

முரளிக்கு அவர் சொன்னது புரியவில்லை. தலையைச் சரித்து அவரைப் பார்த்தான். குழம்பிய முகத்தில், கணப் பொழுது கரைய புன்னகை உண்டாயிற்று அவனுக்கு.

''எனக்குத் தெரியல்லை மாஸ்டர்... அதைக் காரிலே ஏறிச் சொல்லுங்க...'' என்றான் அவன். அவர் மீண்டும் ஓரமாகக் காறித்துப்பினார்.

''ஆனாலும் அப்படி ஒரு கதை இனி நடக்காமல் இருக்க வேணும். அதுதான் அவசியம். நான் அதைத் தான் விரும்புகிறேன்... சரி நீ போ. நான் நடந்தே போய்விடுவேன்...''

மாணிக்கவாசகம் விறுவிறு வென்று அங்கிருந்து கிளம்பி னார். முரளிக்கு ஒன்றுமே புரியவில்லை. திகைத்துப் போய் நின்றான். பின்னர் காருக்குள் சென்று உட்கார்ந்து, காரை ஸ்டார்ட் செய்தவாறே காரிலிருந்து கண்ணாடி வழியாக மாணிக்கவாசகம் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்தான். திரும்பிப் பாராமல் வேகமாக நடந்து போய்க் கொண்டிருக்கிற அவரின் வார்த்தைகள் இப்போது தான் அவனது மனதினுள் என்னவோ செய்யத் தொடங்கின.

●1988

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுடம் போற்றுதும்

UNIVERSITY OF PERADENIYA
LIBRARY
464277
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுடம் போற்றுதும்

UNIVERSITY OF PERADENIYA
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செ. யோகநாதன்

கால நூற்றாண்டுக்கதிகமாக்
தமிழ்ப் படைப்பிலக்கியத்
துறையை வளப்படுத்திவரும்
செ. யோகநாதனின் குறுநாவல்களும்
சிறுகதைகளும் இந்தத்
தொகுதியில் அடங்கியுள்ளன.
மானுட மேன்மையே இவரது
எழுத்தின் ஆர்வமும், ஆசையும்.
சிறுகதை, குறுநாவல், நாவல்,
நவசினிமா, குழந்தை இலக்கியம்
என்ற துறைகளில் இவரது
பங்களிப்பு, அழுத்தமும் ஆரோக்கியமும்
விதைப்பது,

மொழி பெயர்ப்பில் ஆர்வம் கொண்டதால்
குழந்தைக் கதைகளோடு
கவிதைகளும், புதுப்பார்வையான
கதைகளும் தமிழுக்கு வருகை தந்தன

இலங்கை, தமிழக அரசுகளின்
விருதுகள் பெற்றவர். ஜெர்மன்,
ரஷ்யா, ஆங்கில மொழிகளில் தன்
கதைகளால் அறிமுகமானவர்
எட்டு மொழிகள் பேசுகின்ற குழந்தை
எழுத்தாளர்கள் பங்கு கொண்ட
மகாநாட்டில் (1989) தமிழக
அரசின் பிரதிநிதிகளில் ஒருவராக
பெங்களூரில் கலந்து கொண்டு கட்டுரை
சமர்ப்பித்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org